# கொங்குச் செல்வி

★

ஆசிரியர் :

கே. பழனிச்சாமிப்புலவர்

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS

★

வெளியிடுபவர்:

எஸ். ரத்னசாமி பி. ஏ.

திருப்பூர்.

பதிப்புரிமை பெற்றது.

M. I. P. PROJECT
Microfilmed.

விலை ரூபாய் மூன்று

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதித் தலைவர்
பேராசிரியர் உயர்திரு. அ. சிதம்பரநாதச்
செட்டியார் எம். ஏ. அவர்கள் தந்த

# முகவுரை.

திருவாளர், வித்துவான் கே. பழனிச்சாமி புலவரவர்களால் எழுதப்பெற்ற கொங்குச் செல்வி என்னும் நூலைப் படித்துப் பார்த்தேன். சேரமுனிவர், இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தின் தலைவியாகிய கண்ணகி என்னும் பத்தினித் தெய்வ வழிபாடு, செங்குட்டுவன் காலந்தொடங்கி இன்றளவும் கொங்கு நாட்டில் பரவி வளர்ந்த நிலைமையினைத் தெரிவிப்பது இந்நூலாகும்.

செங்குட்டுவன் செய்த பத்தினிக் கோட்ட விழாவில் கலந்துகொண்ட குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும், இலங்கைக் கயவாகு வேந்தனும், கண்ணகி தேவியாரை, வணங்கி, எங்கள் நாட்டில் எடுக்கும் கோவில்களிலும் இவ்வாறு எழுந்தருளி அருள் செய்தல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள் என்றும், அவ்வேண்டுகோட்கிணங்கிய கண்ணகியார், 'தந்தேன் வரம்' என்று அருளிச் செய்தனர் என்றும், சிலப்பதிகாரம் கூறுகின்றது. பத்தினித் தெய்வமாகிய கண்ணகியாரை, வணங்கி வேண்டியவருள், இளங்கோவடிகளால் முதல்வராகக் குறிக்கப் பெற்றவர் "குடகக் கொங்கரே" யாவர். இதனால் கண்ணகியார் வழிபாட்டில், கொங்கு நாட்டார்க்கிருந்த பேரன்பு இனிது புலப்படுகின்றது. அன்றியும் சிலப்பதிகாரம் வேட்டுவ வரியில் குறிக்கப்பட்ட மற்றொரு நிகழ்ச்சியும், இதனை வலியுறுத்துகின்றது. கொற்றவை விழாவில் தெய்வமுற்றெழுந்த சாலினி என்பாள் கவுந்தியடிகளுடன் ஆங்கு நின்ற கண்ணகியாரை நோக்கி அத்தேவியார் எல்லோராலும் தெய்வமாக வழிபடப் பெறும் எதிர்கால நிகழ்ச்சியைக் குறித்து,

" இவளோ, கொங்கச் செல்வி, குடமலையாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக் கொழுந்து
ஒரு மாமணியா யுலகிற் கோங்கிய
திருமாமணி "

எனப் பாராட்டியதாக இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். ஈண்டு, " இவளோ, கொங்கச் செல்வி குடமலையாட்டி " எனக் கண்ணகி பாராட்டப்படுதலை நோக்குங்கால் அவ்வம்மையாரைத் தெய்வமென வழிபட்டவருட் சிறப்புரிமை யுடையவர் கொங்குநாட்டவர்களே என்பதும், அதனால் கண்ணகியாருக்கு கோங்குச் செல்வி என்னும் பெயர் இளங்கோவடிகள் காலத்திலேயே சிறப்பாக வழங்கப் பெற்றதென்பதும், நன்கு விளங்கும். இவ்வுண்மை வரலாற்றைச் " கொங்குச் செல்வி " என்னும் இந்நூல் நன்கு விளக்குகின்றது.

செங்குட்டுவன் காலத்துத் தோன்றித் தமிழ் நாடெங்கணும், இலங்கையிலும் பரவிய கண்ணகியார் வழிபாடு இக்காலத்தில், மாரியம்மை காளி முதலிய பெயர் வேறுபாடுகளுடன், தமிழ் நாட்டின், சிற்சில இடங்களில் நிகழ்கின்ற செய்தியினை ஆராய்ச்சியாளர் நன்குணர்வர். கொங்கு நாட்டில், கண்ணகியார்க்குச் சிறப்பு முறையில் நிறுவப் பெற்ற பத்தினிக் கோயில்கள் தொன்று தொட்டு இன்றளவும் பழைய சிறப்புக் குன்றாது செல்வி கோயில்களாக கொங்கு நாட்டிலுள்ள வேளிர்களாலும், காணியாட்சிக்குரிய பிற பழங்குடி மக்களாலும், உரிமையுடன் பேணிப் போற்றப் பெறுஞ் சீர்த்தியினைக் கொங்கு நாட்டிற் பிறந்து, செவி வழியாகவும் பிற்காலச் சிறு நூல்கள் வாயிலாகவும், வழங்கப் பட்டு வரும் கொங்கு நாட்டுச் செய்திகளை யெல்லாம் நன்குணர்ந்த திருவாளர் பழனிச்சாமிப் புலவர் அவர்கள் இந்நூல் வாயிலாக வெளியிட்டமை பெரிதும் பாராட்டுதற்குரியதாகும். தாம் சொல்லக் கருதிய கண்ணகியார் வழிபாட்டொடு தம் ஆராய்ச்சியால் கண்டுணர்ந்த புதுச் செய்திகளைப் பழைய தமிழிலக்கியங்களுடன் தொடர்பு படுத்த ஆசிரியர் முற்பட்டிருப்பது ஆராய்ச்சியாளர்களால் ஊன்றி ஆராய்தற்குரியதாகும். கொங்கு நாட்டில் பிற்காலத்தில் தோன்றி

வழங்கும் நாட்டுப் பாடல்களையும் செவிவழிச் செய்திகளையும் ஆதரவாகக் கொண்டு இவ்வாசிரியர் கொங்கு வேளிர் வரலாறுகளையும் பிற வரலாறுகளையும் அறிய முற்பட்டிருக்கின்றனர். அவை ஆராய்தற்கு உரியன. இப்புத்தகத்தில் உள்ள அச்சுப்பிழைகள் அடுத்தபதிப்பில் திருத்தமுறும் என்று நம்புகிறேன்.

கொங்கு நாடும் கண்ணகி வழிபாடும் என்ற பொருள் பற்றி அறிய விரும்புவோர்க்கு இந்நூல் பெரிதும் உதவியாகும் எனக் கருதுகிறேன்.

அண்ணாமலைநகர்
20—12—1948

அ. சிதம்பரநாதன்.

# நூலாசிரியர் முன்னுரை.

கொங்குநாடு என்னும் இந்த நாடு மிகவும் புராதனமான தோர் நாடு. புறநானூறு, அகநானூறு, பதிற்றுப் பத்து, பத்துப் பாட்டு முதலிய சங்க இலக்கியங்களில் இந்த நாட்டின்வரலாறுகள் மிகவும் போற்றப்படுகின்றன. தென் நாட்டுக் கடல் கோளின் போது அந்த நாட்டினின்றும் போந்து, பாண்டி நாட்டார் வந்து தங்குவதற்கும், அக்காலத்தில் வந்த சோழ நாட்டார், கிழக்குக் கடல் வரையிலும் நாடு வளம்படுத்திக் குடியேறிப் பெருநிலை எய்தும் வரையிலும், அவர்கள் வாழ்வு செய்யும் இடமாகவும் இந்த நாடு இருந்தது என்றால் அது ஒரு சிறிதும் மிகையாகாது. சோழ மன்னர்களும், அவர்களைச் சார்ந்த குறுநில மன்னர்களும், சேரமன்னரும், அவரது பகுதியரசரும், பாண்டி மன்னரும், அவரது புத்திர வர்க்கத்தவரும், பெருவாழ்வும், பெருநிலையும் அடைந்து வாழ்வதற்கு ஆதாரமாக இருந்தது இந்த நல்நாடு என்றால், அதனைப் புதியது என்று வியந்து கூறுவாரும் தற்பொழுது உண்டு. தென் நாட்டுக் கடல் கோளின்பின், பாண்டிய புத்திர வர்க்கத்தார் இந்நாட்டின் தென்புறமும், சோழரது பின்னவர் கிழக்குப் பகுதியிலும், சேரமன்னர்கள் வடபகுதியிலும், அரசு புரிந்து வாழ்ந்தநிலை மறுக்கவே முடியாது. உறந்தை என்று பெயர் கொண்ட பல நல்லூர்களும், கூடல் என்ற பெயரால் விளங்கிய பேரூர்களும், வஞ்சி என்று கூறத் தகும் சீரூர்களும் பின்னி, நெருங்கி, இன்னும் இருந்து வருதல், முன்னைய நாளில், மும்மண்டிலத்தாரும் ஒரு காலத்தில், இந்த மண்டிலத்தில் வாழ்ந்தனர் என்பதைக் காட்டப் போதுமானதாகும். கடலுக்குப் பயந்தார் யாரும், மலை சூழ்ந்த இடத்தில் வந்து புகுந்து வாழுதல் இயல்பாகும் அன்றோ! இங்ஙனம் மும்மண்டிலத்தாரும், கொங்கு என்னும் இவ்வொரு மண்டிலத்தில் கூடியிருந்த நிலையால், மூன்று நாட்டுச் சரிதங்களும், இந்த ஒரு நாட்டில் கலந்து நிற்பதாயின. மும்மண்டிலப் புலவரும், இந்த ஒரு மண்டலத்தில் வந்தே, சேர, சோழ, பாண்டிய அர

சரையும், அவரது வழி வந்தோரையும், பாடுவாராயினர். இவைகள் யாவும் சங்க காலத்துக்கு முன்னரே ஏற்பட்டன வாகும்.

சங்க காலத்திற்கு முன்னரே ஏற்பட்ட இந்தத் தொடர் பால், கொங்கு மண்டிலத்துச் சரிதம், சோழ மண்டிலம், பாண்டி மண்டிலம் ஆகிய இவ்விரு மண்டிலத்தார்க்கும் உரிய தாகும் தொடர்பைப் பெற்று விட்டது. மும்மண்டில வள் ளல்களும், சிற்றரசர்களும் இவ்வொரு மண்டிலத்து வாழ்ந்த அக்காலத்து, அவர்களைப் பாடின புலவர்கள், இம்மண்டிலத் தில் அவர்கள் வாழ்ந்த இடத்தை அவர்கள் நாடாகவும் அவர்கள் வாழ்ந்த ஊரை அந்த நாட்டுப் பேரூராகவும் வைத் துப் பாடிப் போந்தனர். அதனால் அக்காலத்துப் பாடலின் உண்மையை அறியாத நம்மவர், தற்பொழுதைய நாட்டின் பிரிவை நினைவில் வைத்த நிலையில், சரிதம் எழுதத் தொடங்கி யிடர்ப்படுகின்றனர்.

காவிரிநதி பாய்ந்து வரும் கரையோரங்களில் வாழ்ந்த ஆதிகாலச் சோழ அரசர்கள், கொங்கு நாட்டில் அந்த நதிக் கரையிலேயே ஊர்களை அமைத்து வாழ்ந்தனர். அவ்வூருக்கு அவர்கள் உறையூர் எனப் பெயரிட்டனர். அத்தகைய உறையூர்கள் பல, இன்னும் இந்த நாட்டில் இருக்கின்றன. உதாரணமாகக் கூற வேண்டுமாயின், தற்பொழுது ஈரோடு என்ற பெயரால் அழைக்கப்படும் நகரத்துக்கு அந்த நாளில் இருங்கோழி (பெரிய உறையூர்) என்ற பெயர் வழங்கிய துண்டு. இதனைப் பூந்துறை நாட்டுக் குறவஞ்சியால் அறிய லாம். இன்னோரன்ன உறையூர்கள் பல,கோழி என்ற பெயரி லும், உறந்தை என்ற பெயரிலும் மிகுதியும் இருந்தன.

"நொச்சி வேலித் தித்தன் உறந்தை" என்று சங்க இலக்கியங்களில் வரும் பொழுது தற்பொழுதைய சரித்திர ஆசிரியர்கள், திருச்சிராப்பள்ளி யருகில் உள்ள உறையூரா கவே கருதி, இடர்ப்படுகின்றனர். ஈங்குள்ள கொல்லி மலை யருகில் நகரமைத்து வாழ்ந்த சோழர்களைப் பாடிய புலவர்கள் இப்பகுதிச் சோழர்களின் மலை கொல்லி மலை என்றே பாடுவர்,

கொல்லி மலை ஓரிக்குச் சொந்த மென்று சங்க இலக்கியங்கள் குறிப்பதும் இவ்வண்ணமே யாகும் "கொல்லி மலைத் தேன் சொரியும் கொற்றவா நீ முனிந்தால் இல்லையோ எங்கட்கிடம்" என்று கம்பர் குலோத்துங்க மன்னனைப் பாடினதுவும், அம்மன்னன், இந்த நாட்டில் வாழ்ந்த பெருமை நோக்கியே என்று எண்ணுக. சோழ நாட்டார் முன்னொரு காலத்தில் இந்த நாட்டில் தங்கியிருந்தே பின்னர்க் கிழக்குப் பகுதியில் குடி புகுந்தார்கள். அவர்கள் வாழ்ந்து பெருகுவதற்கு ஆதாரமாக இருந்தது இந்நாடு என்றது என் கருத்து. ஆதாரம் வேண்டுமானால் கலிங்கத்துப் பரணியில் காணலாம். அங்குக் கூறியிருக்கும் ராஜ பாரம்பரிய முறையைச் சற்றுக் கூர்ந்து நோக்குங்கள். "ராஜகேசரி புரந்து பரகேசரிகளாம் இருவாரராணை புலியாணை என நின்ற அதுவும்" என்றக் கலிங்கத்துப்பரணித் தொடரை நினையுங்கள். 'ராஜகேசரியும் நாடு புரந்தார்கள். பரகேசரிகளும் அரசு செலுத்தினார்கள்; அவர்கள் இருவர் ஆணையும் புலி முத்திரை ஆணையாக இருந்தது' என்ற கருத்தின் நோக்கம் யாது? கல்லெழுத்துக்களில் வரும் ராஜகேசரி என்ற தொடரையும், கோப்பரகேசரி என்று வரும் தொடரையும் கவனித்துப் பார்த்தல் நலந்தருவதாம்.

இராஜகேசரிகள், பெரு மன்னர்கள்; பரகேசரிகள் அவர் பரம்பரையில் வந்த காணியாளர்கள். இவர்கள் வாழ்ந்த இடங்களைப் பொதுவாக ஆராய்ந்ததன்றிச் சிறப்பு நோக்காக ஆராய்ந்தார் எவருமிலராவர். ராஜ கேசரிகளாவார் கிழக்குப் பகுதியில் அரசு புரிந்தார்கள். பரகேசரிகள் அவரது ஆணை கொண்டு இந்த நாட்டின் பகுதியில் வாழ்ந்து குறும்பு செலுத்தினார்கள். இவர்களும் சோழர்கள்; அவர்களும் சோழர்கள்; இவ்வித நிலையில் அமைந்து நின்ற காரணத்தால் எல்லா நாடும் சோழர் நாடாகவே கருதப்படும் நிலையில் அமைந்து விட்டன. பாண்டி மன்னர் நிலையும், சேர மன்னர் நிலையும் இவ்வண்ணமே ஆயின.

இம்முறையில் மூன்று நாட்டுச் சரித்திரங்களும் கலந்து கிடக்கும் இந்த நாட்டின் சிறப்பியலை அறியாத ஒரு சிலர்

சோழர் சரிதம் வரும் பொழுது அதனைத் தற்பொழுதைய, சோழ நாட்டிலும், பாண்டியர் சரிதம் வரும் பொழுது அதனைத் தற்பொழுதைய பாண்டி நாட்டிலும் தேடி மயங்கு கின்றனர். ஒரு சில அறிஞர், ஒரு நாட்டு நிகழ்ச்சியை வேண்டுமென்றே மற்றொரு நாட்டில் வைத்துப் போய் விடுகின்றனர். அவர், உலகம் தெரிந்த அறிஞராயிருப்பின், அவர் சொன்னதே உண்மையும் உறுதியும் ஆய் விடுகின்றது. உயர் திரு. மகோ மகோபாத்யாய டாக்டர், உ. வெ. சாமிநாத அய்யர் அவர்கள் மிகவும் பெரியவர்கள். தமிழ் நாடு முழுதும் நன்கு தெரிந்த அறிஞர். தமிழ் நூல்களைத் தமிழர்கள் அறிந்து கொள்ளும்படி செய்த பெரு முயற்சியாளர். அவர் கள் கொங்கு நாட்டுத்திருப்போர்ப் புறத்து நிகழ்ந்த சரிதம் ஒன்றை, தற்பொழுதைய சோழ நாட்டுத் திருப்பரம் பயத்தில் வைத்தும், கொங்கு நாட்டுக் குடவாயிலைத் தற்பொழுதைய சோழ நாட்டிலுள்ள குட வாசலாக வைத்தும் தமது புற நானூற்றுக் குறிப்பில் எழுதியிருக்கின்றனர். இச் சரிதம் கொங்கு நாட்டின் கண் நிகழ்ந்தது என்று இங்குள் ளார் கூறுவார்களேயானால், தமிழகத்தார் நம்புதல் கூடுமா? இந்த நிகழ்ச்சி இவ்வாறு மாறுபடுவதன் காரணம், சோழன் செங்கண்ணான் சரிதம் விரவி வருதலும், சோழர்நாடு அந்தக் காலத்திலும், கிழக்கில் இருந்தது என்ற எண்ணமும் அங்குத் திரும்பரம்பயமும், குட வாசல் என்ற ஊரும் இருப்பதுமே யாகும்.

இவ்வண்ணமே சரித்திரப் பேராசிரியரும், தமிழறிஞரும் கொங்கு நாட்டு நிகழ்ந்த சரித்திரங்களை தற்பொழுதைய சோழர் நாட்டிலும், பாண்டி நாட்டிலும் வைத்து எழுதிப் போன காரணத்தால், இந்த நாட்டவர், இங்கு நிகழ்ந்த சரித்திரத்தையும் வெளியிட அஞ்சி வாளா விருந்தனர்.

இன்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர், திருச்செங் கோட்டில் வாழ்ந்த உயர்திரு, முத்துசாமிக் கோனூர் அவர்கள், முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த கார்மேகக் கவிஞர் என்பவரால் இயற்றப்பட்டதாகிய கொங்கு மண்டில சரிதம் என்றதோர் நூலைச் சில வகையான ஆராய்ச்சிக் குறிப்பு

களுடன் வெளியிட்டு உபகரித்தார்கள். அந்த உபகாரிக்கு நம் கொங்குநாடும் தமிழகமும் மிகவும் கடமைப்பட்டுள்ளன.

கொங்கு மலர் என்ற பத்திரிகை ஒன்று கொங்குநாடு சம்பந்தமான சில செய்திகளை அறிவிப்பதாயிற்று. அப்பத்திரிகையின் சேவை போற்றதற்குரியதாகும். இந்த நாட்டைப் பற்றிய சரிதக் குறிப்பை அறிந்து கொள்ளுதற்கு ஒரு சிலர், கோயமுத்தூர் ஜில்லா, சேலம் ஜில்லா கெஜட்டியரில் மேலைநாட்டார் ஒருவர் எழுதிய குறிப்பை ஆதாரமாக வைத்துப் பலவற்றை எழுதியிருக்கின்றனர். அது சரியான முறையில் அமைந்ததல்ல. அந்த நூலும், கெஜட்டியரும், இந்த நாட்டின் நிலையினை நன்கு அறிவிப்பனவன்று.

தற்பொழுது தமிழ் நாட்டிலுள்ள அறிஞர்களில் ஒரு சிலரைப் பார்த்துக் கொங்குநாட்டைப் பற்றிய ஆராய்ச்சிகள் எவைகளையேனும் தாங்கள் செய்திருக்கிறீர்களா என்றால், அதற்கு அவர்கள் "நீரெல்லாம் சேற்று நாற்றம்" என்ற பாடலை ஆதாரங்காட்டிக் கம்பன் இகழ்ந்த உங்கள் நாட்டை யாங்கள் கனவிலும் கருதோம் என்கின்றனர். இத்தகைய நிலையில் கொங்குநாடு இருப்பது, பிறர் இந்த நாட்டைப்பற்றி நன்கு அறிந்துகொள்ளாத நிலையதுதான் என்பதே எனது கருத்து.

பிற நாட்டவர்க்குச் சரித்திரச் செல்வத்தை நல்கும் வளமிக்க இந்த நாட்டுச் சரிதத்தை இந்த நாட்டில் பிறந்த எளியேன் எழுதுதல் கடமையும் உரிமையும் ஆகும் என்று பலநாளாக எண்ணினேன். அதற்குரிய ஆதாரங்களையும் தேடினேன். கிடைத்தவைகளின் துணை, என்னை இப்பணியில் ஈடுபடச் செய்தது. சரிதமும் எழுதினேன்: இச்சரிதம் பல நூறு ஆண்டுகளாய் மறைந்துகிடந்த பத்தினி தேவியின் வணக்கத்தை ஞாபகம் ஊட்டுகின்றது. செங்குட்டுவ மன்னன் நிலைபெறுத்திய பத்தினி தேவியின் படிவம் இதுதான் என்பதை இந்த நூலில் பலதிறச் சான்றுகளால் விளக்கியிருக்கின்றேன். சேரரது வஞ்சிமாபுரி சேலந்தான் என்பதனையும், நல்ல முறையில் எடுத்துக் காட்டியிருக்கின்றேன். இந்த இடத்தில் அறிஞர்கள் பலரும் எனது கருத்துக்கு மாறுபடுவர் என்பதனை

யான் நன்கு அறிவேன். "சேரர் வஞ்சி" பற்றி முன்னமேயே இரண்டு மாறுபட்ட கருத்துக்கள் தமிழ் நாட்டில் உலவு கின்றன. இவ்விரு சாரரும், ஒப்புக்கொள்ளாத நிலையது எனது கருத்து. எனினும் இதுதான் உண்மை. உண்மையைக் கூறும்போது, அபிப்பிராய பேதமுடையார் வாதமிட்டு அவ் வுண்மையை மறைக்க முயலுவார்கள். அம்முயற்சிகள் இவ் வுண்மையின் முன் நில்லாது மறைவது நிச்சயம். அங்ஙனம் உண்மையென்று ஒப்புக்கொள்ளாத நிலையில் ஆராய்ச்சியாளர் சிலர் இந்த நாட்டுக்குரிய சரிதத்தை ஆராய்வதற்கு வருவார் களானால், அவ்வாராய்ச்சிக்கு மூலகாரணமாக இருந்த நிலையில் இந்த நாட்டின் உண்மைச் சரிதத்தைக் காணும் வாய்ப்பாவது நிச்சயமாக வாய்க்கும் என்ற துணிவு கொண்டே யாரும் மேற்கொள்ளாத நிலையில் இந்த நூலைச் செய்ய லானேன்.

இந்த நாட்டில் சேர, சோழ, பாண்டியர் அரசைப் போற்றி, அவர்களால், காவிதி, கிள்ளி, ஏனாதி, குடுமி என்னும் பட்டங்களைப் பெற்ற பழைய பட்டவர்த்தனர்கள் குடும்பங் கள் இன்னும் இருக்கின்றன. அவர்களது பட்டயங்கள், சரிதக் குறிப்புகள் துணைக்கொண்டு எழுதப்பெற்ற சரிதங்கள் கற்போர் மனதை மகிழ்விக்கும் தகையில் இந்த நூலில் இடம் பெறுகின்றன. தொல்காப்பியத்தில் வரும், குடிப் பெயர் களைத் தமது குடிப் பெயராகக் கொண்டு வாழும் தொன்முதிர் வேளிர்களின் சரிதமும் பட்டயமும் தமிழ் நாட்டவர் மனதை அள்ளும் வழியில் இந்த நூலில் வேளிர் வரலாற்றுப் பகுதி களில் அமைத்திருக்கின்றேன். தொல்காப்பியத்துக் கண்ட தோழியர் முறைமைக்குரிய இலக்கணத்திற்கு உதாரணம் இந்த நாட்டு வேளிர் வீடுகளில் அன்றித் தமிழகத்தில் வேறெங்கும் காண்டல் இயலாது. ஒவ்வோராண்டும், இந்த நாட்டுக் காணியாளர்கள் தமது காணி முறைமையை அம்பிட்டுப் போற்றும் விழா ஒவ்வோராண்டு நவராத்திரியில் தசமி நாளன்று நடைபெறல் உண்டு. இவை யாவும், இந்த நாட்டுப் பண்டைப் பெருமைக்கு இலக்கியங்களாகும்.

இந்த நூலுக்கு ஆதாரமாக உள்ள சான்றுகள், சிலப்பதிகாரம், புறநானூறு, கொங்குநாட்டுக் காணிப் பாடல்கள், சேரமான் மாந்தரன் மெய்க் கீர்த்தி, நாட்டுக் குற வஞ்சிகள், தாம்பிர சாசனங்கள், திருச்செங்கோட்டுக் கோவில் கல்லெழுத்துக்கள் முதலியனவாகும்.

இந்த நூலில், யான் தெரிந்துகொண்ட சில ஊர்களுக்குரிய காணி நிலைகளை மாத்திரமே எழுதியிருக்கின்றேன். தெரியாத ஊரும் காணியும் பிறவும் நிறைய இருக்கலாம். அவைகளை இந்த நூலைக் கண்ணுறும் அன்பர்கள் அறிவித்தால் அடுத்த பதிப்பில் சேர்த்துக்கொள்ள முயலுவேன்.

யான் எனக்குக் கிடைத்த குறுகிய கால ஒய்வையே துணைக்கொண்டு இந்தப் பணியில் ஈடுபட்டேன். ஆதலால், தவறுகள் பல இருத்தலுங்கூடும். இந்த நூலுள் அச்சுப் பிழைகள் பல நேர்ந்துவிட்டன. இவைகளை அறிஞர்களும் அன்பர்களும் பாராட்டாமல் இந்த நூலைப் போற்றிப் படித்து ஆதரவு செய்யும்படி வேண்டுகிறேன்.

நன்றியுரை.

யாதொன்றும் அறியாத என்னை, "தமிழாசிரியன்" என்ற நிலையில் வைக்கும் அறிவையும் பிறவற்றையும் தந்து போற்றிய பெருமை, கொற்கை நகர ஆதீன அதிபதி (சங்கரண்டாம்பாளையம்) வேணுடையார் அவர்களுக்கே உரியதாகும். அந்தப் பெருமகனார் அவர்களது அன்பையும் ஆதரவையும் யான் என்றும் மறவேன். இந்த நூலைச் செய்யும் வழியில் எனக்கு ஊக்கம்காட்டித் தூண்டி ஆக்கம் அளித்த பெருமை, பழைய கோட்டைப் பட்டக்காரர் உத்தமக் காமிண்ட நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் அவர்களுக்கே உரியதாகும். அப்பெருந்தகையார் அவர்கள் காட்டிய அன்பு என்றும் மறக்க முடியாததாகும். இந்த நூலுக்குப் பல வழியிலும் உபகரித்த கொங்குவேளிர் பெருமக்கள் பலர் தம் அன்பும் ஆதரவும் என்னால் மறக்க முடியாதன. "செல்வி" நல்ல முறையில் வளர்ச்சியுடைய காணிப் பாடல்களும்,

நாட்டுக் குற வஞ்சிகளும் பிற ஆதாரங்களும் தந்து போற்றிய புலவர் பெருமக்கள் அன்புக்கு யான் பெரிதும் கடமை பூண்டவன். இந்த நூலைத் தங்கள் தந்தையார் ஞாபகார்த்தமாக வெளியீடு செய்க என்று மிகவும் உபகரித்த ஊதியூர் கிராமத்தலைவரும் தாராபுரம் தாலூக்காக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரும் ஆகிய குள்ளம்பாளையம் உயர்திரு. K. S. நடராஜக் கவுண்டர் அவர்கள் ஆதரவு மிகவும் போற்றுதற்குரியது. இந்த நூலை வெளியிடுதல் கொங்கு நாட்டில் பிறந்த தமக்குக் கடமையாம் என்பதை யுணர்ந்து நூல் வெளியீட்டைத் தம்முடையதாக்கி உபகரித்த, திருப்பூர்ப் பஞ்சு வியாபாரியும், கொங்கு வேளிர் மரபுக்கோர் திலகமும் ஆன வடுகபாளையம் உயர்திரு S. இரத்தினசாமிக் கவுண்டர் B. A. அவர்கள் ஆதரவை யான் எழுமையும் மறவேன். இந்த நூலை நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த கோவைப் புதுமலர் அச்சகத்தார் அன்பை யான் என்றும் போற்றக் கடமைப் பட்டவன். இத்துணை நன்மைகளையும் தோன்றாத் துணையாய் இருந்து போற்றிய இறைவனது பேரருட்டிறன் என்றும் என்னுள்ளத்தில் நின்று நிலை பெறுவதாகுக. வாழ்க தமிழ்மொழி!

(கொற்கைக் கவியரசு)

திருப்பூர்,
5—1—'49.

வித்வான் K. பழனிச்சாமி.

திருநெல்வேலி இந்து காலேஜ் பேராசிரியராகிய ராவ்சாகிப்

கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் எழுதிய

## அணிந்துரை.

திருமாபத்தினி அல்லது பத்தினிதேவி என்று வழிபடப் பெறும் கண்ணகி வரலாறு, தமிழர் நன்கறிந்த ஒன்றே. கற்பரசியாய கண்ணகியைப் பத்தினித் தெய்வமாகக் கொண்டு கோயிலெடுத்து வழிபட்டவன் சேரன் செங்குட்டுவன். பத்தினி வழிபாடு பல நாடுகளிலும் பரவுவதற்கு அவனே காரணம் ஆவான். அதன் நிமித்தம் அவன் மேற்கொண்ட இமயப் படையெடுப்பும் நாம் அறிந்ததே.

கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளைத் துணைக்கொண்டு, உறையூர் நீங்கி, மதுரை செல்லும் வழியிலே ஓர் நாள் வேடுவர் ஊரிலே உள்ள துர்க்கை கோவிலில் தங்கினர். அப்போது வேடுவரும், அவர் மகளிரும், துர்க்கைக்கு விழாவெடுத்து, வரிக்கூத்து ஆடினர். கூத்தின் இடையிலே, காளியின் ஆவேசங்கொண்ட சாலினி என்பவள், அங்கே கோவலனுடன் ஒதுங்கியிருந்த கண்ணகியை நோக்கி,

"இவளோ,
கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென் தமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமாமணி"

என்று பாராட்டினாள். இது, சிலப்பதிகாரம் தெரிவிக்கும் செய்தி. தமிழகத்தும் பிற நாடுகளிலும் தெய்வமாகக் கொண்டாடப் பெறும் சிறப்பு, கண்ணகிக்குப் பின் நிகழப் போவதைச் சாலினி முன்னறிந்து சொன்னாள் என்பது, மேலே கண்ட வரிகளின் கருத்து.

(கோவலன் கொல்லப்பட்டதால்)

" அன்று தொட்டுப் பாண்டி நாடு மழைவறங் கூர்ந்து வறுமை எய்தி வெப்பு நோயுங் குருவுந் தொடர, கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன், நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று, களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழை பெய்து நோயுந்துன்பமும் நீங்கியது "

" அது கேட்டுக் கொங்கிளங்கோசர், தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழை தொழில் என்றும் மாருதாயிற்று. "

" அது கேட்டுக் கடல்சூழ் இலங்கைக்கயவாகு........... ஆடித்திங்கள் அகவையின் ஆங்கோர், பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப, மழை வீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று "

" அது கேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து ........பத்தினிக் கோட்டம் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே."

## சில உரை பெறு கட்டுரை

நாடெங்கும் இவ்வாறு வழிபடப் பெற்ற பத்தினிதேவி யைக் காளி அம்சமாகவே கொண்டு பிற்காலத்தவர் கதை வழங்கினர். வட்டபுல அம்மனாகவும், மலையாள பகவதியாக வும் கொங்கச் செல்வியாகவும் கண்ணகி வழிபடப் பெற்ருள். மேலே கொடுத்த " கொங்கச் செல்வி குடமலை யாட்டி என்ற வரிகளுக்கு அரும்பதவுரைகாரர், மேற்பட்டு இவளைத் தெய்வ மாகக் கொண்டாடிய இடம் கூறினமையாலே இவள் துர்க்கையாகவே பிறந்தாள் என்று எழுதுகிருர். அதனால் அவ்வுரைகாரர் காலத்திலேயே காளியம்சமே கண்ணகி என்ற நம்பிக்கை நிலவியது என்று அறிகின்ருேம்.

சிலப்பதிகார உரை பெறு கட்டுரையில், கொங்கிளங் கோசர், தங்கள் நாட்டகத்தே......என்ற பகுதியால் கொங்கு மண்டிலத்து இளங்கோவாகிய கோசரும் தாங்கள் தாங்கள் பகுத்துக் கொண்டு ஆளும் சிறு நாடுகளினிடத்தே வீர

பத்தினிக்கு கோயில் எடுத்து விழாக் கொண்டாடினர் என்று அறிகின்றோம். இளங்கோசர் என்பதற்கு இளங்கோவாகிய கோசர் என்று அடியார்க்கு நல்லார் பொருள் உரைத்தார். இந்த இளங்கோக்கள் கொங்கு நாட்டுக் கோச்சேரர்க்குத் தம்பியராய்த் தாய உரிமை எய்தினராவார். மூவர் கோவையும் மூவிளங்கோவையும் என்ற ஔவை பாடலை அறிந்தால் கோவேந்தர் தம்பியர், இளங்கோக்கள் என்பது புலனுகாமல் போகாது. கோச்சேரன் செங்குட்டுவன் தம்பி இளங்கோ எனப் பட்டார் அல்லவா? இளங்கோசர்—அதாவது கோச் சேரர் தம்பியராகிய இளங்கோக்கள், தங்கள் தங்கள் நாட்டகத்தே கண்ணகிக்கு கோயில் எடுத்தனர். என்றதனுல், இளங்கோசர் பலராதலும் கோச் சேரர் கீழடங்கி இவர்கள் ஆளும் சிறுநாடு பலவாதலும், பெறப்படும். வேளிர்கள் என்றது, இவர்களைத்தான். வேளிராவார், காணியாளர்; காணியாளர்களாவார் சாமந்தர்; சாமந்தராவார்; சிற்றரசர்; சிற்றரசாளார் விழ்குடியுழவர். இந்த வேளிர்கள் ஆளுகையிலமைந்த சிறு நாடுகள் (24) பல சேர்ந்ததே கொங்கு மண்டிலம். அது, சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களும், கரூர், பழனி தாலூக்காக்களும், உள்ளடங்கிய பெரு நிலப்பரப்பு; கொங்கன் என்ற பெயருடைய சேரனுல் ஆளப்பட்டது ஆதலின் அது, கொங்கு என்று வழங்கப் பட்டது என்பர் கச்சியப்ப முனிவர். முற்காலத்தில் சேர நாட்டின் உட் பகுதியாய்த் திகழ்ந்த அது, பிற்காலத்திலே தன் பெயரே கொண்டு பெருகியது.

கொங்கு நாட்டிலே இளங்கோக்களாகிய கோச் சேரர் தம்பியர், பத்தினித் தெய்வத்துக்கு கோவில் எடுத்து வழிபட்ட வரலாறு; அந்த வழிபாட்டு முறை; தலைமுறை தலைமுறையாக நடந்து வருவதற்கு அவர் வகுத்த திட்டங்கள் பிறவற்றை நண்பர், பழனிச்சாமிப் புலவரவர்கள் கொங்குச் செல்வி என்ற இந்த நூலிலே ஆராய்கிருர்கள். முடி வேந்தராகிய சேர, பாண்டிய, சோழருள்ளும். குடதிசையாண்ட சேரர் குலத்திலே பிறந்தோரது அறன், ஆண்மை, திறன்களும், அவரது பழவிறல் மூதூர்களின் பண்பு மேம்பாடுகளும், அவ்வூர்களிலே மலிந்த விழாக்களும், செல்வச் செழிப்புகளும், இந்த நூலிலே விளக்கம் பெறுகின்றன.

சங்ககாலம் எங்கே! நமது தலைமுறை எங்கே! இடையே இரண்டாயிரம் ஆண்டு கழிந்தன. இந்தக் கால கதியிலே மலர்ந்து மாய்ந்த சாம்ராஜ்யங்கள் எத்தனை? விளங்கி வீழ்ந்த வேந்தர்கள் எத்தனை! துலங்கித் தூர்ந்த நகரங்கள் எத்தனை! என்றாலும் சங்க காலத் தமிழரின் சந்ததியராய் இன்றைய தமிழ் நாட்டிலே வாழ்பவர் யார்? அவர் கொங்கு வேளிர் தாம் என்பதைப் புலவரவர்கள் காய்தல் உவத்தல் இன்றி இந்த நூலிலே ஆய்கின்றார்கள்.

இது ஒரு சிறந்த ஆராய்ச்சி நூல். இந்த ஆராய்ச்சியை நிகழ்த்துதற்குச் சாதனங்களான ஆசிரியருடைய புலமை நடு நிலைமைகளைப் போற்றுகின்றோம். ஆசிரியரவர்கள் கொங்குப் புலவர் மரபைச் சார்ந்தவர்கள். இந்தப் புலவர் மரபினர், கொங்குநாட்டுச் சரிதம் கலாசாரங்களைப் பரம்பரையாகவே பாதுகாத்து வருகின்றனர். இந்த மரபிலே வந்த பழனிச்சாமி அவர்கள் பாரம்பரியமாகத் தமக்குக் கிடைத்த சம்பத்தை, அரிதில் முயன்று தாம் தேடிய செல்வத்தால் பெருக்கி இந்த நூலை ஆக்கியிருக்கின்றார்கள். இதன்மூலம் புலவரவர்கள், கொங்கு வேளிர்களுடைய குலம், குடிமை, பண்பாடுகளைக் கொஙகர் அல்லாத பிற தமிழர் அறிதற்கு உதவுகின்றார்கள். இந்த உதவி எத்துணை அவசியம் என்பதைக் கொங்கு நாட்டுக்கு வெளியே வாழ்கின்ற என்போன்றார் உணர்வர். ஆதலின் இந்த நூலை மகிழ்ந்து நான் வரவேற்பதுடன் இது போன்ற நூல்களை முயன்று வெளியிடுமாறு புலவரவர்களை வேண்டுகிறேன். வேண்டுகோள் விடுப்பது எளிது; அதை முடிப்பவர்தான் அறிவர் அதன் சிரமத்தை. காகிதமோ கிராக்கி; கிடைப்பதரிது. அச்சுக்கூலி நினைக்கவே அச்சம். சங்கடங்களை யெல்லாம் சமாளித்துப் புஸ்தகத்தைக் கொண்டு வந்தால் அதைத் தீண்டுவார் இல்லை. புலமையும் ஆராய்ச்சி யும் பொதிந்து கிடப்பதால் தற்பொழுதைய வாசகர், அனு யாசமாய்ப் படிக்க அனுயாசமாய் எழுதும் எழுத்தே எடுக்கும். அவர்க்குப் புலமை தேவையில்லை. ஆராய்ச்சி அவசியமில்லை. இந்த நிலைமைகளால் புலவரவர்கள் சோர்ந்து போகாது எடுத்த பணியைத் தொடுத்து முடிப்பதற்குக் கொங்கு வேளிர் வரையா வண்மை முன் நிற்பதாக. வாழிய தமிழ்!

*1—1—'49,*
திருநெல்வேலி.

கு. அருணசலன்.

ஓம்

கொங்கு நாட்டின் வரலாற்று நூலே 'கொங்குச் செல்வி' இதன் ஆசிரியர், ஸ்ரீ பழனிச் சாமிப் புலவரது சீரிய முயற்சியின் விளைவாக இந் நூல் வெளிவருகிறது. கொங்கு நாட்டின் பண்டை வரலாற்றை அறிய விரும்புவோர்க்கு இந்நூல் பெரிதும் பயன்தரும் என்னும் துணிவோடு இந் நூலை வெளியிடுகிறோம்.

திருப்பூர்
2—5—49

எஸ். ரத்னசாமி.

# கொங்குச் செல்வி

கொங்கு என்னும் இந்த நாட்டின் பல பகுதிகளிலும் செல்வியம்மன் என்ற தேவியின் ஆலயங்கள் நிறைய இருக்கின்றன. இத்தேவியின் ஆலயங்கள்யாவும் பண்டைச் சிறப்பியல் பெரிதும் பெற்ற பழவிறல் மூதூர்களிலேயே உள்ளன. சிறு தேவதைகள் பலப்பல இருந்தாலும், வழிபாட்டுமுறையில், அவைகளுக்கும் இச்செல்விக்கும் வேறுபாடு பெரிதும் உண்டு. சிவாலயங்கள்யாவும் கொங்கில் காணியான முறைமையில் பாதுகாக்கப்பெறுதல்போல, இச் செல்வியின் ஆலயங்களும் பாதுகாக்கப் பெறுகின்றன. காணியான முறைமையாவது: சில பழம்பதிகளில் உள்ள ஆலயங்கள், கிராமங்கள், ஆகியவைகளில், முற்பாடு, பிற்பாடு என்னும் மரியாதை முறையில், பழம் பெரும் மன்னர் வழியில் வந்த சிற்றரசர்கள் தங்கள் உரிமையை வரன்முறை தவிராமல் அடைந்து அரசு செலுத்தி ஊர்க்காவலும் ஆலயப் பாதுகாவலும் புரிவதாகும். மன்னரது பாதுகாவலில் இச் செல்வி சிறப்புற்றோலும், இச் செல்வியே அவர்கள் குலதெய்வம் ஆவாள். இத்தேவியின் பெயர் செல்வியம்மன், செல்லாண்டியம்மன், செல்வியாத்தாள் என்று சிலவிடத்தும், அங்கிஅம்மன், ஆயிஅம்மன் என்று சில இடத்தும், கொண்டத்துக்காளி என்று சில இடத்தும், பகவதி அம்மன் என்று சில இடத்தும் அழைக்கப்படுகின்றது. இத் தெய்வமே இங்குள்ள சிவாலயக்காணிக்கும் முந்திய குலக் காணித் தெய்வமாக ஈங்குள்ள வேளிர் பெருமக்களாலும் பிறராலும் கொண்டாடப்படுகின்றது. இச்செல்வி இவ்வாறு சிறந்த நிலையில் போற்றப்படும் தெய்வமாகில், இது கோவில் கொண்டகாலம் ஆராய்தல் அவசியம் ஆகும்.

கொங்குச்செல்வி என்ற பெயர் கண்ணகி தேவியாம் பத்தினிக்கடவுளுக்கு அக்காலத்தமைந்தபெயர். இத் தேவிக்கு இப்பெயர் உண்டு என்பதைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். இப்பெயர் மதுரைக் காண்டத்தில், வேட்டுவவரி என்ற பகுதியில், தெய்வங்கொண்ட சாலினி செப்பிய பெயர். அது இவளே,

கொங்குச்செல்வி குடமலையாட்டி,
செந்தமிழ்ப்பாவை செய்தவக்கொழுந்து.
ஒருமாமணியாய் உலகுக்கோங்கிய
திருமாமணி.,

என்பதாகும். இப்பகுதிக்கு உரைவரைந்த அடியார்க்கு நல்லார், இம்மங்கைக்கு இனி நிகழப்போவது கூறினள்." சாலினி என உரைத்துப் போந்தார். ஆதலால் கொங்கு நாட்டில் தெய்வீகம் பெற்ற கண்ணகி தேவியே இச்செல்வியம்மன் என்பது துணிந்த உரையேயாம்.

இந்த நாட்டில் வந்து தெய்வீகம் பெற்ற நங்கைக்கு முதல் முதலாகக் கோவில் எடுப்பித்தவன், சேரன் செங்குட்டவன் என்னும் மன்னர் பெருந்தகையே. அவன் கோயில் கட்டிப் போற்றிய அமயம், அன்னிய மன்னர்கள் பலரும், தங்கள் நாட்டகத்துத் தேவிக்குக் கோயில் கட்டினார்கள். சேர அரசனின் குறுநில மன்னராகக் கொங்குநாட்டில் அக்காலத்தில் வாழ்ந்த பல சிற்றரசரும் தங்கள் ஊர்களில் கோயில் கட்டினார்கள். அந்த நாள் முதல் இந்த நாட்டில் செல்வியின் வணககம் சிறந்த நிலையில் போற்றப் பெறுவதாயிற்று. கொங்கில் தெய்வீகம் பெற்ற இத்தேவி, கொங்கின் செல்வியாகவும் இங்குள்ள மக்களால் மதிக்கப்படுகின்றாள்.

## சேரமன்னனும் பத்தினிதேவியும்

சேரன் செங்குட்டுவன் என்னும் சேரமன்னன் இற்றைக்கு ஆயிரத்துஎண்ணூறு ஆண்டுகளுக்கு முன் கொங்கு நாட்டில் வாழ்ந்தனன். இம்மன்னனது வரலாறுகள் சிலப்பதிகாரமும், பதிற்றுப்பத்தும், புறநானூறும் நமக்கு விளங்கக் கூறும். இம் மன்னன், அக்காலத்து வாழ்ந்த சோழர் பாண்டியர் என்னும் இரு பெருமன்னரையும், கொங்குக்கே சிறப்பாக உரிய ஐம்பெருவேளிரையும், வென்று, எழுமுடிமார்பனாக வாழ்ந்தனன். அவ்வமயம், கடல்மலைநாடு என்னும் மலையாளப் பகுதியும், ஐம்பெரும் வேளிருக்குரிய மைசூர்ப்பகுதியும் வேங்கடப்பகுதியும், தொன்முதிர் வேளிருக்கே சிறப்பாக உரிய, முத்தூருக் கோட்டமும், மலாடு என்று கூறப்பெறும் திருக்கோவலூர்ப்பகுதியும் இம்மன்னனது ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. குடமலை அல்லது, பெருமலையும் கொல்லிமலை, சேரராயன்மலை, திருச்சங் குன்று சங்ககிரி முதலியனவும், உதியர்

மலை அல்லது, உதகைமலையும், இவன் நாட்டகத்தன. பேரியாறு என்னும் காவிரி நதியும், வானி என்னும் பவானி நதியும், ஆன்பொருந்தும் அல்லது, பொருனை நதியும், குடவன் நதி, காஞ்சி நதி, மணிமுத்தா நதி முதலியனவும் இவன் நாட்டுயாறுகளாகத் திகழ்ந்தன. சேலம், சின்னச்சேலம், திருக்கோவலூர், கரூர், ராயவேலூர், தாராபுரி, சின்னத் தாராபுரி, கோவை, சத்திய மங்கலம், ஈரோடு, (இருங்கோழி) சித்தோடு (சிற்றரயம்) பேரோடு (பேரரயம்) பேருறந்தை, ஆலூர் (ஆனூர்) பொன் கோழி. (தலையநல்லூர்) வெண்கோழி (வெள்ளோடு) ஆனைமலை முதலிய தலைநகரங்கள் யாவும், இவனதும், இவனது பகுதி அரசரதும் ஆயபதிகள் ஆகும். இந்தப்பகுதி சேர்ந்த நாடே குட நாடு அல்லது கொங்குநாடு என்று கூறப்பெறுவதாயிற்று. இந்தப் பகுதி சேர்ந்த நாட்டை சங்க இலக்கியங்கள் குடநாடு என்றே குறிக்கலாயின. இம் மன்னனைக் குறிக்கப் போந்த புலவர்கள் எவரும் ''குடவர்கோ'' என்றே அழைத்தனர். அக்காலப் புலவர்கள் எவரும், குறித்த நிலையினைக் கீழ் வரும் செய்யுட்களால் காண்க:

'' வில்லெழுதிய இமயத்தொடு
கொல்லியாண்ட குடவர்கோவே''
''குடதிசையாளுங் கொற்றவேந்தன்
குடக்கோக்குட்டுவன் கொற்றங்கொள்கென
ஆடகமாடத் தறிதுயில் அமர்ந்தோன்
சேடங்கொண்டு சிலர்நின்றேத்த ,,
'' கொலைக்களப்பட்ட கோவலன்மனைவி
குடவர்கோவே நின்நாடுபுகுந்து ,,

என்பன சிலப்பதிகாரம் இது இம் மன்னனின் தம்பியாரே கூறியது. இவை போன்ற எடுத்துக் காட்டுகளால் இந்த மன்னன் வாழ்ந்தநாடு குடநாடு என்றே போற்றப் பெற்றதென்பது தெளிவு

## கண்ணகி தேவியும் குடநாடும்:

குடநாடு என்னும் இந்த நாட்டில் வந்தே கண்ணகிதேவி தெய்வமானாள் என்ற வரலாற்றைச் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

கடல் வயிறு கிழித்து மலை நெஞ்சு பிளந்து
அவுணர்க் கடந்த சுடரிலை நெடுவேல்
நெடுவேள் குன்றம் அடிவைத்தேறி.
பூத்தவேங்கைப் பொங்கர் நீழல்
தீத்தொழிலாட்டியேன் யானென்றேங்கி
அமரக்கரசன் தமர்வந்தீண்டிக்
கோனகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வானவூர்தி ஏறினள் மாதோ,,

என்பது அடிகளின் வாக்கு. இங்குக் குறித்த நெடுவேள் குன்றம் என்பது, குடநாட்டுப் பகுதியில் உள்ள திருச்செங் குன்றமே. இதனைத் திருச்செங்கோடு என்றும் கூறுப. இத் திருச்செங்கோட்டுமலையில் உள்ள முருகவேள் ஆலயம், சிலப் பதிகாரத்திலேயே சிறப்பிக்கப் பெற்றது: அது.

'' சீர்கெழுசெந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் ,,

என்ற அடிகள் வாக்கால் தெரிகின்றது. இந்த நெடுவேள் குன்றத்தைத்தான், திருச்செங்குன்று என்று குடநாட்டார் குறித்தனர்.

செங்குட்டவன் மலைவளங்காண வஞ்சிமுற்றம் நீங்கிச் சென்று, பெருமலை விலகிய பேரியாற்றங்கரையில் தங்கிய அமயம், மலைவாழ்நர்கள் இம்மன்னனைக்காண வந்தார்கள். அவர்கள் இம்மன்னனுக்குரிய காணிக்கைப் பொருள்கள் பல வற்றையுந்தந்து, கண்ணகி தேவியின் தெய்வீக நிலையைச் சொன்னார்கள்.

'' கானவேங்கைக் கீழோர் காரிகை
தான் முலையிழந்து தனித்துயர் எய்தி
வானவர் போற்ற மன்னொடுங் கூடி
வானவர் போற்ற வானகம் புகுந்தனள்
எந் நாட்டாள் கொல்? யார்மகள் கொல்லோ
நின் நாட்டு யாங்கள் நினைப்பினும் அறியோம்,,

என்கின்றனர். இதனால் இம்மலை குடமலை நாடனான செங் குட்டுவன் மலை என்பது பெறப்படுகின்றது. சிலப்பதிகாரத்து வேட்டுவ வரியிலும், குடமலையாட்டி என்று வருவது நினைவு கூறத் தகுவது. இந்த நாட்டில் இந்த மலையில் வந்து கண்ணகி

தேவி தெய்வம் ஆனுள் என்பது சரி. அத்தேவி கோயில் கொண்ட இடம் எது? என்ற வினு எழுந்தது. அதற்கு ஒரு சிலர், அவன்றன் தலைநகரமாகிய வஞ்சிமாபுரியில் என்கின்றனர். ஆயின் வஞ்சிமா நகர் எது?

## வஞ்சிமா நகர் எது?

சேரர்கள் வாழ்ந்து பெருகிய நாடே சேரல் நாடு. சேரர்கள் பனையர்கள். பனைமாலை சூடுகின்றவர்; இச்சேர நாட்டின் சிறந்த மலை கொல்லிமலை. இந்த நாட்டின் மலையைத்தான் நிகண்டுகள் சேரனுக்குரிய மலையாகக் கூறின.

" வில்லவன் கொங்கன் வஞ்சிவேந்தனே போந்தின்தாரோன்,
கொல்லி வெற்பன் குடக்கோ,,

என வருவது நினைவு கூறத் தகுவது. கொல்லிமலை சூழ்ந்த நாடே சேரநாடு. பனைநாடு என்றும் இதற்குப் பெயர். தெங்கு நாடு என்று மலையாளப் பகுதியைச் சொல்லுவார்கள். இப்பனை நாட்டுக்குரியர் எழுபனையர். இதனையே ஏழ்பனைநாடு என்றும் கூறும். இங்குக் குறித்த ஏழரசரை வென்று செங்குட்டுவ மன்னன் எழுமுடி மார்பனுக வாழ்ந்தனன். இந்த நிலை, பதிற்றுப்பத்தில்

" விழுமியோர் துவன்றிய அகன்கண் ஞாட்பின்
எழுமுடி மார்பில் எய்திய சேரல்" என்றும்
" எழுமுடி மார்ப நீ! ஏந்திய திகிரி
வழிவழி சிறக்க வயவாள் வேந்தே"

என்று சிலப்பதிகாரத்தும் காணப்படுகின்றன. எழுபிரிவினதாகிய நாடுகளைக் கொல்லிமலையைச் சூழ, இன்றும் காணலாம் இதற்கு எழுகரை நாடு என்று இன்றும் பெயர். சேலமும், அதனையொட்டிய பகுதியையே பண்டையர் சேரலன் நாடு என்றனர். சேரலன் நாட்டுக்குத் தலைநகர் சேரலம். சேரலம் என்ற நகரத்தையே பண்டையர், சேலம் அல்லது" வஞ்சி " என அழைத்தனர். சேரலம் என்ற பெயரே சேலம் என மருவி வழங்கப் பெற்றது. இந்த நகரமே சேரன் செங்குட்டவன் வாழ்ந்த வஞ்சிமாபுரியாகும்: இதனையே அக்காலத்தவர் வஞ்சி மாபுரி என அழைத்தனர்.

சேரலன் மாநகர் வஞ்சியென்றிருக்கச் சேலமா நகரை வஞ்சிமாநகர் என்று கூறுதல் ஒவ்வாது எனில் கரூர் என்று பெயர் வழங்கும் நகரமும், அஞ்சைக்களம் என்று பெயர் கொண்ட நகரமும் வஞ்சிமா நகர் ஆகும் போது உண்மையாகவே வஞ்சிமாநகர் என்று கூறப்பெற்ற சேரலன் மாநகர் வஞ்சிமா நகர் ஆகாமற் போகாதல்லவா? ஆதலால் சேலமா நகரமே வஞ்சிமா நகர்.

சேரர் வஞ்சியில் ஆன்பொருநை நதி திகழவேண்டுமே எனில்? நன்று; நன்று. சேரர் வஞ்சியில் ஆன் பொருந்தம் ஓடிற்றென்று மணிமேகலை, சிலப்பதிகாரம் குறித்தனவா? சேரர் வஞ்சியில் ஆன்பொருநை நதி ஓடியே தீரவேண்டுமா? இது ஆன் பொருநை நதியோடு கூடிய கரூரை வஞ்சிமாநகராக்க எண்ணியவரது கருத்து ஆதலால் அது சரியன்றென்க.

"வாழியரோ வாழி வருபுனல் நீர் ஆன் பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன் தொல்குலமே

என அடிகள் கூறுகின்றனரே யெனில்? ஆன்பொருநை நதியோடு கூடி விளங்கும் வஞ்சிகள் பல. அப்பதிகளுக்குத் தலைவராக உள்ளாருக்கெல்லாம் இம்மன்னன் கோமான் என்ற பொருளில், அவ்வடிகள் குறித்தனரே யன்றி, இவனது வஞ்சியில் அவ்வியாறு ஓடிற்றென்று அவர் குறிக்கவில்லை. ஆதலால் ஆன்பொருநை நதியோடு கூடிய தலைநகரத்தில் அவன் வாழவில்லை.

## பேரியாறு காவிரி நதியே:

சேரமன்னன் மலைவளங் காண வஞ்சிமுற்றம் நீங்கி இந்திரன் போலச் சென்று, பேரியாற்றங்கரையில் தங்கினான். அவ்வமயம் குன்றக் குறவர்கள் ஒருங்கு கூடி வந்து, கண்ணகி தேவியின் வரலாற்றைச் சொன்னார்கள். அதனைக் கேட்ட பின்னர் சாத்தனார் அதனையே விரித்து மன்னனிடம் புகன்றனர். அதனைக் கேட்ட பின்னர்த்தான் அரசமாதேவி நம் நாடடைந்த இவளைப் போற்றுவம் என்றது. அரசன் தங்கியிருந்த இந்தப் பேரியாறு சம்பந்தமாக இந்த இடத்தில் ஓர் பெரிய ஐயம் நிகழ்கின்றது. பேரியாற்றைப் பற்றி வாதம் நிகழ்த்தியவர்களில் பூர்ணவாகினி என்று பேரியாற்றை ஒருவரும், மணிமுத்தா நதியாக இருக்கலாம் என மற்றொருவரும் கூறிப் போந்தனர்: ஆதலால் இங்குக் குறித்த பேரியாறு ஆராய்தற்குரியதே.

காவிரி நதி என்னும் பேரியாற்றை இந்த நாட்டவர் பலரும் பெரியாறு என்று இன்னும் பேசுகின்றார்கள். இந்த நதியைப் பற்றிக் கூறிய அடிகள் "பெருமலை விலகிய பேரியாறு" என்றே குறிக்கின்றனர் பெருமலை என்றமலை காவிரியாறு உற்பத்தி யாகும் குடகுமலைக்கே உரிய பெயர். கொங்கு நாட்டின் எல்லை கூறப் போந்த புலவர்கள் இம்மலையைப் பெருமலை என்றே குறித்தனர். மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒருபகுதி பெரு மலை என்ற பெயரால் அழைக்கப்படுதல், ஈங்குள்ளார் பலரும் அறிந்ததே. "வடக்குப் பெருமலையாம்" என்றது நோக்கி யறிக. சேலமா நகரிலிருந்து மலைவளங் காண வந்த மன்னவன், காவிரி என்னும் பேரியாற்றங் கரையில் தங்கினான். காவிரி யாற்றிற்கும், சேலத்திற்கும் இருபத்தைந்து கல். அல்லது முப்பது கல்லிற்கும் மேலிராது. இந்த யாற்றைக் காவிரி-யன்று என்று கூறப்படுவதற்குரிய காரணங்கள் இரண்டு: ஒன்று, அரும்பத உரையாசிரியர் பேரியாறு என்று வந்த விடத்தில் இது ஒரு யாற்றின் பெயர் என்று குறிப்பு வரைந்-தது. மற்றொன்று, மறுப்பவர் தங்கொள்கைக்கேற்பச் சிலப் பதிகார அடிகட்கு மாற்றிப் பொருள் கொண்டது. இனி இவைகளை ஆராய்வோம்.

அரும்பத உரையாசிரியர், பேரியாறு என்ற இடத்தில், இது ஒரு யாற்றின் பெயர் என்று எழுதாமல் இது ஒரு மலை-யின் பெயர் என்று எழுதுவார். அது காவிரியாயின் காவிரி என்றே குறித்திருப்பாரெனில், விளக்கங் கூறுமிடத்து, அவ்-வாறு கூறவேண்டுமே யன்றி வேண்டாத இடத்து அவ்வாறு கூறுதல் மரபு அன்றென்று கருதினார். ஆகலில் அவர் யாற்-றின் பெயரைக் குறியாது விடுத்தார். இம் முறையிலும் இது காவிரிதான். இனி மறுக்கப் புகுந்த "செங்குட்டுவன்" நூலா-சிரியர், தங் கொள்கைக் கேற்ப உரைவரைந்த நிலையினை ஆராயலாம்.

"வஞ்சிமுற்றம் நீங்கிச் செல்வோன்
வனமலர்ப் பூம்பொழில் வானவர் மகளிரொடு
விளையாட்டு விரும்பிய விறல் வேல் வானவன்
பொலன்பூங் காவும் புனல் யாற்றுப் பரப்பும்
இலங்குநீர்த் துருத்தியும், இளமரக்காவும்,
அரங்கும் பள்ளியும் ஒருங்குடன் பரப்பி
ஒருநூற்று நாற்பது யோசனை விரிந்த

பெருமால் களிற்றில் பெயர்வோன் போன்று
கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை
நாகந்திலகம் நறுங்காழ் ஆரம்
முதிர்பூம் பரப்பின் ஒழுகுபுனல் ஒழித்து.
மதுகரம் ஞிமிறொடு வண்டினம் பாட
நெடியோன் மார்பில் ஆரம்போன்று
பெருமலை விலகிய பேரியாற்றடை கரை
இடுமணல் எக்கர் இயைந்தொருங்கிருப்ப !

என்பது சிலப்பதிகாரம்; காட்சிக் காதை. இவைகள் தாம் பேரியாறு சம்பந்தமான அடிகள்; இதற்கு அவ்வாசிரியர், கருத்தாவது, "இந்திரன் விளையாடி மகிழ்வதை விரும்பி இன்பந்துய்த்தற்குரிய பொருள்களை யெல்லாம் அமைத்து, அவற்றை ஒரு நூற்று நாற்பது யோசனை தூரம் விரிந்த யானைகளின் மேல் ஏற்றிக்கொண்டு தான் பெரும் பரிவாரங்கள் சூழச் சென்றான். என்றெழுதி ஒருநூற்று நாற்பது என்னுந் தொடர், இந்திரனது யானைகளைக் குறிக்கின்றது போலச் சேரனது யானைகளின் பரப்பைக் குறிக்கின்றது. இன்றேல் ஒருநூற்று நாற்பது என்ற எண்ணை இளங்கோவடிகள் கூறுதற்குத் தக்க காரணம் வேண்டுமன்றே? ஆதலால் செங்குட்டுவ மன்னன் சென்று வந்த யாற்றங்கரை, ஒரு நாளிலே தன் தலைநகருக்குத் திரும்பும் அவ்வளவு சமீபித்தது அல்ல என்பதே.

இதற்கு இப்படிப் பொருள் கொண்டால் சேரமன்னன் சென்று வந்தயாறு காவிரியாகும், தூரம் சமீபமாகவும், இளங்கோவடிகள் கருதியதும் விளக்கம் ஆகும். அது, வஞ்சிமா நகரம் நீங்கிச் செல்வோனாகிய அவன், வானவர் மகளிரொடு விளையாட விரும்பிய வானவன், பெருமால் களிற்றிற் பெயர்வோன் போன்று, யானையின் மீது புறப்பட்டவன், யாற்றுப்பரப்பும், துருத்தியும், இளமரக்காவும் அரங்கும் பள்ளியும் ஒருங்குடன் பரப்பி ஒரு நூற்று நாற்பது யோசனை தூரம் விரிந்ததும், பெருமலையின்றும் வருவதும் ஆகிய பேரியாற்றங்கரையில் தங்கினான் என்பது; இதுவே இந்த இடத்திற்குப் பொருத்தமாகத் தெரிகின்றது.

ஒரு நூற்று நாற்பது யோசனை தூரம் விரிந்தயாறு இந்த நாட்டில் ஓடுகின்ற யாறுகளில் காவிரியையன்றி வேறெதனையும் கூற இயலாது. பேரியாறு என்ற பெயர்க்குப் பொருத்தமான,

பெருமலையினின்று தோன்றிய யாறு, காவிரியன்றி, வேறெந்த யாறும் இல்லை. இப்பெயர் இந்த யாற்றிற்கு உண்டென்பது இங்குள்ளார் எவருக்கும் தெரியும். இந்த யாற்றிற்கு இப் பெயர் உண்டு என்பது தெரியாத நிலையில் தான் இச் சந்தேகம் தோன்றி யிருத்தல் கூடும். ஆதலால், சேலமாகிய வஞ்சிமா புரியில் புறப்பட்ட அம்மன்னன் சென்று வந்த யாறு, காவிரி-யே யாகும்; சேலத்திற்கும் காவிரி நதிக்கும் உள்ள தூரம் சுமார் முப்பதுகல் தொலைவினது. ஆதலால் சேரமன்னன் அன்றே தனது நகர் திரும்பும் வசதியும் உடையதாகும். ஆத லால் இங்குக் குறிப்பிடும் பேரியாறு காவிரி நதியே.

## திருச்செங்குன்றே பத்தினி தேவியின் ஆலயம்;

வஞ்சிமாநகரம் அன்றே திருப்பிய சேரமன்னன், குறவர்-கள் சொன்ன பத்தினித் தெய்வத்தைப் போற்றுதற்கு இமயத் தில் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்து, ஆங்கு எதிர்த்த ஆரியமன்னரைப் பிடித்து, அவர்தலைமேல் பத்தினிப் பிரதிஷ்டை செய்யுங்கல்லை எடுப்பித்து வந்தான். அவன் அப்-பத்தினித் தெய்வத்தை எங்கு நிலை பெறுத்திஞன் என்று ஆராய்தல் வேண்டும். குன்றக் குறவர்கள் கூடி, நின் நாட்டு நின் மலையில் அம்மகள் வந்து நின்ருள். அமரர்க்கரசன் தமர், அவள் கணவஞெடு வந்து, அவளை அழைத்துக் கொண்டு. எங்-கள் கட்புலங்காண விட்புலம் போயினர். இது அதிசயம் என்றனர். இந்த அதிசயச் செயலைக் கேட்டு அறிந்தவன் அம் மன்னன். ஆதலால், அவ்வதிசயச் செயல் நிகழ்ந்த அந்த இடத்தில்தான் பத்தினிதேவியின் கோவிலை அம்மன்னன் நிறுமித்தனன் என்க.

அன்றியும்,

"மதுரை மூதூர் மாநகர் கேடுறக்
கொதியழற் சீற்றம் கொங்கையின் விளைத்து
நம் நாடணைந்து, நளிர் சினை வேங்கைப்
பொன்னணி புதுநிழல் பொருந்திய நங்கையை
அறக்களத் தந்தணர் ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடும் சென்று
மேலோர் விழையும் நூல் நெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து
இமயவர் உறையும் இமயச் செவ்வரைச்

சிமயச் சென்னித் தெய்வம் பரசி
செய்வினை முற்றிய தெய்வப்படிமத்து
வித்தகரியற்றிய விளங்கிய கோலத்து
முற்றிழை நன்கலம் முழுவதும் பூட்டிப்
பூப்பலி செய்து காப்புக்கடன் நிறுவி
கடவுள் மங்கலம் செய்கென ஏவினன்
வடதிசை வணக்கிய வானவர் ஏறென்''

என்ற வாக்கில் அரசன் கட்டளை கூறப்படுகிறது. அக் கட்டளையாவது; "அந்தணர், பெருங்கணி, ஆசான் ஆகிய வர்கள், சிறப்புடைய கம்மியரொடும், இமயவர் உறையும் இமயச் செல்வரை சென்று அச்சிமயத்தின் கண் உள்ள தெய்வமாகிய முருகவேளை முதற்கண் வணங்கி, மதுரை மூதூர் மாநகர் கேடுறக் கொதியழற் சீற்றங் கொங்கையின் விளைத்து, நம் நாடடைந்து வேங்கைமர நீழலில் நின்ற நங்கைக்கு நூல் நெறி மாக்கள் வகுத்த பத்தினிக் கோட்டத்தில், வித்தகரியற்றிய, செய்வினை முற்றிய படிமத்தை, நன்கலம் பூட்டி, பூப்பலி செய்து, காப்புக்கடன் நிறுவி, கடவுள் மங்கலம் செய்க'' என்பதாகும்.

இக் கட்டளையை ஏற்றுக் கொண்ட அவர்கள், அரசன் கட்டளைப்படி சென்று ஆங்குக் கடவுள் மங்கலம் செய்தனர் ஆவர். ஈங்குக் குறிக்கப்பட்ட "இமயச் செல்வரை'' திருச்செங்கோடே ஆகும். இமயம் வெண்மலை; ஆதலின் இது இமயச் செல்வரை ஆயிற்று. திருச்செங்குன்றுக்கு இமயம் என்ற பெயர் உண்டு என்பதை திருச்செங்கோட்டுப் புராணம் திருப்பணி மாலை இவைகளைக்கொண்டு தெளிக.

திருச்செங் குன்றிலேயே பத்தினி தேவியார் ஆலயம் உண்டு என்பதை அடிகளின் வாக்கு மீண்டும் திறம்படுத்து கின்றது. அது, மலையின் மேல் விழவயர்ந்த செங்குட்டவ மன்னன் முன், மின்னுக் கொடி ஒன்று மீவிசும்பில் தோன்றித்,

"தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோவில்
நல்விருந்து ஆயினன் நானவன் றன்மகள்
வென்வேலான் குன்றில் விளையாட்டு நானகலேன்
என்னோடும் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்''

என்று கூறியதாகச் சிலப்பதிகாரத்தில் காண்கின்றோம். இங்ஙுக் குறித்த வென்வேலான் குன்றம் கண்ணகி நின்ற நெடு-வேள் குன்றம் என்னும் திருச்செங்குன்றமே யாகும். இம்மலைக்குரிய தெய்வமும் முதற்கண் பூசை கொள்ளும் சிறப்பும், இன்றும் முருகவேளுக்கே இருத்தலால் தான் அப்பெருமையும், உரிமையும் தோன்ற இம்மலை, வென்வேலான் குன்று என்று கூறப்பட்ட தென்பதனையும் தெளிக; ஆகையால், அதி

சயம் நிகழ்ந்த ஒரு இடத்திலேயே, உலகர், அதற்கு ஆவன செய்யும் முறை பற்றி, அம்மன்னன், குன்றக் குறவர்கள் சொன்ன அம்மலையின் மேலிடத்தே செய்தான் என்றதனாலும், அரசன் சொன்ன கட்டளையின் நிலையாலும், மின்னுக் கொடி ஒன்று வென்வேலான் குன்றைச் சுட்டுந் திறத்தாலும், செங்குட்டவ மன்னன் பத்தினி தேவிக்கு நிறுமித்த கோவில், திருச்செங்குன்றின் மேலிடத்ததே என்பது பெறப்படுகின்றது. ஆதலால் திருச்செங்குன்றே பத்தினி தேவியின் ஆலயம்.

## அர்த்த நாரீசனே பத்தினி தேவி.

திருச்செங்குன்றே பத்தினி தேவியை நிலைபெறுத்திய இடம் ஆகில், ஆங்கு முருகவேள் ஆலயமும், அர்த்தநாரீஸ்வரர் ஆலயமும் தானே உள்ளன. பத்தினி தேவியின் ஆலயம் எங்கே என்ற வினா எழும்? அதற்கு விடை, அர்த்த நாரீசனே பத்தினி தேவி; அவர் நின்ற ஆலயமே அவ்வாலயம் என்பதே.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி நின்ற மலை நெடுவேள் குன்-றந்தான் என்று குறிக்கப்படுகின்றது. அம்மலை, அப்பொழுது அர்த்த நாரீசன் மலை என்று குறிக்கப்பெறவில்லை. அர்த்த நாரீசர் திருக்கோவிலில் அப்பொழுது அங்கிருந்தால் அடிகள் தவறாது குறித்துப் போயிருப்பர். உலகத்திற்கே அதிசயப் பொருளாய் நிற்கும் அர்த்த நாரீசனையா அடிகள் மறப்பார்? அடிகள் கூறாததால், அர்த்தநாரீசர், அப்பொழுது அவ்விடத்துக் கோவில் கொள்ளவில்லை. அடிகள் தாம் குறியாது போயினும், அவருடனிருந்த மணிமேகலை ஆசிரியராவது குறிக்க வேண்டாமா? பிற சங்கப் புலவர்களாயினும் இவ்வீசனைக் குறித்துச் சொல்லக்கூடாதா? அப்பொழுதைய இரு பெருங் காவியங்களிலும் திருச்செங் குன்றினிடத்து மாதொரு பாகர் இடம் பெறாததால் அவர் இடையிலே தோன்றி

யவராவர். அதிசயப் பொருளாய் மிளிரும் அர்த்தநாரீசருக்கு அங்கு முதற் பூசை இன்றும் இல்லை. என்றும் அம்மலையில் உறைகின்ற முருகப் பெருமானுக்குத் தான் இன்றும் முதற் பூசை. இந்த உண்மை நிலையினை நேரில் கண்டு தெளிக.

செங்குட்டவ மன்னன் நிலை பெறுத்திய பத்தினி தேவியின் படிவம் இமயமலைப் படிவம். இமய மலை வெண்ணிற மலை. அங்கேயுள்ள கற்கள் வெண்ணிறக் கற்கள். அந்த வெண் ணிறக் கல்லால் தான் பத்தினி தேவியின் வடிவம் செய்யப் பெற்றது. பொதியிலில் கல்லெடுத்தலை வெறுத்த சேரமன்னன் வெள்ளிமலையில் கல்லெடுத்ததின் நோக்கம் என்ன? எவரும் செய்யாத சிலையினைச் செய்தற்கன்றோ? அர்த்தநாரீசர் படிவம் வெண்ணிறத்தோடு கூடி விளங்குவதை இங்குள்ளாரும், நேரில் வந்து கண்டாரும் நன்கு அறிவர்.

தமிழ் நாட்டிலே உள்ள எல்லாச் சிலைகளும், கருங்கற் களாக இருக்க, இச்சிலை மாத்திரம் வெண்ணிறச் சிலையாய் இருப்பது, இது சேரமன்னனால் நிலை பெறுத்திய தென்பதைக் காட்டவில்லையா? அன்றியும், தமிழ் நாட்டுக் கோவிலில் உள்ள சிலைகள் பெரும்பாலும், உருவம் அழியாத நிலையும், இச் சிலையில் பல பாகங்களிலும் உருவம் அழிந்த நிலையும், இச்சிலை காலத்தால் முற்பட்டதென்பதை நமக்கு அறிவிப்பதாகுமே. ஆதலால், திருச்செங்குன்றின் மேலிடத்தில் உள்ள அர்த்த நாரீசனே பத்தினிதேவி.

## அர்த்தநாரி, அர்த்தநாரீசரானது சம்பந்தர் காலமே.

சேரன் செங்குட்டவனுக்குப் பின், இரண்டு நூற்றாண்டுகள், இப்பகுதியில் சேரமன்னர் ஆட்சி சிறந்து நின்றது. இக் காலத்தே இப்பிரதேசத்தை அடுத்த நிலப்பகுதியில், பாண் டியர் பரம்பரையில் வந்த வல்வில் ஓரி என்னும் குறுநில மன்னன், கொடை மடம் பூண்டு விளங்கினான். இவனது விளக்கம் பொறாத பெருஞ் சேரலிரும்பொறை இவனது சோர்ந்த நிலையினை எதிர்நோக்கி இருந்தான். அவ்வமயம் மலைய மான் திருமுடிக்காரி என்னும் குறுநிலமன்னன், ஓரியின் மீது படை கொடு சாடினான். இவனுக்குத் துணையாக, பெருஞ்சேர லிரும்பொறையும் சென்று சேர்ந்தான். இருவரும் எதிர்த்த லால் ஓரிமன்னன் ஆற்றாது திருச்செங்குன்றுக் கருகில் உள்ள

முள்ளூர்க் காடுகளில் ஒளிந்து திரிந்தனன். ஒளிந்து திரிந்த ஓரி மன்னனை பெருஞ் சேரல் காரி மன்னன் துணை கொண்டு கண்டு பிடித்துக் கொன்று ஒழித்தான். வென்ற சேரமன், தனக்குத் துணை நின்ற காரி மன்னனுக்கு ஓரியன் தலை நகரமாகிய கோவலூரை அளித்து, மலையமான் என்ற பட்டத்தையும் தந்தனன். "கோவலூர்" என்ற அந்த நகரம், பாண்டிக் கொடுமுடி என்ற பெயரால் பின்னர் வழங்கப்பட்டது. காரி மன்னன் ஒளிந்துதிரிந்த முள்ளூர் திருச்செங்குன்றின் அடிவாரத்தில் உள்ளது; இந்த முள்ளூர், முளசை என்ற பெயரால் இப்பொழுது வழங்கப்படுகின்றது. முள்ளூரை யொட்டி இம்மலை இருத்தலால் திருச்செங்குன்று, முள்ளூர் மலை என்றும் அக்காலத்து வழங்கப்பெறுவதாயிற்று. திருச்செங்குன்றின் அடிவாரத்தில் முள்ளூர் இருப்பதை நேரில் கண்டு அறிக.

சேரர் அரசியல் மாறியபின், இவ்விடம், மீண்டும் பாண்டியர் வசம் ஆயிற்று. கி. பி. நானூறு ஆண்டுகளுக்கு மேல், சோழ பரம்பரையைச் சார்ந்த வேளிர்கள் பலர், இம்முள்ளூர்ப் பகுதியைத் தமதாக்க எண்ணி ஆங்குத் தலைவர்களாக உள்ள பாண்டிய புத்திரவர்க்கத்தவரான வேட்டுவப் பெருமக்கள் மேல் படையெடுத்தனர். அவர்களுள் தலைமை தாங்கிப் போர் செய்து அப்போரை வென்றவன், சோழிய ஏனாதி திருக்கண்ணனே. இக்கண்ணன், முள்ளூருக்கு அண்மையில் உள்ள மோரூருக்குத் தலைவன். இவன், சோழர் வென்றிக்கு அறிகுறியாக முள்ளூர் மலையில் புலிக் கொடியை ஏற்றினான். இச்சரிதம் புற நானூற்றில் இடம் பெறுவது போல், மோரூர்க் கண்ணரது சரிதத்திலும் இடம் பெறுகின்றது. மோரூர் என்பது, திருச்செங்குன்றுக்கு அருகில் இரண்டுகல் தொலைவில் உள்ளதை நன்கு தெளிக. இவ்விடம் சோழர் கைக்கு மாறிய பின், சோழர் பிரதிநிதியாக இருந்த கண்ணனே இப்பகுதித் தலைவனும் ஆனான்.

சோழர் அரசரைப் போற்றிய திருக்கண்ணர் பரம்பரை இரண்டு நூற்றாண்டுகளுக்குள் அறுபது ஊர்களில் தலைவராக அறுபது தண்டிகை செலுத்தும் பெரும் பதம் பெற்றார்கள். அறுபது தண்டிகையினராக வாழ்ந்த இவர்கள், சிவ பக்தியிலும், அடியார் பக்தியிலும் சிறந்து விளங்கினார்கள். இவர்கள் வாழ்ந்த காலம் சுமார் எட்டாம் நூற்றாண்டு என்று கூறுதல் மிகையாகாது.

இவர்கள் வாழ்ந்த காலத்தில், சைவ சமயத்தை நாடெங்கும் பரப்பிய சிவமணக்குந் திருவாயார், திருஞானசம்பந்தர், இத் திருச்செங்குன்றுக்கு எழுந்தருளினார். நாடெங்கும் புகழ அடியார் குழுவுடன் வந்தருளிய அடிகளை இங்கு வாழ்ந்த சோழருக் குரிய குறுநில மன்னர்களாகிய கண்ணர்கள், எதிர் கொண்டு அழைத்து உபசரித்தனர். தங்கள் பகுதியில் உள்ள சிவாலயங்கள் பலவற்றைக் காட்டினதோடன்றித் திருச்செங்குன்றின் மேலிடத்தும் அழைத்துச் சென்றனர். சென்று சேர்ந்த அவர், சேரமன்னனால் நிலை பெறுத்திய பத்தினி தேவியின் படிவத்தைக் கண்ணுற்றார். கண்ணுற்ற அவர், அருகில் உள்ள கண்ணர்களை அழைத்து இஃது என்ன படிவம் என்று வினவினர். போர்க்களமாக இருந்ததாலும், வழிபாட்டு முறையில் சேராத நிலையில் கீர்த்தி பெறாத நிலையாலும் இப்படிவத்தை நன்கு அறியாத கண்ணர்கள், பாதி பெண்வடிவமாக இருந்த நிலையால் இப்படிவத்தை அர்த்தநாரி என்று கூறினர். பார்த்த இடமெங்கும் பரசிவம் காணும் அவருக்கு அப்படிவம், அம்மையும் அப்பரும் ஆகும் மாதொருபாகனாகக் காட்சியளித்தது. அக்காட்சியால் வசப்பட்ட அவர், உடனே ஒரு பதிகம் பாடத் தொடங்கினார். அப்பதிகத்தில், பாதி அம்மைக்கும், பாதி அப்பருக்கும்ஆகப் பாடினார்.

சிவமணம் பரப்பும் பெரியாராகிய அவர், ஆங்கிருந்த கண்ணர்களைப் பார்த்து 'இவர் மாதொருபாகர். இவருக்கு ஆகும் நன்மைகளைச் செய்து நலம் அடைவீராக'' என்று கட்டளையிட்டார். பூசை முறைகளை ஒழுங்குறச் செய்வதற்கு ஆதி சைவக் குருக்களை வரவழைத்தார்; கண்ணர்களின் உதவியால் வேண்டிய தான தர்மங்களை அர்த்த நாரீசர் என்ற பெயரால் செய்வித்து, அத்தர்ம சாசனங்களைக் கல்லில் எழுதும்படி செய்வித்தார்; கல்லில் எழுதி அர்த்தநாரீசர் என்ற பெயரை நிலை நாட்டினார். நாட்டிய அவர் அர்த்தநாரியைச் சிவமாக்கிச் சிவமணம் கமழச் செய்து அவ்விடத்தை விட்டு அகன்றார்; அந்த நாள் முதல் மூரிமார்பக் கண்ணகியார், அர்த்தநாரீசர் ஆகக் கொங்குக் குரிய குடமலையில் காட்சியளிக்கின்றார். இவை, கண்ணர்களில் ஏறுதப்பட்டத்துடன் கன்னிவாடியில் வாழ்ந்த கல்வி சான்ற கண்ணர் ஒருவர் வீட்டுப் பழம் சுவடியில் யான் கண்டதாகும்.

## கண்ணகி தேவியார் பெயர் பொறித்த கல் லெழுத்துக்கள்.

திருச் செங்குன்று மலையின் மேல் உள்ள கண்ணகி தேவியாம் அர்த்தநாரீசர் ஆலயத்தில் பல கல் லெழுத்துக்களை யாம் காண்டல் கூடும். அவைகளுள் கண்ணர் காலக் கல்லெழுத்திலும், அவருக்குப் பின்னர் வந்த சோழ அரசர் காலத்தும் பிற்காலத்தும் எழுந்த கல்லெழுத்துக்களில் இம்மலைமேல் உள்ள தெய்வம் அர்த்த நாரீசர் என்ற பெயரால் வழங்கப் பெற்றதன்றி, முற்காலக் கல் வெட்டுக்களில் அர்த்த நாரீசர் பெயர், "முறித்தாமக் கண்ணியார்" என்றே குறிக்கப் பெறுகின்றன. "முறித்தாமக் கண்ணியார்" என்ற கல் வெட்டில் தர்மஸ்தாபனம் செய்தவர் பெயர்கள் செங்கோனடிகள்: இளங்கோவடிகள்: தேவியார் என்றே குறிக்கப்படுகின்றன. இவைகள் காலத்தால் முற்பட்ட கண்ணகி தேவியார் சிலையின் சிதைவைப் போலவே சிதைந்தும் மறைக்கப் பெற்றும் இருக்கின்றன. அவை வருமாறு:—

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜ கேசரி பன்மற்கு யாண்டு பதினன்காவது, இவ்வாண்டு திருச் செங்கோட்டுத் திருவாதிரைக் கணப் பெருமக்கள் கையில், செங்கோனடிகள், தேவியார் முறித்தாமக் கண்ணியாற்கு ஏக வீர திவாகர தேவரே சாத்திவைத்த செம்பொன், செட்டாங் கல்லால் இருபதின் கழஞ்சு இப்பொன் பரிசை கொண்டு திருவாதிரை தோறும், திங்கள் இருபது பிராமணரை சந்திராதித்தர்வரை ஊட்டுவதாக. இப்படிக்குத் திருவாதிரைக் கணப் பெருமக்களோம்.

2. ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜ கேசரி பன்மற்கு திருவெழுத்திட்டும் செல்லா நின்ற யாண்டு பதினன்காவது இவ்வியாண்டு பன்னிரு நாட்டுப் பெருமக்கள் கையில் இளங்கோவடிகள் தேவியார் முறித்தாமக் கண்ணியாருக்கும், திருச்செங்கோட்டு ஆழ்வாருக்கும் நந்தா விளக்கொன்று எரிப்பதாக வைத்த செம்பொன் செட்டாங் கல்லால் பதினைந்து கழஞ்சு இப்பொன்னின் பரிசைக் கொண்டு சந்திராதித்தர்வரை நந்தா விளக்கு எரிப்பதாக.

இவைபோன்ற கல்லெழுத்துக்கள் சிலவற்றை அம்மலைமேல் இன்றும் எவரும் காணலாம். இக்கல்வெட்டிரண்டில் முதலாவது கல்வெட்டில், செங்கோனடிகள், தேவியார் முறித்

தாமக் கண்ணியாருக்கு திவாகர தேவர் சான்ருகச் செய்த தர்மம் ஒன்றைத் திருவாதிரைக் கணப் பெருமக்கள் நடத்தி வந்த நிலை நமக்குத் தெரிகின்றது. இங்குக் குறித்த செங் கோனடிகள் நமது செங்குட்டுவ மன்னனே ஆவன். இங்குக் குறித்த முறித்தாமக் கண்ணியார், முறிந்த மாலையையுடைய நம் கண்ணகியாரே எனலாம். இந்தத் தர்மம் செங்குட்டுவ மன்னன் காலத்திருந்து கோவில் நிருவாகக் கணத்தாரின் கையிலே செய்யப்பட்டு வந்தது. பின்ஞல் யாரோ பெரு மன்னன் ஒருவனது பனிரண்டாவது ஆட்சி வருடத்தில் புதுப் பிக்கப் பெற்றதாதல் வேண்டும் என்று எண்ணுதல் பொருந்து வதாம்.

இரண்டாவது கல் வெட்டில் இளங்கோவடிகள் நம் கண்ணகி தேவியாருக்கு பன்னிரண்டு நாட்டார்கள் மேற் பார் வையில் செய்த நந்தாவிளக்கின் தர்மமும் அவ்வாறே புதுப்பிக் கப் பெற்றுள்ளது.

இன்னோரன்ன கல் வெட்டுக்களால் ஆரம்ப காலத்தில் முறித்தாமக் கண்ணியாராயிருந்த நம் கண்ணகி தேவியார் பிற்காலத்தில் சம்பந்த சுவாமிகள் காலமுதல் அர்த்த நாரீசர் ஆனூர் என்க.

## கொங்குச்செல்வி கோவிலில் குறுக்கே சுவறு ஏன் ?

கொங்குச் செல்வியாம் நம் குடமலை யாட்டியின் கோவி லைச் சேரமன் கட்டிய நிலை மேற்குப் பார்த்த நிலையதே. அந்த நிலையில் அது குடவர் கோ வால் கட்டப் பெற்றதென்பதை விளக்குகின்றதே அம்மன்னன் கட்டிய கோவிலில் இடையே குறுக்கே சுவறு ஒன்று வைக்கப்பட்டிருக்கின்றது இந்தச் சுவறு தோன்றிய காலம் இடைக்காலமே. திருச்செங்கோட்டுப் புராணந் தோன்றிய காலத்திற்கு முற்பட்டது என்னலாம். ஏனெனில், இச்சுவற்றில் உள்ள துளையை ஆதாரமாக வைத்து திருச்செங்கோட்டுப் புராணப் புலவர் இத்துளை வழியாகச் சூரியன் பூசை பண்ணும் சிறப்பைப் புனைந்து போகிருர். ஆத லால் இப்புலவர் காலத்துக்கு முற்பட்ட காலத்தே தான் அச் செயல் நிகழ்ந்ததாதல் வேண்டும். இச்சுவற்றில் ஒன்பது துளை கள் உள்ளன இத்துளைகள் தாமரை மலர் வடிவத்தில் காட்சி அளிக்கின்றன. இச்சுவறுக்குப் பின் அர்த்த மண்டபம்;

பலிபீடம், கொடி மரம் முதலியன விளங்குவதை இன்றும் எவருங் காணலாமே. இத்தகைய பெரிய கோவிலில் இடையே சுவறு மறைத்து நிற்பது ஏனோ? இச் சுவற்றை இங்கே அமைத்தவர்கள் இதற்கு கிழக்குப் பார்த்த வாயிலையும் அமைத்து அதிலே யாவரும் புகுந்து மேற்குப் பார்த்திருக்கும் தெய்வத்தை வணங்கும் படி செய்ததேனோ? சிவமாக்கக் கருதிய செயலா? அங்ஙனமாயின் கொங்குச் செல்வியையும் பெயர்த்தெடுத்துக் கிழக்குப் பார்த்து அமைத்திருக்கலாமே. அவ்வாறு செய்ய மறந்தது ஏனோ? கொங்குச் செல்வியின் சிலை மிகப் பழையது; பெயர்த் தெடுத்தால் ஒடிந்து விடலாம் என்ற பயமா? அவ்வாறு செய்திருந்தால் சுவற்றை அமைத்த நோக்கம் நன்கு நிறை வேறியிருக்குமே. ஏனோ இதனைச் செய்யாது போனார்கள் இயலாமையாற் போலும். நிற்க.

சுவறினுள்ளும் வெளியிலும் கல்லெழுத்துக்கள் பல தெரிகின்றன. ஆயினும் எழுத்துக்கள் படிக்க முடியாத நிலையில் மறைக்கப்பட்டிருக்கின்றன. சுவறினுள்ளே கொங்குச் செல்வியின் உண்மைத் தன்மையைக் காட்டத்தகுந்த கல்லெழுத்துக்கள் இருக்கலாம் போலும். அவைகளை மறைக்கத் தகுந்த நிலையிலேதான் இடையிலே சுவறு ஏற்பட்டதாதல் வேண்டும். எந்தப் புண்ணியவான் இந்த மறைப்பு வேலையைச் செய்தானோ யாம் அறியோம். கொங்குச் செல்வியின் கோவிலில் மறைப்பு உண்டு என்பதாக இச்சுவற்றின் வழியாக நாம் தெரிந்து கொள்ளவும் இடம் ஆயினமை மிகவும் போற்றத் தகுந்தது.

## திருச்செங்குன்றும் வந்தீச்சுரமும்.

அர்த்தநாரி, அர்த்த நாரீச்சுரர் ஆனதைவிட மற்றொரு அதிசயமும் இம்மலையில் காண்டல் உண்டு. இவ்விடத்தில் அமைந்த குடமலை யாட்டியாம் கொங்குச் செல்விக்கு, சேரன் படிப்புறமும் பிறவும் வகுத்தும் போற்றினதோடன்றி, தாம் கொண்டு வந்த வடவரான அந்தணாளரைப் பூசை செய்யவும், கண்ணகி தேவியின் தோழியான தேவந்தியை,

"பூவும் புகையும் மேவிய விரையும்
தேவந்தியைச்" செய்கென் றேவினன்

அத்தேவந்தி சாத்தனாரின் திருத் தேவியார். நம் செல்வியின் திருத் தோழியார். அம்மடந்தை தேவி பணிபுரியும் கடப்பாடுடையர். ஆதல் கருதி அம்மடந்தையைச் சேர மன்னன் பணித்தது, பொருத்தம் உடையதே. தேவந்தி அப்பணி, தலை நின்று தெய்வீகம் பெற்றாள். அத்தேவிக்கு ஒரு கோயில் எடுக்கப் பெற்றது. அதற்குத் தேவந்தீச்சுரம் என்று பெயர். பின்னாளில் அது வந்தீச்சுரம் ஆயது. தேவந்தி என்ற சொல், வந்தி என்றாயதைவிட, மற்றொரு அதிசயமும் உண்டு. வந்தி என்ற சொல்லுக்கு வரடி என்ற பொருள் உண்டு. அந்த இடம் தற்பொழுது வரடி கல் என்றும் வழங்கப்படுகிறது. இந்த மலைக்கு வந்திமலை யென்ற பெயர் உண்டு என்பதை இந்த மலை பற்றிய புராணத்தில் காண்க. இதற்குக் கொங்குமலை என்றும் பெயர்: புராணத்திலும், திருப்பணி மாலையிலும் காண்க. கொங்குமலையில் வதிகின்ற தேவி, கொங்குச் செல்வியேயன்றோ. இமயமலை, கொங்கு மலை, வந்தி மலை, செல்வி மலை, கோதை மலை, நாக மலை முதலிய பெயர்களும் பிறவும் உண்டென்பதை புராணம், திருப்பணிமாலை முதலிய இடத்தில் காண்க.

## திருச்செங்குன்றும் காணியாளரும்

திருச்செங்குன்றிற்கு உரிய காணியாளர் சிலராவர். கொங்கு நாட்டில் காணியாளர் என்ற கூட்டத்தார் இருக்கின்றனர். இவரெல்லாம், பண்டைய அரசர் வழி வந்த குறுநில மன்னர். இவர்களுக்குப் பண்டைய அரசர்கள் தந்த காணியாட்சிகள் உரிமைகள் பட்டங்கள் பலப்பல உண்டு. காணியாளராவா, சாமந்தர்; சாமந்தராவா சிற்றரசர்; சிற்றரசராவார். வீழ்குடியுழவர் என்ற அடியார்க்கு நல்லார் உரை, ஈங்கு ஞாபகத்தில் வைக்கத் தருவது. காணியாளர்கள் கொங்கு நாட்டில் பல பாகங்களில் இன்றும் இருந்து தங்கள் காணியில் முற்பாடு பெற்று வருகின்றார்கள். அவர்களுள் பலர், குடுமி, கிள்ளி, நள்ளி, ஏனாதி முதலிய பட்டம் பெற்ற வரலாறுகளையும் அவர்கள் காணி கொண்ட வரலாறுகளையும், என்னால் எழுதப் பெறும் "கொங்கு வேளிர்" என்ற நூலில் காண்க. கொங்கு நாட்டில் பல பாகங்களுக்கும் காணியாளர் உள்ளனர். அது

போல், கொங்கின் பிரதானமலையான இந்த மலைக்கும் சில காணியாளர்கள் உண்டு. அவராவார். ஆந்தை, கோதை, கண்ணர், தூறர் முதலியோர் ஆவர். இச்செய்தி கொங்கு நாட்டுக் காணிப்பாடலால் கண்டது. அப்பாடலாவது :

ஆந்தை புகழ்க் கோதை ஆர்ந்தபுகழ்க் கண்ணகுலர்
சாந்தமிகும் தூறரிவர் தங்களுக்கு எந்தும்
செங்கோட்டு வெற்புத் திகழ்காணி ஆகுமென
அங்கேட்டில் வைத்தார் அறிந்து.

என்பது இதில் முதலாவது குறிப்பிடுவதும், முற்பாட்டுக்குரிய வரும் ஆயகாணியாளர் ஆந்தையர் ஆவர். கொங்குவேளிருள் ஆந்தை கூட்டத்தவர் மிகவும் புராதீன நிலையில் உள்ளவர். அவருக்குக் கொங்கு நாட்டில் பெரும்பாலான இடங்களில் காணிகள் காணப்படுகின்றன.

## ஆந்தை கூட்டந்தார் :

இவர் பல இடத்தில் காணியுடையவர்: இவர் சேரர்களின் வழி வந்தவர் : சேரர்கள் தங்கள் குடிப் பெயரை ஆந்தையர் என வைத்துக் கொள்ளுதல் இயல்பு, சேரர்கள் யாவரும் ஆதர் கள் : பெருஞ் சோற்று உதியன் சேரல் ஆதன், இமயவரம் பன் நெடுஞ்சேரல் ஆதன், என்ற இடத்தில் இவர்கள் கூட்டம் ஆதர்கள் கூட்டம் என்பதைக் காட்டும். ஆதன் + தந்தை ஆந்தையாதல், தொல்காப்பியத்தில், ஆதனும், பூதனும் கூறிய இயல்பொடு என்ற சூத்திரத்தால் அறிந்து கொள்க. ஆந்தை குலத்தாருக்குக் கொங்கு நாட்டில் காணிகள் பலநகரங்களி லும், பல ஊர்களிலும் உள்ளன : அவைகள் பின்வரும் பாடல்களால் காணலாம்.

அவை:

நீதிசேர் வள்ளிநகர், பரமத்தி வெள்ளைநகர்
நிகர்சடையகுளம் மருதுறை
நேர்பட்டணம் காளமங்கை முருங்கைத்தொழு
நீளவண்பள்ளி கருவூர்
தீதிலா முத்தனூர் மூலனூர் கீரனூர்
தென்னவன்மங்கை மோரூர்

திருவாச்சலூர் புத்தூர் காகம் தீண்டாமங்கை
திருச்செங் கோடோடு தோளூர்
ஓதும் பிடாரியூர் பருத்தியூர் குந்தாணி
ஒடுவன் குறிச்சி மூளசை
உற்றசெம் பியநலூர் கருதுநலூர் எதிரன்
ஊர்பாலே மேடு தேனூர்
கோதி லூற்றுக்குளி மாயன் விண்ணைப்பள்ளி
பொன்னூதி கிரி கொற்றையூர்
புகழாலத்தூர் முருங் கமங்கைமா ணிக்கநகர்
புதிய காஞ்சிக் கோவிலும்
கோதில் கூத்தப்பூண்டி வடுகநகர் ராயகுளம்
கொண்டபெயர் விளங்கு மங்கை
முலவுகரியாங் குளம் காக்கை தாரம்பாடி
ஓங்கு மானூர் குளத்தூர்
ஆதியூர் தாரியூர் அத்தனூர் ஆயிலூர்
ஆவணி கொள் பேரூற்றலூர்
அருமணநல்லூர் கொற்றை யறுபதூர் காணிகொளும்
ஆந்தை குல வேளிர் குலமே.

என்பன பாடல்கள். ஆந்தைகுல வேளிர்களாகிய இப்பெருமக்களுக்கு அறுபது ஊர்க்காணிகள் பண்டு இருந்தன. இன்றும் அச்சிறப்பு அங்ஙனமே இருக்கின்றன. இங்கு குறிப்பிட்ட ஒவ்வொரு ஊர்களும் பண்டைச் சிறப்பியல் பெற்ற பழவிறல் ஊர்களே: இந்த ஊர்கள் தோறும் சிறப்பியல்புகளும் பாடல்களும் பெற்ற சிவாலயங்கள் இருக்கின்றன. இச்சிவாலயங்கள் தோறும் ஆந்தை கூட்டத்தார்களுக்குக் காணிக்குரிய மரியாதைகள் இன்றும் உண்டு. இடையும் உண்டு. காணியேயன்றி அறுபது ஊராருக்கும் அறுபது தண்டிகைகள் இருந்தன. பல பல கீர்த்திகளும் இருந்திருக்கின்றன. அவைகளின் விரிவுகள் யாவும் என்னால் எழுதப்படும் கொங்குவேளிர் என்ற நூலில் கண்டுணர்க. ஆகவே, ஆந்தை குலத்தவர், பண்டைச் சிறப்பியல் பெற்ற சேர மன்னர் சந்ததியார் என்பதைக் குலப்பெயராலும், அவர் தம் சிறப்பியல்புகளாலும், காணி முறைமையாலும் கண்டோம். நம் கொங்குச்செல்வியின் ஆலயம் பாது காவல்முதன்மை ஆரம்பத்தில் ஆந்தை கூட்டத்தாருக்கே இருந்துவந்தது என்பதைக் காணிப்பாடல் கூறுகின்றது.

அன்றியும் கோவிலைக் கட்டி வைத்துப் போற்றும்படி செய்த தும், நாட்டுத் தலைமையும் பூண்ட சேரமன்னர் குடிக்கு இச்சிறப்பியல்புகள் இயல்பு தானே. ஆதலால், திருச்செங் குன்றில் எழுந்தருளிய கொங்குச் செல்வியின் ஆலயப் பாது காவல் ஆந்தையர்க்கு உண்டு என்பது உண்மையே.

## கோதை கூட்டத்தார்

கொங்குச் செல்வியாம் குட மலையாட்டியின் ஆலயக்காணி இரண்டாவதாகக் கோதை கூட்டத்தாருக்கு கொங்கு நாட்டுக் காணிப் பாடல் குறிக்கின்றது. இக்கோதை கூட்டத்தார் சேரன் செங்குட்டுவ மன்னனின் படைத் தலைவனுன வில்ல வன் கோதை என்பவனின் பரம்பரையாரே ஆவர். பத்தினி தேவியை இமயத்துச் சென்று கொணர்ந்த பெருமையும் பிற வும் வில்லவன் கோதை என்பவனுக்கே அமைந்திருந்த தென்ப தைச் சிலப்பதிகாரம் கற்றவர் அறிந்திருப்பர். அன்றியும், கோதைமலை என்று அம்மலைக்கு அமைந்த பெயரும், திருச் செங்குன்று என்னும் மலையடி வாரத்தில் அமைந்த நகரின் பெயர் கோதையூர் என்றிருப்பதும், கோதை கூட்டத்தாரின் காணிச் சொந்தத்தைக் காட்டுகின்றது. வில்லவன் கோதை என்பவன். வேளிர் பெருமகன் ஒரு கோதை என்ற சொல். இவன் சோனைச் சார்ந்தவன் ஆதல் கொண்டு, சேரமன் இவனுக் களித்த பட்டத்தின் பெருமையையும் காட்டுகின்றது. இப் பெருமகனுக்குப் பின் இவன் பரம்பரையார், இந்தப் பகுதி யின் தலை மக்களாக இருந்த சமயத்தில் அவர்களெல்லாம் தங்கள் பரம்பரையைக் கோதை கூட்டத்தார் என்று அழைத்து நின்றனர். அது முதல் இவருக்கு இப்பெயர் நின்று நிலவியது. சிற்றரசராகச் சேரனுக்குப் பின் இக்கூட்டத்தார் இந்த நாட்டைத் தங்களுக்குச் சொந்தமாகக் கொண்டு போற் றியதால், அந்த நாட்டின் தலைமக்கள் பலரும், இவரை நாட் டார் என்று போற்றினர். அது முதல் இவர் குடிப்பெயராகிய கோதை கூட்டம் என்ற பெயர் மறைந்து, நாட்டார் என்ற பெயரே இவரதாக ஆயிற்று.

## கண்ணர்

கொங்குச் செல்வியின் கோவிலாக இலகிய அர்த்தநாரீ சுரர் ஆலயத்தில் கண்ணகுலத்தாராகிய இவருக்கு மூன்முவது

பெருமை உரியதாக இருக்கின்றது. கண்ணர் குலத்தில் முதல் வனாக உள்ள பெருமகன் ஒருவன். சோழர் அரசு சிறப்பெய்தி இருந்த காலத்தில் சோழரது எனாதியாகும் சிறப்பெய்தி இருந் தனன். ஆதல் கொண்டு, இவன் சோழிய ஏனாதி திருக் கண் ணன் என்ற சிறப்பை எய்தினான். சேரர் அரசு அழிந்த பின் இந்த இடம் பாண்டியர் வசமாக ஆயிற்று. அக்காலத்தில் பாண்டியர் பிரதிநிதியாகப் பாண்டிய புத்திரவர்க்கத்தினரான வல்வில் ஓரியின் பரம்பரையார், அரசெய்தி யிருந்தனர். சோழர் அரசு சிறக்க இயலாத நிலையில், சோழர் படை, பல முறை தோற்கும் நிலையை யடைவதாயிற்று. இந்த நிலையில் சோழருக்குத் துப்பாக, இந்தக் கண்ணன் தோன்றினான். அசுரர்களின் மாயையால் மறைந்து நின்ற சூரியனை கண்ணன் வெளிப்படுத்திய தன்மை போல் சூரிய பரம்பரையாகிய சோழர்கள் அரசை இக்கண்ணன் இந்த நாட்டில் கொணர்ந்து நிலை நிறுத்தினான் என்று புறநானூறு கூறுகின்றது. இக்கண் ணனை மோரூர்ப் பழையன் என்றும் முளைசைக் கண்ணன் என் றும் கூறுவர். முள்ளூர்மலையில் இக்கண்ணன் சோழரது புலிக் கொடியை நிலை நாட்டினன் என்றும் புறநானூறு குறிக்கின்றது. இங்குக் குறித்த முள்ளூர்மலை நமது திருச் செங்குன்றமேயாகும். இந்த மலையை மோரூர் மலை என்றும் முள்ளூர் மலை யென்றும் கூறுவதுண்டு என்பது, கண்ண குலத் தவர் பட்டயத்தால் தெரிகின்றது. கொங்கு நாட்டின் இமயத் தில் மூவரசர் கொடியும் பறந்தது என்பது நாட்டிலர் பலர் தம் பரம்பரை வழக்கும். இக்கண்ணர் தம் முள்ளூராகிய முளைசை யம்பதி, திருச்செங்குன்றின் அடிவாரத்தில் இரண்டு மைலுக் கப்பாலுள்ள தென்பதையும், இவருக்கு வாசஸ்தானமாக உள்ளதும், இவர் தம் பரம்பரையாரின் புராதனமாக உள் ளதுமாயமோர் திருச்செங்குன்றுக்குச் சமீபத்தில் இரண்டு கல் தொலைவில் இருப்பதையும் நினைவில் இருத்திக் கொள்ளு தல் வேண்டும். கண்ணகுலத்தவர்களுக்கு இந்தச் சிறப்பு உண்டென்பதை கொங்குநாட்டுப் பாடல்களும் கூறுகின்றன.

தாங்கும் புகழ்நலஞ்செய் தார்மார்பர் மோரூரர்க்
கோங்கும் குலப்பெருமை யுண்டாக—பாங்குடனே
ஏனாதி மோதிரமும் ஈந்தார்கள் சோழரசர்
கோனாகும் வாழ்க்கை குலவ—

சோழர் அரசை நிலை பெறுத்திய வீரச் செயல் இக்கண்ண னுக்கு உண்டு என்பதை புறநானூற்றில் மாரோக்கத்து நப்ப சலையாரும் (174-வது பாடல்) சுட்டுகின்றனர்.

அணங்குடை அவுணர் கணங்கொண் டொழித்தென
சேண் விளங்கு சிறப்பின் ஞாயிறுகாணாது
இக்கண் கெடுத்த பருதி ஞாலத்
திடும்பை கொண் பருவரல் தீரக்கடுந்திரல்
அஞ்சன உருவன் தந்து நிறுத்தாங்கு
அரசிழந்திருந்த அல்லற்காலை
முரசெழுந்திரங்கும் முற்றமொடு கண்பொகு
திரங்குபுனல் நெறிதரு மிகுபெருங்காவிரி
மல்லல் நன்னாட்டல்லல் தீர
பொய்யாநாவிற் கபிலன்பாடிய
மையணி நெடுவரை யாங்கண் ஒய்யென
செருப்புகல் மறவர் செல்புறங்கண்ட
எள்ளது சிறப்பில் முள்ளூர்மீமிசை
அருவழி யிருந்த பெருவிறல் வளவன்
மதியிருள் வெண்குடை காட்டி அக்குடை
புதுமையில் நிறுத்த புகழ் மேம்படுந!
விடர்ப்புலிபொறித்த கோட்டை சுடர்ப்பூண்
சுரும்பார் கண்ணிப் பெரும் பெயர் நும்முன்
ஈண்டுச் செய்நல்வினை ஆண்டுச்சென்றுணீயர்
உயர்ந்தோர் உலகத்தும் பெயர்ந்தனர்
ஆறுகொள் மருங்கில் மாதிரம் துழவும்
காலை நெஞ்சத் தவலந்தீர
நீ தோன்றினையே நிரைத்தாரண்ணல்
கல்கனிபொடியக் கானம்வெம்ப
மல்குநீர் வரைப்பில் இயம்பல உணங்க
கோடை நீடிய பைதறுகாலை
இருநிலம் நெளிய ஈண்டி
உருமுரறு கருவிய மழை பொழிந்தாங்கே.

அப்பாடல் இதுவாகும். இதில் கண்ணனின் பெருமை கூறிய நிலையில் அறிந்து கொள்க. இக்கண்ணர்கள் காங்கேயர்கள் என்ற பெயருடன் துலங்கிய நிலையைப் பாலபாரதி முத்துச் சாமி ஐயர் பாடிய பாம்பணகவுண்டன் குறவஞ்சியிலும் நாட் டுப்பாடலிலும் அறிந்து கொள்க. செங்கோட்டு வெற்பையும்,

பிற நகரங்களையும்கொண்டு அரசுபுரிந்த கண்ணர்கள் பலருக்கும், முதல்வன் கண்ணன் ஆதலின், இவர்கள் கண்ண குலத்தவர் ஆனூர்கள். இவர்கள் தற்பொழுது மோரூர்க்கண் ணர் என்றும் முளசைக் கண்ணர் என்றும் கிழாம்பாடிக் கண் ணர் என்றும் வழங்கப்படுகின்ருர்கள். இவர்களுள் மோரூர்க் கண்ணர் சின்னவகையார் என்றும், கிழாம்பாடிக் கண்ணர் பெரிய வகையார் என்றும் குறிக்கப்படுகின்ருர்கள் இவர்களில் சூரிய காங்கேயன், உரிச்சொல் நிவண்டு செய்த காங்கேயனும் தக்கைராமாயணம் செய்வித்த காங்கேயனும், சரித்திரப் பிரசித்தி பெற்றவர் ஆவர். இவர்களின் சரிதவிரிவை, என்னுல் எழுதப்படும் "கொங்கு வேளிர் வரலாறு" என்னும் நூலால் அறிந்து கொள்க.

## தூரர்

திருச்செங்குன்றில் உள்ள நம் செல்வியைப் போற்றும் உரிமை, அடுத்தபடியாக தூரர் என்ற கொங்குவேளிர் கூட்டத் தாருக்கே அமைகின்றது. சேரன் மாந்தரன் காலத்து மைசூர்ப் பகுதியினின்றும் இந்த நாட்டில் குடியேறி அவனது அமைச் சராகும் பதத்தை இவர்களின் முன்ஞேன் ஒருவன் பெற்ருன் என்பதை, மாந்தரன் சேரல் மெய்க்கீர்த்தி நமக்குக் கூறுகின் றது இவன், கொங்குநாட்டுக்குத் தூரமான பகுதியினின்றும் வந்தவன் அதலின், இவனை அக்காலத்தவர் தூரர் என்று அழைத்தனர். அக்காலமுதல் இவனைச் சார்ந்த வேளிர்களுக் குத் தூரன் கூட்டத்தார் என்ற பெயர் அமைவதாயிற்று. இவர் தம் விரிந்தவரலாறு இந்த நூலில் காங்கேயச் செல்வி என்ற தலைப்பில் கண்டுணர்க. இவரேயன்றி இவ்வம்மையைப் போற்றும் சிறப்பு, விலையர் (வெளியர்) செல்வர் (செல்லர்) ஆகிய பல கூட்டத்தாருக்கும் அமைந்தன என்ருலும், அதற்கு விளக்கமான சரிதம் கிடைக்கவில்லை ஆகையால், அறிஞர்கள் இதற்குரிய சரிதக் குறிப்பைத் தருவார்களாஞல் அடுத்த பதிப்பில் வெளியிடுவேன் என்பதை அறிவித்துக் கொள்ளு கின்றேன்.

## கொங்குச் செல்வி கோவில் கொண்ட இடங்கள்

சேரன் செங்குட்டுவன் கோவில் எடுத்து விழாவயர்ந்த அமயம், உடனிருந்து வரம் பெற்ற மன்னர்கள் சிலர். அவரா வார்;

குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல் சூழிலங்கைக் கயவாகு மன்னரும்,

ஆவார்கள். அவர்களெல்லாந் தங்கள் நாட்டின்கண் கோவில் கட்டிக் கொண்டாடச் செல்விபால் வரம் பெற்றனர். தந்தேன் வரம் என்று அம்மையும் வரந்தந்தனள். ஆதலின் அவர்கள் நாட்டில் இவ்வம்மையின் ஆலயங்கள் இருத்தல் வேண்டும். அவர்கள் யார்? அவர்கள் நாடுகள் எவை? அவர்கள் கட்டிய கோவில்கள் எவை? என்ற ஆராய்ச்சியில் செல்லுவதும் அமைவுடையதே.

## குடகக் கொங்கர்

"குடகக் கொங்கராவார்: கொங்கிளங்கோசர். கொங்கிளங் கோசராவார் குறும்பு செலுத்துவார் சில வீரர்." என்பர் அருப்பத உரையாசிரியர். இவர்கள் நாட்டகத்து நம் செல்விக்குக் கோவில் எடுத்தார்கள் என்பது.

"அது கேட்டுக் கொங்கிளங்கோசர், தங்கள் நாட்டகவயின் மங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழை தொழில் என்றும் மாறாதாயிற்று" என்று வரும் உரை பெறு கட்டுரையாலும் தெரிந்த தொன்று. இவர்கள் கொங்கின் மேற்குப் பகுதியில் நின்று அரசெய்தியவர் ஆதலின் குடகக் கொங்கர் என்றும் வழங்கப் பெற்றனர்.

இவர்கள் வாழ்ந்தநாடு பண்டு கோசர்நாடு என்றும், இவர்கள் துளுநாட்டவர் ஆதலின் இவர்கள் துளுநாட்டுக் கோசர் என்றும் கூறப் பெற்றனர். இவர்களில் முது கோசர் என்று ஒரு சாராரும் இளங்கோசர் என்று ஒரு சாராரும் இருந்தனர். இங்குக் குறிக்கப் படுபவர் இளங்கோசரேயாவர். இவர்கள் வாழ்ந்த பகுதியை ஆறை நாடு என்றும் பழனி நாடு என்றும் கூறப் பெற்றதும் உண்டு. இவர்கள் தலைநகரமாக உள்ள நகரங்கள் கோசம்புத்தூர், கவசை, பெரும்பழனி, பதுமன்பள்ளி, கஞ்சப்பள்ளி, நரியன்பள்ளி, முதலியனவாகும். இவர்கள் அரசியல் நிலமாகப் பண்டு இருந்தபகுதி, தற்பொழுதைய கோயமுத்தூர் தாலூகா, அவினாசி தாலூகாவும் சேர்ந்த நிலப்பரப்பேயாகும். இவைகள், இவர்களுக்கு முற்

கால முதல் தற்காலம் வரையிலும் இருந்து வரும் காணி நிலை யால் தெரியவருகின்றது. கொங்கு மண்டில சதகத்தும் இது வலியுறுகின்றது. இவர்கள் தற்பொழுது, பால வேளாளர் என்ற பெயரில் வழங்கப் படுகின்றனர். இவர்களுக் குரிய நாடு கோல் நடத்தும் பால விளங்கோமான்கள் தங்களுக்கு நால் வகைத்த நாடாய் நவில்வதெவன்? "பால் வளத்த நற் பழனி நாடும், நல்லபுகழ் சேர் ஆறைச், சொற்பதித்த நாடும் எனச்சொல்."

என்ற நாட்டுதனிப் பாடல் கூறும் நாடுகளேயாகும். இவர் கள் தலை நகரங்களும் பிறவும் குறிக்கும் மற்றொரு பாடலும் உண்டு. அது:

> நற்பழனி கோன நகர்அழும்பில் சீர்க்கவசை
> விற்பதுமன் பள்ளி மிகும்பலவூர்—அற்புமிகும்
> பாலவேளாளர் பதியும்நற்காணியுமென்
> றேலவே வைத்தார் எடுத்து.

இப்பாடல்: இதனுள் இவர்தம் தலைநகரங்கள் காணப் படு கின்றன. நிற்க, இவர்தம் செல்வியின் கோவில்கள் பற்றி இனி ஆராய்வோம்.

பெருமா நல்லூர் என்றதொரு சிறு நகரம் திருப்பூருக்கு ஆறுகல் தொலைவில் உள்ளது. இந்த நகரம் பண்டைச் சிறப் பியில் பெரிதும் பெற்றதொரு நகரம். சங்ககாலங்களிலெல் லாம் ஊர் என்ற ஈற்றையுடையதாகவே ஊர்ப் பெயர்கள் காணப்படும். அவ்வழியில் இப்பெருமாநல்லூர் அமைந்திருத் தல் போற்றத் தகுவது. பண்டைப் பெருமை சான்ற ஊர்கள் பல, தலைய நல்லூர், காங்கேயநல்லூர், வீரவ நல்லூர் என் றாற் போல்வன உண்டு. பெருமாநல்லூர் என்ற நகரில் கொண்டத்துக்காளி என்ற பெயரில் ஒரு தேவியின் ஆலயம் சிறப்புடன் துலங்குகின்றது. இந்த ஆலயத்துள்ள தேவிக்கு நித்தியப்பூசையும், ஆண்டு விழாவும் சிறப்புற நடைபெறு கின்றன. இவ் விழாவில் பெருங்கூட்டம் கூடும். அக்கினிக் குண்டம் ஒன்று அறுபதடி நீளத்தில் அம்மன் சன்னதியின் முன்பு இன்றும் துலங்குகின்றது. இந்தக் குண்டத்தில், விழாவின் போது கட்டைகளை நிறையஅடுக்கித் தீயைப்

பெருக்குவர். கட்டைகள் யாவும் தீயாக ஆனபின் அதனை நன்கு கட்டிப்பர். கட்டித்த குண்டத்தில் பட்டினி விரதமிருந்த பக்தர்கள் பலர் இறங்குவர். விரதபங்கம் உடையாரைத் தீச் சுட்டுவிடும். விரதியரை தீச்சுடுதல் இல்லை. இவ்விரதம், இங்கு இன்றும் கொண்டாடப் படுகின்றது. இத்தீயில் இறங்குதற்கு உரிய காரணம் எது? பத்தினி தேவி மதுரைமாநகரைத் தீயால் எரித்தனள். அக்காலத்து அனற்கடவுளால் பிழைக்கத்தகுந்தார், பலர்காணப்படுகின்றனர். அவர்களாவார்:

> "பார்ப்பார் அறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்
> மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டுத்
> தீத்திறத்தார் பக்கமே சேர்."

என்பதில் வரும் இவர்களே.

அம்மையை நம்பித் தீயில் இறங்குவோரைத் தீச்சுடாத தன்மையை அறிந்தவர் இத்தேவி கண்ணகி தேவியே என்று திண்ணமாய்க் கூறுவர். இவ்விழாவில் கலந்து முதல் மரியாதை கொள்ளுபவர் இந்த நாட்டில் வரம் பெற்ற இளங்கோசர் மரபினரான பால வேளாளரே யாவர். இன்னும் இவர்களுக்கே முற்பாடு படைக்கல மெடுத்தல் ஆகிய பண்பும், சிறப்பும் இருந்து வருதலே இத்தேவி கண்ணகி என்பதற்கும் இவரே அவர் என்பதனையும் காட்டும். பால வேளிருக்குப் பின் கொங்கு வேளிருள் சில கூட்டத்தாருக்கு அடுத்த மரியாதையும் பெருமையும் வழங்கப்படுகின்றது. அவர் வரலாறு கொங்கு வேளிர் வரலாற்றில் காண்க. இங்குக் குறித்த கொண்டத்துக் காளியின் ஆலயம் நிலை பெற்ற பெருமாநல்லூர் பெரும் பழனி நாட்டின் தலைநகரம் என்பதை நினைவில் வைக்க வேண்டும். பதுமன்பள்ளி, கஞ்சப்பள்ளி, நரியன்பள்ளி முதலிய ஊர்களிலும் கொண்டத்துக் காளியின் கோவில்கள் உள்ளன, குண்டங்களும் உண்டு. இங்கும் இவருக்குத் தான் முற்பாடும் முதல் மரியாதையும் உண்டு. பால வேளிர் பலர், மேற்குறித்த ஊர்களில் சிறப்பியலுடன் வாழ்ந்து வருதல் கண்கூடு, இந்த முறைமையால், ஈங்குள்ள பால வேளிர்களே அவ்விளங் கோசர் என்பதும், கொண்டத்துக் காளியே கண்ணகி தேவி என்பதும் பெறப்படுகின்றது. இவ் வரலாற்றுக்

குரிய இளங் கோசரில் ஒரு சிலர் மகுட வர்த்தனராய் "மன்ருடியார்" என்ற பட்டத்துடன் சிற்றரசப் பதத்துடன் வாழ்ந்து வருதலையும் பிறவற்றையும் எனது கொங்கு வேளிர் வரலாற்றில் கண்டு கொள்க:

## மாளுவ மன்னரும் கொங்குச் செல்வியும்

மாளுவ வேந்தர் என்பவர், திருச்செங்குன்றில் செங்குட்டுவ மன்னன் விழாக் கொண்டாடிய அமயம், உடனிருந்து கண்ணகிபால் வரம் பெற்றவர். இவர் தம் நகரங்களிலும் நம் செல்வியாம் பத்தினி தேவி, கோவில் கொண்டிருத்தல் வேண்டும். இம்மாளுவர்கள் யார்? இவர்கள் எங்குளர் என்ற ஆராய்ச்சி அவசியம் ஆகும்.

கொங்கு நாட்டில் காவிரியின் வடகரைப் பகுதியைத் தமக்குரிய நிலமாகக் கொண்டு மாளுவ மன்னர்தம் பரம்பரையார், பண்டு மாளுவர் என்ற பெயருடன் வசித்து வந்தனர். இவர்கள் தென்னுட்டுக் கடல் கோளுக்குப் பின் வந்து தங்கிய கூட்டத்தாருள் ஒருவர். கங்கையின் தென்கரைப் பகுதியின் றும் போந்து, காவிரியின் தென்கரைப் பகுதியில் தங்கிய கங்கைகுல வேளிர்கள் தென்திசையார் என்று அழைக்கப் பெற்றது போலவும், காவிரியின் வடகரையில் தங்கிய இவர்கள் மாளுவர்கள் என்றும், வடகரையார் என்றும் அழைக்கப் பெற்றனர். தென்னுடு கடல் கொள்ளப்பட்ட அமயம் வடநாடு சென்ற கூட்டத்தவர் வந்து தென்னுட்டில் தங்கிய அமயம், தாங்கள் வடநாட்டில் எந்தப் பகுதியில் தங்கினுர்களோ அந்தப் பகுதியின் பெயரால் பிறர் அழைக்க வாழ்ந்தவர் ஆவர் கடல் கோளின் பின், முதல் முதலாக வந்து அரசு புரிந்தவர் பாண்டியர். பின்னர் ஒவ்வொரு கூட்டமும் வரிசை வரிசையாக வந்து கூட்டங் கூட்டமாக வந்து தாங்கள் வாழ்ந்து வந்தஅந்தந்தப் பெயராலேயே அழைக்கப் பெற்றனர். கலிங்க நாட்டினின்றும் வந்தவர் தங்களைக் கலிங்கர்கள் என்றும், பங்கள (வங்காளம்) நாட்டினின்றும் வந்தவர், தங்களைப் பங்களர் என்றும், கருநாடகப் பகுதியில் தங்கி வந்தவர் தங்களைக் கருநாடகர் என்றும் அழைக்கும்படி யிருந்தனர்.

அதுபோல் மாளவம் அல்லது கட்டியர் பகுதியில் தங்கி வந்த தமிழர்களாகிய இவர்களும் தங்களைக் கட்டியர் என்றும், மாளவர் என்றும் அழைத்துக் கொண்டனர். ஆயிரம் வருஷங்களுக்கு முன், குலோத்துங்கச் சோழன் கொங்குவேளிரை ஒன்றுபடுத்துமுன், அவர்கள் யாரும் பண்டைப் பெயராலேயே வழங்கப் பெற்றிருந்தனர். என்பதைக் கொங்குவேளிர் வரலாறுகளில் கண்டதொன்று. உதாரணமாக பங்களா நாட்டினின்றும் போந்த கொங்கு வேளிர்கள் யாரும் பங்களர் என்று குறிக்கப்பெற்றனர் என்பதும், அவர்கள் தங்களை அங்குக் குறிக்கும் பெயராலேயே "தோடர்கள்" என்று கூறிக்கொள்கின்றனர்கங்கை. நாட்டினின்று வந்தவர் பலரும் தங்களைக் கங்கர் கூட்டத்தவர் என்று அழைத்துக் கொள்வதும் ஈங்கு இன்றும் விளக்கமே. பல்லவ நாட்டினின்றும் போந்து கொங்கில் குடியேறிக் குறும்பு செலுத்திய சிற்றரசர்கள் யாரும் தங்களைப் பல்லவர் என்றும் காடவர் கூட்டத்தவர் என்று அழைத்துக் கொள்ளுவதையும் யாம் இன்றும் காணக்கூடும். இவைகள் விளக்கம் கொங்குவேளிர் என்ற எனது நூலில் காண்க. செங்குட்டுவ மன்னன் காலத்தில் மேற் குறிக்கும் கூட்டத்தவர் இருந்தனர். அவரெல்லாம்

"கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர், கங்கர், பல்வேற் கட்டியர்,
வடவாரிய ரொடு வண்டமிழ் மயக்கத்துன்
கடமலை வேட்டம் என் கட்புலம் பிரியாது"

என்பது சிலப்பதிகாரம்; இது காட்சிக் காதை; வில்லவன் கோதையின் வாக்கில் அடிகள் அருளியது. இங்குக் குறிக்கப் பெறுபவர் தமிழ் மயக்கத்தைச் சார்ந்தவர். தமிழ் நாட்டைச் சேர்ந்த சிற்றரசர் "வண்டமிழ் மயக்கத்துக் கடமலை வேட்டம்" என்று பேசப் பெறுதலுங் காண்க; ஆகவே செங்குட்டுவன் காலத்து, கட்டியர் எனப்படும் மாளுவர் அரசெய்தியிருந்தனர்ஆவர். அந்த மாளுவ மன்னரேயிவராவர். இவருக்குக் கட்டியர் என்ற பெயரும் உண்டு. இவர்கள் வழிவந்த பெண்ணொருத்தியை மணந்து நெடுஞ் சேரலாதன் என்னும் சேரமன்னன் நார்முடிச் சேரல் என்ற மகனைப் பெற்றான் என்றும், அவன் ஆளுகையின் பின்னர் இவர்கள் யாரும் நார்முடிக்

கட்டியர் என்று அழைக்கப் பெற்றனர். எனவுந் தெரிகின்றது. இவர்களுக்கு மாளவர், கட்டியர், நார் முடியர், வடவர், அதிகர், கனவாளர் என்ற பெயர்களும், உண்டு. இது கொங்கு நாட்டுக் காணிப்பாடலால் தெரிகின்றது அப்பாடலாது.

"மாளவர்கள் கட்டியர்கள் மாண்புமிகும் நார்முடியர்
ஈழமதை வென்றெதிர்த்தவர்கள்—மாளக்
கனவாளைக் கைப்பிடிக்கும் கனவாழ்நர் வாழ்வு
தனமேறும் நல்லழகை தான்."

என்பதாகும். இந்தப் பாடலில் இவர்கள் பண்டு இந்தப் பெயர்களால் அழைக்கப் பெற்றனர் எனத் தெரிகின்றது இவர்கள் வடவர்கள் ஆதலில், கொங்கின் வடபகுதியாகக் கூற இடனுண்டு. சேலத்தின் வட பாகமும், தர்மபுரி சேர்ந்த பகுதியும், கோபிசெட்டிபாளையம் தாலூகா சத்திய மங்கலம் பகுதி, பண்டு இவர்களது ஆட்சி நிலமாகத் தெரிகின்றன. கொங்கிளங்கோசர்கள் குடகக் கொங்கர்கள் என்று அழைக்கப் பெற்றது போல், இவர்கள் வடகொங்கர் அல்லது கட்டியர் என்று அழைக்கப்பட்டனர். கட்டியர், அதிகர் ஆகியவர்தம் வரலாறு புறநானூறு அகநானூறு முதலிய நூல்களில் குறிக்கப்பெறுகின்றன. கொங்கில் இவர்களது உரிமை நிலம் காஞ்சிக் கோவில் நாடு என்று தற்காலத்தில் கூறப்படும் நாட்டுப் பகுதியே. இது கொங்கு நாட்டுக் காணிப்பாடலால் காணலாம். அது,

"வடகரையர் மாளவர்கள் மாண்பார் அதிகர்
நடவும்படையர் நலஞ்சேர்—புடவியவர்
சொந்தம் எனநினையும் தோன்றலருக்கே நாடு
விந்தை திகழ் காஞ்சிக்கோவில்"

என்பதுவாகும். இப்பாடலில் இவர்களது நாடாகக் கூறப்படும் நாடு- காஞ்சிக்கோவில் நாடு என்பதாம். இந்த நாட்டில் இம்மாளவர்கள் வாழ்ந்தார்கள், இவர்களது தலைநகரம் அளகாபுரி நகரம் ஆகும். இதனைக்

"கனவாளைக் கைப் பிடிக்கும் கனவாளர் வாழ்வு
தனம்சேரும் நல்லழகை தான்"

எனக் கொங்குப் பாடல் குறிக்கின்றது. இப் பாடலில் வந்துள்ள அழகை நகர் எது என்று காணுதல் வேண்டும். காஞ்சிக் கோவில் நாட்டில் பல ஊர்கள் காணப்படுகின்றன. அவைகள் கீழ் வரும் பாடலால் விளங்குகின்றன அது,

பன்னு தமிழின்பம் சிறந்த தென் காஞ்சிநகர்
பாங்கான கூகலூரும்
பார் புகழ்ந் தருள் கவந்தப் பாடியுடனதிக
பழனமுள பாரியூரும்
பொன்னினியல் வாழும் பெருந் தலையூருடன்
பொருவில் புலியூர் முடச்சூர்
புங்கமிகு பங்கயமி லங்கிய கலிங்கயம்
புகழே விளங்கி நாளும்
மன்னுமணி மேடைதிகழ் மின்னிய அழுக்குளி
வளமிகு குளப்புல்லூரும்
வானவர் விளங்கு தாளுன்றியும் பூஞ்சோலை
மருவுபுகழ் அயிலூருடன்
கன்னிபங் கானர்திரு நீலகண்டேச்சுரர்
கவுரியுமை கருணையதனுல்
காஞ்சி வள நாட்டவர்கள் நீடுழி காலமும்
காசினியில் வாழ்க மாதோ.

இப்பாடல் இந்த நாட்டுப் பாடல். இப்பாடலில் பல ஊர்கள் காணப்படுகின்றன. இவ்வூர்கள் பலவும் மாளவர்கள் என்னும் வடவருக்குச் சொந்தமாகப் பண்டு இருந்தன. இந்த ஊர்கள் பலவற்றுளும் "பாரியூர்" என்ற பேரூர் ஒன்று இப் பாடலில் காணப்படுகின்றது. இந்த ஊருக்குப் பண்டு அழகாபுரி என்ற பெயர் உண்டு என்பதை இந்த நாட்டவர் பலரும் அறிவர். இந்த நாட்டைப் பற்றியும், இந்த நகரைப் பற்றியும் அறிஞர்கள் கூறும் வரலாறு நினைவுகூர்த் தருவது.

மாளவர்கள் என்னும் கூட்டத்தார், கடல்கோளுக்குப் பின்னர், வடநாட்டினின்றும் போந்து இப்பகுதியில் தங்கினுர்கள். தங்கிய அவர்கள் இப்பகுதியில் பலப்பல ஊர்களை அமைத்து வாழ்ந்து வந்தனர் இப்படி நல்வாழ்வு வாழ்ந்து வந்தும், இவர்களை இப்பகுதியில் அருகேயுள்ள நாட்டவர் வியவாது இருந்தனர். இந்த நிலையில் வருந்திய இவர்கள் இந்திரனை

நோக்கி நோன்பொன்று இயற்றினர். நோன்பின் முடிவில் இந்திரன் இவரெதிர் வந்தனன். நின்ற இவன், இவர்களை நோக்கி யாதுவேண்டி என்னை அழைத்தீர்கள் என்றனன். இவர்கள் இந்திரனைப் பார்த்து இங்குள்ள யாவரினும் யாங்கள், அதிகமான வளத்தோடு சிறக்க வேண்டும். யாங்கள் இருக்கும் இந்த நாடும் அதிகர் நாடு என்று புகழப் பெறுதல் வேண்டும். நீ வந்திருந்த காரணத்தால் இந்த நகரம் இந்திரபுரி என்றும், உன்னுடைய வரத்தால் பொலிவு பெற்ற காரணத்தால், இந்த நகருக்கு "அளகாபுரி" என்ற பெயரும் எய்தல் வேண்டும். இந்த நகரில் உனது கற்பகச் சோலை போன்ற சோலை யொன்று அமைய வேண்டும். அன்றியும், இந்த நாட்டவர் யாவரும் பயிரிடாத புதிய பயிர் ஒன்றை யாங்கள் பயிரிட்டு மேம்பாடு அடையவேண்டும் என்றனர். இந்திரன் இவர்கள் விரும்பிய யாவற்றையும் தந்ததோடு, புதிய பயிராகக் கரும்புப் பயிரையுந் தந்தனன். இந்திரன் அருளால், பலவற்றையும் பெற்ற இவர்கள் நாளுக்கு நாள் பெருஞ் செல்வத்தோடு வளம் பெற்று யாவரினும் அதிகமான நிலையில் விளங்கி யிருந்தனர் என்ப.

இந்த வரலாறு, புறநானூற்றில் அதிக மானைப்பாடிய அமரர்ப் பேணியும் என்று தொடங்கும் பாடலுடன் ஒத்து வருவதை ஆய்ந்து கொள்க. இவ்வதிகர் குடியின் மேம்பாட்டை யறிந்து நெடுஞ் சேரலாதன் என்னும் சேரமன்னன், இவர்கள் குடியில் பெண் கொண்ட தன்றி, சேரமான் என்ற பட்டத்தையும் தந்தனன். பெருஞ் சேரலாதனுகியஅவன், தனது மகன் ஒருவனுக்கு நாரால் செய்த முடியையும் புனைந்து, நார் முடிச் சேரல் என்ற பெயரையும், அப்பகுதித் தலைமையையும் அளித்துப் போற்றினன். நார்முடிச் சேரலின் ஆட்சியின் கீழ் வந்த கட்டியர் யாவரும், அந்தக் காலமுதல் நார்முடிக் கட்டியர் என்ற பெயரையும் எய்தினர் ஆவர். அவர்கள் வாழ்ந்தபதி மற்றையர் பதிகளைக் காட்டிலும் பெரியதாக இருந்தமையால் பாரியூர் என்ற பெயரையும் எய்திற்று என்பர்.

## பாரியூர்ச் செல்வி

பாரியூர் என்ற பழம்பதி, காஞ்சிக் கோயில் நாட்டில், கோபி செட்டி பாளையத்துக்கு இரண்டு கல் தொலைவில் இருக்

இன்றது. மேற் கூறிய சரித்திர மேம்பாட்டைப் பெற்றது இப்பதியேதான். இப்பதி மிகவும் புராதனமானது. ஆதலால் இங்கு ஊர் ஒன்றும் இல்லை. அமரவிடங்கப் பெருமான் என்னும் சிவபிரான் ஆலயமும், பெருமாள் ஆலயமும் இங்குத் திகழ்கின்றன. கொண்டத்துக்காளி என்ற நம் செல்வியின் ஆலயம் ஒன்றும் ஈங்கு உண்டு. சிவபிரான் ஆலயம் மேற்குப் பார்த்து இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாலயங்கள் யாவும் மிகவும் புராதனமானவையே. இவ்வாலயங்களை யடுத்த பாகங்களில் பெரு நிலப்பரப்பு ஒன்று. இங்குப் பேரூர் ஒன்று இருந்து அழிந்ததற்கு உதாரணமாகப் பொலிகின்றது. சிவ பெருமான் கோவிலும், திருமால் ஆலயமும் மிகப் புராதன மானவை யென்பதை, அவைகளின் கல் வெட்டுக்களால் யாம் நன்கு அறியலாம். தற்பொழுது ஈங்கு ஒரு பூஞ்சோலையொன்று அழகுடன் விளங்குகின்றது. நீரோட்ட மிகுந்த கால்வாய் ஒன்று, இப்பகுதியில் பாய்ந்து செல்கின்றது. இப்பகுதியை யடுத்து, நஞ்செய் நிலங்கள், கண்ணையும் கருத்தையும் கவரும் கவினை எய்தி விளங்குகின்றன.

இங்கு ஒரு செல்வியின் ஆலயம் பழைமை பெற்ற நிலையில் இருந்தது, புதிப் பிக்கப்பெற்று பல நலங்களுடன் காணப் படுகின்றது. அம்மனுக்கு நித்தப் பூசையும் விழாவும் இன்றும் சிறக்கின்றது. அம்மன் சந்நதி முன்பு அக்கினிக் குண்டம் அறுபதடி நீளத்தில் காட்சி யளிக்கின்றது. இவ்வம்மையைப் பாரியூர் அம்மன் என்றும், குண்டத்துக் காளி என்றும், இங்குள்ள பெரியார் பேசுகின்றனர். சிவாலயத்தின் பெருமையினும் இவ்வம்மையின் ஆலயப் பெருமையே, இங்கு அதிகமாகப் பேசப் பெறுகின்றது. இவ்வாலயம், அழகிய வேலைப் பாட்டுடன் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. பூசை முறைகளும், பிறவும், அலங்காரங்களும், எந்த ஆலயத்திற்கும் இல்லாத சிறப்பியலில் நடக்கின்றன. இந்த ஆலயம், இவ்வாறு சிறப்பதற்கு காரணம், வடகரையார், அல்லது, மாளுவ மன்னர் வழி வந்த வேளிர் பெருமகன், உயர்திரு, முத்து வேலப்ப கவுண்டர் அவர்களதும், அவர்கள் பரம்பரையில் வந்த மற்றையவர்கள்தும், பிற அன்பர்களுடைய நன்முயற்சியுமே காரணம் என்னலாம். கோயிலின் ஒரு பாகத்தில், இப் பகுதி நிலத்திற்

குரிய தலைவனும், மாளுவ மன்னர் வழி வந்த "கனவாளன் செட்டி பிள்ளையப்பன்" சிலையும் அவன் தேவியின் சிலையும் கோவில் கொண்டு திகழ்கின்றன.

## செல்வியும் குண்டமும்

பாரியூர்ச் செல்வி, நம் கண்ணகியாரேஆதலின், இவர் ஆலயத்துக்குமுன், ஒரு குண்டம் இருப்பது இயற்கையே யாகும். இக்குண்டத்தில் அமைந்த தீயில் இறங்கும்விழா, ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதத்தில் கொண்டாடப்படும். பல விரதிகள் அம்மனின்அருளால், தீயில் இறங்கி அருள் பெறுவர். இவ்விழா, மிகவும் சிறந்த நிலையில் இன்றும் கொண்டாடப்படுகின்றது.

## கோவிலும் காணியும்

இந்த அம்மன் ஆலயம், இந்த நாட்டிற்கே சொந்தம் என்றாலும், இவ்வாலயத்தின் முற்பாடும் பிறவும், மாளுவ வேந்தர் வழி வந்த, வடகரையாரில் கனவாளனருக்கே இருந்து வருதல் குறிப்பிடத் தக்கது. ஆகவே, இந்தப் பழைய முறையின் உண்மையை அறியும் பெருந்தகவினர், இத்தேவியைக் கண்ணகி என்றும், இவரை மாளுவர் என்றும் கூறுதலில் ஐயம் உறுர்.

இம்மாளுவர்கள், நார்முடியர் ஆதலின், இவரை நார்முடிக் கட்டியர் என்று அக்காலத்தவர் அழைத்தனர். நார்முடிக் கட்டியர் என்ற சொல், தற்பொழுது மாறுபட்டு, நரப்பு கட்டியர் என்று வழங்கப்படுகின்றது. நார்முடியராகிய இவர்கள், காஞ்சிக் கோவில் நாட்டில், பாரியூர் (புதுப்பாளையம்,) சவண்டப்பூர், கூகலூர், நஞ்சகவுண்டன்பாளையம், காசிபாளையம், அரியப்பன்பாளையம், முடச்சூர், கொங்கர்பாளையம், வாணிபுத்தூர், தூக்கநாய்க்கன்பாளையம் முதலிய ஊர்களில், பெருமிராஸ்தாரராகவும், சிறந்தவர்களாகவும், அரசியல் நிலத்தில் பங்கு கொள்ளும் தலைவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

## நூற்றுவர் கன்னரும் பன்னூரைமாரியும்

பன்னூரை என்றதொரு பதி, சத்தியமங்கலத்திற்கு மேற்கில், மைசூர் செல்லும் வழியில் இருக்கின்றது. இப்பதி தற்

பொழுது இல்லை. ஆயினும் இது பழநகர் என்றநிலை, இங்குப் பல அறிகுறிகளால் தெரிய வருகின்றது. இப்பழம் பதியில் ஒரு செல்வி விளங்குகின்றாள். இச் செல்விக்கு, இங்கு மாரி என்ற பெயர் வழங்கப்படுகின்றது. இப்பதி, மலையடி வாரத்தில் இருக்கின்றது. மழைவளந்தரும் தெய்வமாதல் கருதி மாரி என்ற பெயரை இங்கு ஆலயம் எடுத்த பெருந்தகையார் இட்டனர் போலும். இவ்வம்மன் சிறந்த சக்தி வாய்ந்த தெய்வம். கொள்ளேகாலம், மைசூர் செல்லும் மக்கள், இந்த இடத்தில் தாங்கள் ஏறிச் செல்லும் ஊர்திகளை நிறுத்தி அவ்வூர்திகளினின்றும் இறங்கி, அம்மனை வணங்கிச் செல்லுவார்கள். இவ்வம்மைக்கு நித்தப் பூசையும் ஆண்டு விழாவும் உண்டு. அம்மன் சந்நதியின் முன்பு, ஓர் அக்கினிக் குண்டம் உண்டு. வருடந்தோறும் மாசி மாதத்தில், இங்கு விழாக் கொண்டாட்டம் நடைபெறும். பல்லாயிர மக்கள் கூடி விழாக் காண்பர். அக்கினிக்குண்டத்தில் பக்தியுடன் இறங்கி அம்மனைத் துதிப்பர். அம்மனின் அருளைப் பெற்றுப் போவர்.

## காணியாளர்

"கன்னரர்" வகுப்பைச் சார்ந்த வேளிர் பலர், இந்த ஆலயப் பாதுகாவலில் இன்றும் பங்கு கொள்கின்றனர். இந்த ஆலயத்துக்கு இவரே காணியாளரும் ஆவர். இவர் கன்னரம் பேசுகின்றவர். ஆதலால் கன்னரர் எனப் பெற்றனர். இவர் செங்குட்டுவ மன்னன் காலத்துச் சிற்றரசராய் இருந்தவர். அக்காலத்து, இவர், நூறு இடங்களில் ஒற்றுமையாய் இருந்து அரசு புரிந்து வந்தமை கருதி இவர் நூற்றுவர் கன்னர் என்னப்பட்டார். செங்குட்டுவ மன்னன் காலத்து, அம்மன்னனிடம் வேற்றுமையின்றிக் கலந்தவர் இவர் எனச், சிலப்பதிகாரம் செப்புகின்றது.

சஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற
கஞ்சுக முதல்வர் ஈரைஞ் ஞூற்றுவர்
சேயுயர் விற்கொடிச் செங்கோல் வேந்தே!
வாயிலோர் என வாயில்வந் திசைப்ப
நாடக மகளிரும் நலத்தகு மாக்களும்
கூடிசைக் குயிலுவக் கருவியாளரும்

சஞ்சயன் தன்னொடு வருக ஈங்கென
செங்கோல் வேந்தன் திருவிளங் கவையத்து
சஞ்சயன் புகுந்து தாழ்ந்து பலவேத்தி
ஆணையிற் புகுந்தவீ ரைம்பத் திருவரொடு
மான்வினை யாளரொடு வகை பெறக் காட்டி
வேற்றுமை யின்றி நின்னொடு கலந்த
நூற்றுவர் கன்னரும் கோற்றெழில் வேந்தே!
வட திசை மருங்கின் வானவன் பெயர்வது
கடவுள் எழுதவோர் கற்கே யாயின்
ஓங்கிய இமயத்துக் கற்கால் கொண்டு
வீங்குநீர்க் கங்கை நீர்ப்படை செய்து ஆங்கு
யாம்தரும் ஆற்றலம் என்றனர் என்று

கன்னரர் கூறியதாகத் தெரிகின்றது அக்கன்னரரே பத்தினித் தெய்வத்தை இமயத்தினின்றும் கொணர்ந்து, கங்கையாற்றில் நீர்ப்படை செய்தனர் ஆவர் அத்தகைய அவர். செங்குட்டுவ மன்னன் காலத்துப் பரவிய தெய்வமான கண்ணகி தேவிக்குத், தம் நாட்டகத்தும் கோவில் எடுத்தனர் ஆவர். அத்தெய்வமே இத்தேவி என்பதும், அக்கன்னரர் பரம்பரை யாரே இக்கன்னரர் என்பதும் கூறுமலே அமைவதாகும். இக்கன்னரர், பலரும், சத்தியமங்கலத்தும், இப்பதிக்கு அடுத்த பல்லூர்களிலும், மைசூர்ப் பகுதியைச் சார்ந்த பல்லூர்களி லும் இருந்து, இத்தெய்வத்தைப் பரவுவதும், இவ்வம்மையின் ஆலயக் காணி கொண்டாடுவதும் ஈங்குக் குறிக்கத் தகுந்ததே.

## பாண்டியரும் செல்வியும்

பாண்டி மன்னன் ஒருவன், பத்தினித் தெய்வத்தைப் போற்றிய செய்தியைச் சிலப்பதிகாரம் செப்புகின்றது. பாண்டி மன்னனை நெடுஞ்செழியன், பொற்கொல்லன் சொல்லை நம்பிக் கோவலனைக் கொன்ற செய்தியும், கண்ணகி தேவியின் வழக்கில் தோற்று அவன் இறந்த செய்தியும் அறிந்ததொன்றே. நெடுஞ்செழியன் இறந்ததும், அவனது தேவியும் அவனுடன் ஒருங்கே மாய்ந்தனள். மதுரைமாநக ரம் அரசை இழந்து அல்லலுற்றது. பத்தினி தேவிக்குத் தீங்கிழைத்த பாண்டியன் நாட்டில், மழை பெய்யாது

போயிற்று. மாநிலம் வறண்டது. வெப்பு நோயும் குருகும் தொடர்ந்தது. நாடு பல வழியிலும் வருந்தியது நாட்டவர் பலரும் செய்வதறியாது திகைத்தனர்.

அக்காலத்துப் பாண்டிய நாட்டின் பகுதியில், கொற்கை என்னும் இடத்தில் இருந்து அரிசு புரிந்து வந்த வெற்றிவேற் செழியன் என்பவன் ஈதறிந்தனன். நாடு அல்லலுறும் இச் செய்திக்கு உரிய காரணத்தை ஆய்ந்தனன். சேர மன்னன் எடுத்த கோவிலைப் போல், தனது நாட்டகத்தும், கோவில் ஒன்றை நிருமித்தான். பத்தினி தேவியை அதில் நிலை பெறுத்தினன். நங்கை உவப்படைய, ஆயிரம் பொற் கொல்லரைப் பலியூட்டினன். வேள்வியாலும் விழாவாலும், சாந்தி செய்தனன். மங்கை உள்ளம் குளிர்ந்தது. நாடுமலிய மழை பெய்தது. நோயுந் துன்பமும் நீங்கியது.

இச் செய்தி சிலப்பதிகார உரைபெறு கட்டுரையால் விளங்குகின்றது. அது, "அன்று தொட்டுப் பாண்டிய நாடு மழை வறங்கூர்ந்து வறுமை எய்தி, வெப்பு நோயுங் குருவுந் தொடர, கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன், நங்கைக்குப் பொற் கொல்லர் ஆயிரவரைக் கொன்று, களவேள்வியால், விழவொடு சாந்தி செய்ய நாடுமலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது." என்பதாகும். இதுவே சிலப்பதிகார உரை பெறு கட்டுரை. இக்கட்டுரையில், பாண்டியன் செல்வியைப் போற்றிய நிலைமை தெரிகின்றது. இப் பாண்டியன் யார்? இவன் போற்றிய செல்வியம்மன் ஆலயம் எது? அத்தேவி தற்பொழுது என்ன பெயரில் விளங்குகின்ருள் என்பவை ஆராய்தற்குரியன.

## பாண்டியர்

தென் நாட்டு அரசை, முதல் முதலாகக் கொண்டு அரிசு புரிந்தவர் பாண்டியர். பண்டையர் என்ற சொல்லே, பாண்டியர் ஆயது என்பர் சரித்திர நூலோர். அறுபத்து நாலு திருவிளையாடலிலும் பங்கு கொண்டவரே பாண்டியர் என்று திருவிளையாடல் செப்புகின்றது. பழங்குடி வரிசையில் வைத்து எண்ணத் தகுந்தவரே பாண்டியர். பழங்குடியாவது சேர,

சோழ, பாண்டியர் குடி என்பர் பரிமேலழகர். இவர்கள் போற்றி வாழ்ந்த பூமி, தென் பூமி, ஆதலின் இவர்கள் தென்னவர் என்று கூறப்பெற்றுர். தென்பாண்டி நாட்டவர் ஆதலின், இவரது நாடும் தென்பாண்டி நாடாயிற்று. செந்தமிழ்நிலம் பன்னிரு பிரிவை உடையது. அது,

தென்பாண்டி குட்டம் குடம் கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன் வடக்கு—நன்றாய
சீதம் மலாடு புனல் நாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட் டெண்.

என்பதாகும். இப்பன்னிரு பகுதியில் பாண்டியர் வாழ்ந்த நாடு தென்பாண்டி நாடு. பாண்டி நாடு முன்பொரு காலத்தில் தெற்கே வெகுதூரம் பரவியிருந்த தென்பதும், அந்தப் பகுதி கடல் கொள்ளப்பட்டதென்பதும், இழந்த நிலத்திற்காக, சேரரது பகுதிக் கண் குண்டூருக் கோட்டத்தையும் சோழரது பகுதிக்கண் முத்தூருக் கோட்டத்தையும் பாண்டியர், தம்வலிமை கொண்டு பிடித்ததுமல்லாமல், வடதிசைக் கங்கையும், இமயமும் பிடித்து ஆண்டார்கள் என்ற வரலாறு சிலப்பதிகாரத்து;

"அடியிற் றன்னளவு அரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென் திசை யாண்ட தென்னவர் வாழி"

என்ற தொடரால் தெரிகின்றது. இந்த இடத்தில், சிலப்பதிகார உரையாசிரியராய அடியார்க்கு நல்லார், "தென் திசை யாண்ட தென்னவர்" என்பதற்கு உரைவரையும் போது, தென் திசையில் சேரருக்கு உரிய குண்டூருக் கோட்டத்தையும் சோழருக் குரிய முத்தூருக் கோட்டத்தையும் கொண்டதாக எழுதிப் போகின்றுர். ஆதலால், கடைச் சங்க காலத்தில் பாண்டி நாடு, சேரநாட்டில் சில பகுதியிலும், சோழ நாட்டில் சில பகுதியிலும் சேர்ந்திருந்த செய்தி விளக்கம் பெறுகின்றது.

எனவே செங்குட்டுவ மன்னன் காலத்து, இச்சேர மன்னன் பகுதியை யொட்டியும், பாண்டியர் நாடு இருந்ததாதல் வேண்டும். இப்பகுதி எது என்பதும், பிறவும் ஆராய்தற்குரியது.

தென் பாண்டி நாடு, பொதிய மலையை யொட்டிய திருநெல்வேலிப் பகுதியும், மதுரைநாடும் சேர்ந்த பகுதியது என்பர் அறிஞர்.

"சந்தனப் பொதியச் செந்தமிழ் மலையும்
சவுந்தர பாண்டியன் எனும் தமிழ் நாடனும்
சங்கப் புலவரும் தழைத் தினி திருந்தது.
மங்களப் பாண்டி வளநாடு என்ப"

என்ற பாடல் பாண்டி நாட்டின் நிலையையும், அது பரவியுள்ள இடத்தையுங் காட்டுவதாகும். மதுரை நாட்டில் பொதியமலைப் பகுதியதாய பழனிமலை சார்ந்த வையாவிநாடும், கோடைமலை சார்ந்த கொடைக்கானல் பகுதியும், இப்பாண்டி நாட்டகத் தனவாம் என்பதைக் கூற வேண்டுவதில்லை. மதுரை நகரத்தும், நெல்லைப் பகுதியிலும், பாண்டி மன்னர்கள் முடியரசராய் இருந்து அரசு புரிந்த நிலையை அக்கால இலக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன. அல்லாத பகுதிகளில் அவர் தம் புத்திரவர்க்கத்தவராகிய, குறுநில மன்னர் ஆட்சியே நிலவியிருந்தது என்பதற்கும் சங்க இலக்கியங்களில் நாம் பல ஆதாரங்களைக் காண்டல் கூடும். பழனிமலையை யொட்டிய ஆவிமலை நாட்டில், ஆய் அண்டிரன் என்பவனும், கோடைமலையை யொட்டிய பகுதியில், பண்ணி என்பானும், கடியநெடு வேட்டுவனும், பாண்டியன் மறவர்களாக, அவர் தம் பிரதிநிதியராக இருந்து, அரசுபுரிந்த நிலைக்குப் புறநானூறு எடுத்துக் காட்டாக ஆகும். இப்பகுதியே யன்றி, பாண்டியர், வலிந்து பிடித்த பகுதியாய, சேரரது பகுதியாய குண்டூருக் கோட்டத்தின் தலைநகராகிய வஞ்சிபுரியிலும், இலவங்கிப் பதியிலும், அந்த நாட்டின் பல ஊர்களிலும், பாண்டிய புத்திர வர்க்கத்தைச் சார்ந்த நன்மாறன் என்பவனும், தென்னன் கரை நன்னாட்டை யொட்டிய கொற்கையம்பதியில் வெற்றிவேற் செழியனும், சோழருக்குரிய முத்தூருக் கோட்டத்தில் பூதப்பாண்டி என்னும் இடத்தில், அப்பகுதியை யொட்டிய பிரதேசத்தைப்

60560

பூதப் பாண்டியன் என்னும் மன்னவனும், அக் கோட்டத்தைச் சார்ந்த "ஏறைமலை" என்னும் மலையை யொட்டிய பகுதியை ஏறைக்கோன் என்னும் குறுநில மன்னனும், அரசெய்திருந் தவர் ஆவர். அன்றியும், தற்பொழுதைய கரூர்ப் பகுதியைச் சார்ந்த தென்னிலை, பட்டுத் துறை முதலிய பகுதிகளிலும், பிற இடத்தும், பாண்டிய புத்திரவர்க்கத்தவர் ஆட்சியே நிலவி வந்தது. பூதப்பாண்டி என்ற பதி, தற்பொழுதைய தாரா புரப் பகுதியைச் சார்ந்து 12 கல் தொலைவில் உள்ளது. இப் டகுதியில் பூதப்பாண்டியன் கூட்டத்தைச் சார்ந்த பூதன் கூட்டத்து வேளிர்களே தலைமக்களாகவும், பட்டவர்த் தனராகவும் இருந்து வருதலை இன்றுங் காணலாம். இப்பூதப் பாண்டியன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்று புற நானூற்றில் குறிக்கப்படுவதைச் சங்க இலக்கிய முணர்ந்தார் அறிவர். இவன் தந்த ஒல்லையூர் என்பது, பண்டை நாளில் அல்லையூர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஏட்டைப் பார்த்து எழுதியவர் ஒல்லையூர் என்று எழுதிப்போயினர். அல்லையூர் என்ற ஊர், பண்டைக் காலத்துச் சேரருக்குரிய குண்டூருக் கோட்டத்தில், அல்லையூர் நாட்டின் தலைநகராக விளங்கியது. இப்பகுதியைப் பெருஞ்சாத்தன் பரம்பரையார் ஆண்டு வந் தனர். பெருஞ்சாத்தன் இறந்து பட்டதும், இந்த நகரும், இந்த நாடும் அவனது மாற்றார் கையில் சிக்குண்டது. இதனை யறிந்த பெருஞ் சாத்தன் பரம்பரையார், பூதப்பாண்டி மன்னனிடம் முறையிட, அவன் படையுடன் போந்து, மாற்றாரை வென்று, ஒல்லையூரைப் பெருஞ்சாத்தன் பரம்பரையார்க்கே திருப்பித் தந்தான். இவ்வரலாறு பற்றியே இம்மன்னன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்று கூறப்படுகின்றான். ஒல்லையூரில் பெருஞ்சாத்தன் வாழ்ந்த நிலையும் பிறவும் - புறநானூறால் போதருகின்றது. ஒல்லையூர் தந்த என்ற சொல்லும் புறநானூற்றிலே கண்டதொன்று. இதனை, அல்லாளபுரம் என்று வழங்கும் அல்லையூரில், காணியாளராகப் பண்டு அர செய்தி வாழ்ந்த சாத்தந்தை கூட்டக் காணியாளரது செப்புப் பட்டயம் திறம்பட விளக்குகின்றது.

அல்லையூர் எனப்பண்டு வழங்கிய அல்லாள புரத்தில் சிவாலயம் ஒன்று புராதனமான நிலையில் கட்டப்பட்டுள்ள

நிலையதாக இருக்கின்றது. இவ்வாலயத்தில், முதற் காணி உரிமை தங்களுக்கே உரியது எனச் சாத்தந்தை கூட்டத்தைச் சார்ந்த காணியாளர்கள் வாதம் செய்கின்றனர். முன்னையோர் வெற்றி பெற்ற நிலையது ஆதலால் இது எங்களுக்கே உரியதாகல் வேண்டும் என்று பூதப்பாண்டியன் கூட்டத்தார் வாதிக்கின்றனர். இவ்விருவரும் இவ்வாறு வாதம் செய்து காணி முறை கொண்டாடுவதற்குரிய முறையில் இவ்வூர் அமைந்துள்ளதை நாம் நினைக்கும் போது, ஒல்லையூர் என்ற நகரை, வெற்றியால் பிடித்துத் தந்தவன் பூதப்பாண்டியன் என்பது நமக்குப் புலனாகத் தோன்றுவதாம். இப்பூதப்பாண்டிய மன்னனை வென்ற பெருமை, கரிகாற் பெருவளத்தானின் அம்மானாக இருந்த இரும்பிடர்த்தலையார் என்ற பெருமகனின் பரம்பரையில் வாழ்ந்த பொற்றேர்ப் பெரியன் என்ற வேளிர் பெருமகனுக்கே உரியதாகல் வேண்டும் என அப்பெரியன் பரம்பரையில் வந்த பிடாரப் பெரியணவேள் நாடுடையான் என்ற வேளிர் பெருமகனது பட்டயம் நமக்கு இன்றுங் கூற இருக்கின்றது அவனது பரம்பரையாரைப் பற்றிய பாடல்களில்,

மன்னவன் எனும் பூதப்பாண்டியனை வென்றுமே
வஞ்சியில் பசுபதியிடம்
வாணனுட னுண்டுமே......................
வரிசையது வே படைத்தாய்

என்ற பாடலும் ஒன்று. இப் பெரியன் குலத்தார், தங்கள் முன்னோர்களில் ஒருவரை வென்று, தங்களைச் சிறைபிடித்ததாகவும், வெற்றிக் கறிகுறியாக தங்கள் குலத்துப் பெண்மணி ஒருத்தியைத் தந்து அவர்களுடன் உறவு கொண்டதாகவும், பூதன் கூட்டத்தைச் சார்ந்த வேளிர் பெருமகனும், தற்பொழுது பூதப்பாண்டிக் குறுநில மன்னனுமாக உள்ள பூதப் பாண்டிப் பட்டக்காரர் செப்புப்பட்டயம் கூறுகின்றது. ஆகவே இப்பகுதியை பண்டைக்கால முதல் இன்றளவும் பூதப்பாண்டி என்னும் ஊரைப் பூதப்பாண்டியன் பரம்பரையார் ஆண்டு வந்த, வருகின்ற நிலை இன்றும் நமக்குப் பிரத்தியக்ஷமேயாகும்.

ஏறைமலை என்ற மலையும், ஏறைக்கோன் என்ற மன்னன் ஒருவனும் பண்டை நாளில் இருந்த செய்தியும், அரசெய்தி

யிருந்த நிலையும் புறநானூற்றில், ஏறைக் கோனைக் குறமகள் இள எயினி என்ற பெண்பாற் புலவர் ஒருவர் பாடிய பாடலில் இருந்து காணத்தகுவது ஒன்று. இங்குக் குறித்த ஏறைமலை, சிவன்மலை என்ற பெயரில் தற்பொழுது காணப்படுகின்றது. ஏறு + ஐ + மலை = ஏறை மலை யாதல் புணரியல் நிலைக்குப் பொருந்துவதாகும். ஏறு என்பது ரிஷபம் அல்லது காளை ; ஐ என்பது தலைமகன். ரிஷபத்தை ஊர்ந்து நடத்தும் தலைவன் சிவன்தான். ஆதலின் இம்மலைக்கு இப்பெயர் இவ்வாறு பொருந்துதல் தகுதியே. இந்த நாட்டுக்குரிய குறவஞ்சி முதலிய நூல்களில், இன்றும் இம்மலையை ஏறைமலை என்று குறிப்பிடு வதைக் காணலாம். இம்மலை, சோழருக்குரிய முத்தூருக் கோட்டத்திலேயே இன்றும் உள்ளது. ஏற்றை அல்லது, ஏறைக்கோன் என்பவன், பாண்டியர் புத்திரவர்க்கத்தவரில் ஒருவனே ஆவான். இவனைத்தான் பண்டு எயினி என்ற பெண் பாற் புலவர் பாடினதும் என்க.

இச்சிவன் மலை என்னும் ஏறைமலை, தற்பொழுது கொங் கில், காங்கேயம் என்னும் நகருக்கு மூன்று கல் தொலைவில் உள்ளது. இங்கு, கொங்குவேளிர் கூட்டத்தைச் சார்ந்த குறு நில மன்னர்கள் பலர், இன்றும் பட்டவர்த்தனராய், காணியா ளராய் வாழ்ந்து வருகின்றனர். ஆயினும், இம்மலையில் நிக ழும் விசேட நிகழ்ச்சிகளில் ஏறைக்கோன் வழிவந்த பாண் டிய புத்திர வர்க்கத்தவரான, வேட்டுவப் பெருமக்களுக்கே முதல் மரியாதை, முதற் சிறப்பு உண்டு என்பதை நினைக்கும் போது, பண்டை நாள் நிகழ்ச்சிக்கு, இந்த நாள் நிகழ்ச்சி ஒரு பெருஞ் சான்றாய் நிலவும் என்பதில் ஐயம் இல்லை. ஏறை மலைக்கு அருகாகப், "பட்டாலி" என்ற பூர்வீகப்பதி ஒன்று காணப்படுகின்றது. இப் பதிதான், ஏறைக் கோனின், பதியா கப் பண்டு பொலிந்திருந்ததாகும் என்பது தெரிகின்றது. இப் பதியில், பண்டு, பாண்டிய மன்னருக்கும், சேர, சோழர் முதலியவர்களுக்கும், பெரும் போர் நிகழ்ந்ததாகவும், பலதலை களும் ஆடிய காரணத்தால், பட்டாலி, என்று இந்த இடத்திற்குப் பெயராக ஆயிற்றென்றும், ஈங்குள்ள பழையர் குடியைச் சார்ந்த பெருமக்கள் சிலர் சொல்லுகின்ற னர். இதுவே பண்டை நாளில், பாண்டியர்களுக்கும், கொங்கு

வேளிர்களுக்கும், நிகழ்ந்த போர் நடந்த தலையாலுங் கானம் என்று எண்ணவும் இடம் உண்டு. இத்தலையாலுங் கானம் என்னும் பட்டாலிக்கு அருகில், செங்களம் என்று ஓர் இடம் குறிக்கப்படுகின்றது. இச் செங்களத்தில் பாண்டியன் பிரதிநிதியான, பழையன் மாறன் என்பவனுக்கும், சேரன் செங்குட்டுவ மன்னன் என்ற சேர மன்னனுக்கும் போர் ஒன்று நிகழ்ந்த வரலாறு சிலப்பதிகாரத்தில், கூறப்படுகின்றது. இக்களம் அக்காலத்தில் சிறந்த போர்க்களமாக இருந்த நிலையைச் சங்க இலக்கியங்கள் அறிந்தவர் அறிவர். கொங்கர் என்ற பெயர், பாண்டிய புத்திரவர்க்கத்தவருக்கே பண்டு உரியது. இவரை வென்றவர்களாகிய சிலரை, கொங்கு வேளிர்கள் என்று கூறுதல், பண்டு தொட்டு இந்த நாட்டில் நிகழ்ந்து வரும் மரபுச் சொல். செங்குட்டுவ மன்னனுடன் போர் செய்த பழையன் மாறன் என்பவனது கோட்டை, தற்பொழுது பழைய கோட்டை என்ற பெயருடன் செங்களத்திற்குரிய பகுதியில், இடிந்து மேட்டுநிலமாகப் பாதுகாக்கப்படுகின்றது. இந்தப்பகுதி இன்றும் பழையன் குலத்தைச் சார்ந்த குறுநில மன்னர்கள் காணியிலேயே இருந்து வருதல் கண்கூடு. பழையர்குலம் என்பது பயிறகுலம் என்ற பெயரில் தற்பொழுது பேசப்படுகின்றது. இப்பயிறன் கூட்டத்தவரே பழையன் கூட்டத்தைச் சார்ந்தவர் ஆவர். பழையர் என்ற சொல், பயிறர் எனத் திரிவது இயல்பேயாகும். இப்பழையன் கூட்டத்தவர் பழையன் கோட்டையில் இன்றும் குறுநில மன்னராய், பட்டவர்த்தனராய், கொங்கு வேளிர் குலப்பட்டக்காரராய் இருந்து வருதல், இவ்வாராய்ச்சிக்கு மிகவும் பயன்படுவதாகும்.

சங்க இலக்கியங்களேயன்றி, கொங்கு நாட்டில் வழங்கும், சேரலர்குறவஞ்சி என்ற நூலும் இதற்குச் சான்றாக அமையும் :

**"நமக் குபகாரம்புரியத் தலையளி செய்யறுவரையும்**
**மனக் கினிய முறையதனில் வருவித்து மாறியம்பி**
**ஏறைமலை அருகாக இருக்குமொரு செங்களத்தில்**
**திங்கள் மரபினில் வந்த சீர்மை மிகும் பாண்டியனின்**

பொங்கிவரு புத்திரரைப் போற்றிவரு கொத்துமுடிக்
கொங்கனுடன் மலையரசு குணம்பெருகப் புரிதிறத்து
கொங்கன் எதிர் அமர்புரியக் கொண்டனன்
நற்படைநாட்கோள்''

இப்பாடலடிகள் கொங்கு நாட்டில் வழங்கிவரும் சேரலர் குற வஞ்சியின் பகுதியாகும். இக் குறவஞ்சியில், ஏறைமலையும், செங்களமும் குறிக்கப் படுகின்றன. பாண்டிய புத்திரரைக் கொங்கர் என அழைப்பதும், சேரமன்னரைக் கொங்கர் என அழைப்பதும், அக்கால வழக்கம் என்பனவும் குறிக்கப்படு கின்றன.

பாண்டியர், தாம்இழந்த பகுதிக்காகச் சேரருக்குரிய குண்டூருக் கோட்டத்தையும், சோழருக்குரிய முத்தூருக் கோட்டத்தையும் கவர்ந்து, தமது அசரசியலைப் பரப்பிய செய் தியைச் சிலப்பதிகாரத்தால் யாம் முன்னமேயே கண்டோம். இப்படிப் பிடித்த நிலப்பகுதியை, மதுமண்டிலம் அல்லது கொங்குமண்டிலம் என்ற பெயரையிட்டு, அக்காலம் பாண்டி யர்கள் அழைத்து வந்தனர். இந்தப்பகுதியையே, வேணாடு என் றும் அக்காலமக்கள் அழைத்தனர். மது மண்டிலம் என்ற பெயரும், பிறவும், நிலங்கடந்த நெடுமுடியண்ணல் காலத் ததோ, அல்லது அவனுக்குப் பின்னர்வந்த பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதியின் காலத்ததோ அறியோம். இப் பகுதி, இவ்வாறு பிரிக்கப்பட்டு, பாண்டிமன்னர் வழிவந்த அவர் தம் புத்திர வர்க்கத்தவர் காலத்தும் பல ஆண்டுகள் ஆளப்பட்டு வந்ததாதல் வேண்டும். பாண்டிய புத்திரவர்க்கத் தவர், ஐந்து பிரிவில் அரசெய்தி வாழ்ந்து வந்தனர். அவரா வார்: பூவலியர், காவலியர், மாவலியர், வேடர், வேட்டுவர் என்று கூறப் பெற்றனர். இதனால் பாண்டி மன்னவருக்குப் பஞ்சவர் என்ற பெயரும் வழங்குவதாயிற்று. இவரே, கடைச் சங்ககாலத்துக்குமுன், கொங்குநாட்டில் அரசுபுரிந்து வந்தவர்.

கொங்கு நாட்டில் அரசு புரிந்து வந்த பாண்டியர் ஐம்பிரி வினர். அவராவார்; பூவலியர், காவலியர், மாவலியர், வேடர், வேட்டுவர் என்பவர். இவர்களுள், பூவலியர் என்பவர் பூமி திருத்தி யுண்ணுங் காணியாளர். காவலியர் என்பவர் அரசு

புரிந்து வந்த முடி மன்னர் மாவலியர் என்பவர். அவர்தம் சேனைநாதர் வேடர் என்பவரும், வேட்டுவர் என்பவரும் மலை நிலத்தையும், அதன் பகுதியதாய காட்டு நிலத்தையும் போற்றிவந்த காணியாளர் ஆவர். இவர்கள் ஐம்பிரிவின ராய் இருந்தாலும், பண்டைய பாண்டியர் வழியினர் ஆதலின், இவரைப் பண்டையர் என்ற பொருள்படும் கொங்கர் என்ற சொல்லாலே மற்றையர் குறித்தனர். அதனால், இவர்கள் கொங்கர்கள் என்றே சங்க இலக்கியங்களில் குறிக்கப் பெற்ற னர். இவர்கள் யாவரும், வில்லைக் கொண்டு வெற்றி பெறுந் தகுதியர். ஆதலின், இவர்களை அக்கால மக்கள், விலாடர் என் றும், பெருவடிவினராதல் பற்றி விராடர் என்றும் அழைத் தனர். இவர்கள் பூர்வீகர்கள், வில்லைக் கொண்டு வெற்றி பெறுந் தகுதியினர் என்பது இவர்களில் முன்னோ னை, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமை யார் பாடிய பாடலால் விளங்குவதாகும்.

ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடனிறுக்கும்
பொன் போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென"

என்று வரும் பாடலால் தெரிகின்றது. புறநானூற்றிலே, பிற் பட்டு வரும் பாடல்கள்யாவும் வாளையும், வேலையும் ஏந்திப் போர் செய்ததாகவே காணப்பட, பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதியைப் பாடிய பாடல் மட்டும் 'எம்மம்பு கடிவிடுதும்' என்று குறிக்கப் படுதலால், கொங்கு நாட்டில் வாழ்ந்த விலா டர்கள், குடுமிக் கோவின் வழிவந்த பாண்டியர் என்றே கூற இடமும் உண்டு.

பல்யாகசாலை முதுகுடுமி முதலாக, கொங்கு நாட்டில் பல குடுமிக் கோக்கள் வாழ்ந்து வந்த நிலைகளைக் கொங்கு நாட்டில் காணப்படும் பல குறவஞ்சிகள் நமக்குக் கூறுகின்றன. நெடு முடி யண்ணல்கள் யாரும் தங்களுக்கு உரிய நிலப்பகுதியில் பெருஞ் சிறப்புடன் வாழ்ந்து வர, அவர் தம் பகுதியரசர் யாரும், நெடுமுடியின்றி, குறுமுடி கொண்டோராய்க், குடுமிக்

கோவாக, அவர்களால் சிறப்பித்துக் கூறப்படும். குடுமிக்கோ வென்ற முறையில் கொங்கு நாட்டில் வாழ்ந்து வந்தனர். குடுமிக் கோவாக இருந்தாலும், இவர்கள் அரசுபுரியும் பகுதிக்கு இவர்களே பெருமன்னர். கொங்கு நாட்டுக் காணியேடுகளில் கொத்து முடிப் பாண்டியன் என்னும் மன்னர் மன்னன் ஒருவன், குறிப்பிடப்படுகின்றான். 'யாகபுரிப் பார்த்திபன்' என்று மற்றொருவனும் குறிப்பிடப்படுகின்றான். இவர்கள் ஆட்சிக் காலத்தில் சேரமன்னரும், மற்றைய வேளிரும், ஒளியிழந்து வடபகுதியதாய நிலத்திலும், மைசூரைச் சார்ந்த நிலங்களிலும் அடங்கி வாழ்ந்து வந்தனர். தங்கள் பாகத்தைப் பாண்டியர் ஆள்வதைப் பொறாத பெருவேளிரும், சேரமன்னரும், மிகைத் தெழுந்து செய்தபோர்கள்தாம், புறநானூற்றில் காணப்படுகின்றன. இப்போர் முறைகள்தாம், தொல்காப்பியப் புறப்பொருளிலக்கணத்தும், புறப் பொருள் வெண்பா மாலையிலும் காணப்படுகின்றன. கொங்குவேளிர்கள் மிகைத்தெழுந்து மாந்தரன் சேரலுடன் சேர்ந்து, பாண்டிய புத்திரர்களை வென்று, தங்கள் ஆட்சியைப் பரப்பியிருந்த காலத்தில் தான், நெடுஞ்சேரலாதன் குண்டூருக் கோட்டத்தின் மன்னனாக, தாரை என்று தற்பொழுது குறிப்பிடப்படும் வஞ்சிபுரியில் அரசெய்தியதும் ஆகும். இந்தக் காலத்தில், பாண்டியர்கள், தாரையின் கீழ்பால் பகுதியில் உள்ள தென்னன் கரைநந் நாட்டு, யாகபுரிப்பகுதியிலும், கொற்கையம்பதியிலும் இருந்ததும் என்க. இதன் விரிவைக் கொங்குவேளிர் என்ற எனது நூலில் காண்க.

நம் பத்தினி தேவி வாழ்ந்த காலத்தில், குடுமிக்கோவாகப் பாண்டியர் அரசுபுரிந்தவன், கொங்குநாட்டின்கண் உள்ள, தென்னன்கரை நந்நாட்டில், பெரும்பகுதியாகத்திகழ்ந்த கொற்கைநகர மன்னனை வெற்றிவேற் செழியனே யாவன். கொற்கையம்பதியில் இருந்த வெற்றிவேற் செழியனே, பத்தினி தேவியைப் போற்றிய பண்பினன் என்பதை நாம் முன்னமேயே அறிந்தோம். இக்கொற்கை, இதுகாறும் யாங்கண்டவாற்றால் கடற்றுறைப்பட்டினம் அன்று. இம்மன்னனைக் கொங்குக் காணி யேடுகள் "கொற்றவேற் செழியன்" என்கின்றது. ஆதலால், இம்மன்னனே பத்தினிதேவியின் ஆலயம் எடுப்பித்தவன்.

## கொற்கைமாரி

வெற்றிவேற் செழியன் என்பவனை ஒருவாறு ஆராய்ந்தோம். அவன் வாழ்ந்த பதி கொற்கை நகரம் என்பதனையும் அறிந்தோம். அப்பதி எங்குள்ளது? அது தற்பொழுது என்ன பெயரால் வழங்கப்படுகிறது? ஆங்குள்ள பத்தினி தேவி என்ன பெயரில் அழைக்கப்படுகின்றாள் என்றாற் போன்ற ஆராய்ச்சியில் செல்லுவோமாக.

தாராபுரந் தாலூகாவின் தென் கீழ்ப்பகுதியில் தென்னன் கரைநாடு என்று ஒரு வளநாடு சிறப்புடன் விளங்குகின்றது. தென்னன் கரை நாட்டில் பல கிராமங்கள் இருக்கின்றன. அந்த நாட்டின் தலைநகராகப் பண்டு திகழ்ந்த பதியைக் கொற்கை என்று அக்காலத்தவர் அழைத்தனர். அந்த நகரத்து ஒரு கோட்டை ஒன்று இருந்து அழிந்த நிலைக்கு அறிகுறிகளும் கோட்டை மேடும் இன்றுங் காணக் கிடக்கின்றன. கொற்கை என்ற பெயர், தற்பொழுது கொற்றை என்று ஏட்டு வழக்கில் எழுதப் பெற்றும் வருகின்றது. இவ்வணி நகரை ஆன் பொருனை என்ற ஆறு அழகு பெற அலங்கரிக்கின்றது. இந்த நகரம் பண்டு இருந்த இடத்தில், பழைய சிவாலயம் ஒன்றும், பல சிறு தேவதைகளின் ஆலயங்களும் விளங்குகின்றன. சிவபெருமானின்பெயர் தென்னீசர்; அம்பிகையின் பெயர் அகிலாண்டவல்லி இவ்வணி நகரை அடுத்து அப்பரமர், பெரியநாயகி ஆலயமும், இரத்தினமூர்த்தி ஆலயமும், அதனையொட்டி, கொற்கைமாரியின் ஆலயம் ஒன்றும் விளங்குகின்றன. இங்குக் குறித்த கொற்கைமாரியின் ஆலயமே பண்டு வெற்றிவேற் செழியன் வகுத்த பத்தினிதேவியின் ஆலயம் ஆகும்.

கொற்கையம்பதியில் வாழும் பத்தினி தேவியை, வெற்றிவேற் செழியன், மழை வளந்தரும் தெய்வமாக வகுத்தான். ஆதலால், இத்தேவியை 'மாரியம்மை" என்று அழைத்தான். அது முதல், இவ்வம்மை தான் இருந்த பதியின் பெயராலேயே கொற்கைமாரி என்று அழைக்கப் பெற்றாள். இப்பதி தாராபுரத்திற்குப் பத்துக்கல் தொலைவில் உள்ளது. ஆண்டுகள் தோறும் இவ்வம்மையின் அருள் நலங்கருதிக் கொண்டாட்

படும் திருவிழா ஒன்று நடை பெறும். இத்திருவிழாவில், அந்த நாட்டிலுள்ள மக்களேயன்றி, ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமி அம்மனின் அருளைப் பெறுவதுண்டு. இவ்விழாவில், பண்டு, பொற்கொல்லரில் ஒருவர் பலியிடப்பட்டு வந்தார் என்றும், காலப் போக்கில் அது நின்றுவிட்டது, என்றும் பொற்கொல்லர் வகுப்பைச் சார்ந்த பலரும், அவ்விழாவில் கலந்து கொண்டு, அம்மனுக்குரிய நெற்றிப் பட்டம் முதலிய ஆபரணங்களைக் காணிக்கையாக அளித்து விழா முடியும் வரையிலும், அம்மனின் பாதத்தில் நின்று, வேண்டிய பணிகளைப் புரிந்துவருதல் உண்டு என்றும் ஈங்குப் பேசப் பெறுகின்றது. விழாவில் பல திறப்பட்ட மக்கள் குழுமி அரும்பண்டங்களை வாங்கிப் போதலோடு, அம்மையின் பெயரால் அக்கினிச் சட்டிகளுடன் வந்து வணங்கும்செயல், கண்கொள்ளாக் காட்சியாகும்.

## கொற்கைமாரியும் காணியாளரும்

கொற்கை நகரத்துக்கும், இந்த நாட்டுக்கும் சிறப்பாக உரிய காணியாளர் எழுவர். இக்காணியானது. பூர்வகால முதல் இன்றளவும் வரன்முறையாக நிகழ்ந்து வரும் முறைமையுள் தலை சிறந்த தொன்று. காணியாளர் ஆவார்: இந்த நகரத்தையும், இந்த நாட்டையும் ஆண்ட அரசவம்மிசத்தவர்: அவராவார், காவலர், குழையர், பெரியகுலர், ஆந்தை, சேரன் செம்பூதர், செட்டியர் என்பவர். இது, இந்த நாட்டுக் காணிப் பாட்டாலும் அறிவதொன்று.

> காவல் குழாயர், கதித்த பெரியகுலர்
> ஆவல் சேர்ஆந்தை அதிசோர்—மேவவரு
> செம்பூத்தர் தன்னுடனே செட்டியரு மாகஇவண்
> இப்புற்ற ஏழ் முதன்மையே.

இதுதான் நாட்டுக் காணிப் பாடல். இது, இந்த நாட்டுப் பூர்வீக நிலையை உணர்த்துவதாகும். இவ்வெழுவரிலும் இந்த நாட்டில் முதல் மரியாதை கொள்ளுபவர் காவலரே.

## காவலவர்

காவலவர் என்பவர், பாண்டிமன்னன், வெற்றிவேற் செழியன் என்பான் வழி வந்தவரும், நன்மாறன் வழி வந்தாரும் ஆக உள்ளவர்கள் யாவரும் காவலரே. இந்த நாட்டின் பூர்வீக மன்னர் பரம்பரையார் ஆதலின் இவரை, இந்த நாட்டவர் முதல்வராக மதித்து முதல் மரியாதை வழங்குவர். கோவில்களிலும், நாட்டிலும் இவரைப்பாண்டியர் என்று அழைப்பதும் உண்டு. இன்னும் இம்முறை இங்கு மாறவில்லை. இக் காவலவர் குடும்பம் அதிகமாக இல்லை என்றாலும், யாகபுரி (பிரமயம்) நாட்டாண்மைக்காரராக இவர்கள் இருந்த நிலையும் பிறவும் கேட்கப்படுகின்றது. இவர்கள் அருகிய நிலையும், முதற்காணிபெருஞ்சிறப்பும், இவர்களுக்கு இருந்துவரும் சிறப்பும் பிறவும், இக்காவலரின் முன்னோனை வெற்றிவேற் செழியனின் தலைமைக்கும், அவன் பத்தினி தேவியைப் போற்றிய சிறப்புக்கும் இக்காணி முறை எடுத்துக்காட்டாக ஆகின்றதன்றோ?

## குழாயர்

கொற்கை நகரத்தும், இந்த நாட்டிலும், கொற்கைமாரியின் ஆலயத்தும் குழையர் என்ற கொங்கு வேளிர் கூட்டத்தாருக்கு இரண்டாவது காணி கூறப்படுகின்றது. இக்குழையர் என்பவர், சேரமான், கணைக்கால் இரும்பொறையின் வழி வந்தவர். குண்டலமிட்ட காதை உடையவர் ஆதல்பற்றி இவர் குழையர் என்ற பெயரால் பண்டு அழைக்கப் பெற்றனர். இவர், கொற்கைபுரியில் இருந்த வெற்றிவேற் செழியனையும், இலவந்திப்பதியில் வாழ்ந்த நன்மாறன் என்பவனையும் வென்று, இப்பகுதிகளில் தங்கள் அரசை நிலை பெறுத்திய காணியாளர். இவ்வேளிர் பெருமக்கள், கொற்கைபுரியிலும், இலவந்திப்பதியிலும், அவ்வணி நகருக்கண்மையில் உள்ள வடுகபுரியிலும் பண்டைய நிலையில் திரியாத நிலையில் தலைமக்களாய் வாழ்ந்து வருவதை இன்றுங் காணலாம். இவர் வரலாற்றின் விரிவை, இலவந்திச் செல்வி என்ற தலைப்பில் காண்க.

## பெரிய குலர்

இங்குக் குறித்த பெரிய குலர்களின் முதல்வன் பொறற்றோர்ப் பெரியன் என்னும் குறுநிலமன்னன் ஆவன். இவன் சோழர்

குடியில் தோன்றியவன். பிடர்த்தலைப் பெரியன் என்றும். இரும்பிடர்த்தலையார் என்றும் அக்கால மக்கள் இக்குல முதல் வனைக் கூறுப. இவன் சோழமன்னன் கரிகாற் பெருவளத் தானின் நல்லம்மான். இவன் பெரியன் ஆதலின்,இவன் சந்த ததியார் தங்களைப் பெரிய குலத்தவர் எனப் போற்றி அழைக் கின்றனர். இவர் பிறசிறப்பியல் நாளிலும், பூந்தேரில் ஊர்ந்து செல்லுகின்றனர். இக்குலத்தவர் முதல்வனை இரும்பிடர்த் தலையார் என்பவன், சோழனின் அரசைப் போற்றி வளர்க்கும் நிலையில் கொற்கையம் பதிக்குரிய காவலனையும், குழையனை யும் வென்று இவ்விடத்தைக் கைப்பிடித்தான். இப்பதியையே யன்றி, இதன் கீழ்பால் உள்ள பூதப் பாண்டி என்ற நகரையும் இவன் கைப்பற்றினன். இந்த நகரத்துப் புரவலனுன பூதப் பாண்டியன் என்பவனை வென்றவன் இவனேயாவன். அன்றி யும், இந்த அணி நகரில், இவனது இளம் பிள்ளையை அரசனுக ஆக்கியதும் இவனே என்ப. இம்மன்னன், கரிகால் பெருவளத் தானின் மகள் ஆதிமந்தியின் பொருட்டு, துணையாக வந்து, இருங்கழார் என்ற பதியில் அரசு பெற்று, அச்சேர மன்னனுக் காக, வேணுடு என்று சிறப்பிக்கப் பெறும் முத்தூருக்கோட் டம் முழுவதையும் வென்று, வேணுடன் என்ற சிறப்பியலில், கொற்கையில் முடி சூடினன் என்ற வரலாறும் பிறவும், கொற்கை நகரப் புரவலராய் இருந்து வரும் வேணுட மன்ன னது வரலாற்றுப் பகுதியில் கூறப்படுகின்றது.

''மன்னவனெனும் பூதபாண்டியனை வென்றுமே
வஞ்சியில் பசுபதியிடம்
வந்து அகளங்கன் முன் பாண
னுடனுண்டுமே வரிசையதுவே படைத்தாய்
நன்புகழ்ப் பெரியகுல வேணுட மன்ருடி
நற்பதியும் நீயென்னவே
நாளிலம் புகழுவரு கரிகால சோழனும்
நன்மைமுடி சூடினனே''

இப்பெரியன், முன்னைய இருவரையும் போரில் வென்று முடி சூடிய காரணத்தால், இப்பரம்பரையினர் மூன்ருவது காணியாளராகத் தற்பொழுதும் போற்றப்படுகின்ருர். இக் குலத்தவர்களுள் முதல்வராய் மும்முடிப்பட்டம் பெற்று

விளங்கும் பெரியகுலத்து வேளுடரே பண்டைய முறைப்படி இன்னும் பட்டவர்த்தனராய் இருந்து வருவதும் பிறவும் பிரத்தியக்ஷமாகக் காணுதற் குரியனவாகலில், இச் சரிதம் மிகவும் போற்றத் தகுந்த தொன்றே.

## ஆந்தையர்

இக்குலத்தவர் நான்காவது காணியாளராகப் போற்றப் பெறுகின்றார். இவர் சேரர் கிளையினரில் ஒருவர் ஆவர். இவர் இந்த ஆலயத்தும், பிற இடத்தும், சிவாலயத்தும் இந்த வள நாட்டிலும், நாலாவது காணியாளராய் விளங்குகின்றனர். இவர் குலமுதல்வர்கள்யாரும் ஆதர்கள் ஆதலின், ஆதன் × தந்தை = ஆந்தை என்ற விதிப்படி, தங்கள் குலத்தை ஆந்தை கூட்டத்தவர் என அழைத்துக் கொள்ளுகின்றனர். இவர் யாரும், கொற்கை நகரைச் சார்ந்த பல ஊர்களிலும் காணியாளர் என்ற சிறப்பியலில், குலத்திற் குன்றாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

## சேரர்

சேரர் என்ற குடிப் பெயருடன் கொற்கை நகரத்துள்ள மாரியின் ஆலயத்தும், சிவாலயத்தும், நாட்டிலும் சிறப்புடன் ஒரு கூட்டத்தார் வாழ்ந்து வருகின்றனர். இவரும் கொங்குவேளிர் கூட்டத்தைச் சார்ந்தவர்களே. இவ்வேளிர் கூட்டத்தவர் ஐந்தாவது காணியாளராகப் போற்றப் பெறுகின்றனர். இவர்களில் பெரும் பகுதியினர் கொற்கை நகரிலும், பிற இடத்தும் இன்றும் வாழ்ந்து வருதல் கண்கூடு.

## செம்பூதர்

செம்பூதர் என்ற கூட்டத்தார், கொங்குவேளிரைச் சார்ந்த குறுநில மன்னர் பரம்பரையினரேயாவர். இவர் பூதப் பாண்டியன் என்னும் கரும்பூதனில் வேறாயவர் ஆதலின், இவர் செம்பூதர் ஆயினர் என்ப. இவர், புள்வேளூர்ப் பூதர் என்றுங் கூறப்படுவர். இவரது வரலாறு கூறும் பண்டைய ஏட்டுச் சுவடிகள், இவர் தம் மாளிகைகளில் நிறைய இருக்கின்றன. இவர் பழைய சோழ மன்னர் கால முதல் நாயக்க மன்னர்

காலம் வரையிலும் ஆதிக்கம் செலுத்தி வாழ்ந்தவர் என்பதை அவர் தம் வரலாற்றுச் சுவடிகளில் காணத்தருவது ஒன்று.

இவர்கள் ஔவையாரால் பாடப் பெற்ற சிறப்பியல் பெரிதும் உடையவர். தொண்ணூற்றாறு கீர்த்தியும் தொண்ணூற்றாறு இடங்களில் காணியும், ஆதிக்கமும் உடையவர் என இவரது காணிப் பாடல்களும், பிறவும் கூறுகின்றன. இவர்கள் பிடர்த்தலைப் பெரியனது உடன்வந்த செம்பூதன் ஒருவனின் பரம்பரையர் ஆதலின், இவர் கொற்கையம் பதிக்குக் காணியாளர்ஆகச் சிறப்பியல் பெற்றனர் என்ப. இவரது விரிந்த வரலாறுகள் யாவற்றையும் வெளிவர இருக்கும் "கொங்குவேளிர்" என்ற எனது நூலிலும், இந்த நூலில் ஊதியூர்ச் செல்வி என்ற தலைப்பிலும் காண்க

## செட்டியர்

இவர் இந்தத் தென்னன்கரை நாட்டிலும், கொற்கையம் பதி ஆலயங்கள் பலவற்றிலும், கொற்கைமாரி ஆலயத்தும் காணியாளராக இருந்து வருகின்றனர். இவர் அரசரால் மதித்துத் தரப்படும் எட்டிப்பட்டம் பெற்றவர் ஆதலின் இவர் சிற்றரசருக்குரிய காணி வரிசை முதலியன பெற்றனர். இவர் கொங்கில் பல இடத்தும் வாழ்கின்றனர். பெருங்குடி வாணிகர் என்பதற்கேற்ப, இவர், பெரிய மங்கல்யந் தரிக்கின்றனர். கண்ணகி இவர்தம் குடியில் பிறந்தவர் ஆதல் பற்றி, இவர், இப்பத்தினி ஆலயத்தில் காணியாளராகப் பண்டு தொட்டு இருந்து வருகின்றனர். இவரது குடியில் வந்த பெண்மகளிருள், கண்ணம்மா என்ற பெயரைப் பலரும் தரித்து வாழ்கின்றனர். இம்மரபைச் சார்ந்த வாணிககுலத்தவர்கள், கொற்கை, தாயபுரி, தாரை முதலிய பல்லிடத்தும் வாழ்கின்றனர்.

## விழாவின் வென்றி

இத் தேவியின் விழா, பங்குனி மாத இறுதியில் கொண்டாடப் பெறுகின்றது. உஷ்ணநிலை தளரவும், மழையை விரும்பியுமே கொற்கைமாரியின் திருநாள் கொண்டாடப் பெறுகின்றது. இத்திருநாளில், அம்மை நோய் வந்து குணம் ஆனவர்

கள், முடக்குவாதம் வந்து நலம் பெற்றவர்கள், வெப்பு நோயால் கொப்புளங் கொண்டு குளிர்ந்தவர்களும்ஆகப் பல்லாயிர மக்கள், தம் சுற்றம் சூழ வந்து வணங்கும் முறை, ஒரு பக்கம் நிகழும். கண்ணிழந்தவர்களாய். அம்மனின் பாதத்தில் வந்து தீர்த்த விசேடத்தால், நலம்பெற்ற பக்தர்கள் ஆர்ப்பொலி ஒருபுறம் நிகழும். மேளவாத்தியங்கள் முழங்க, அக்கினிச் சட்டிகளைக் கரத்தில் ஏந்தி, ஆடிப்பாடி வரும் பக்தர்களின் ஆரவாரம், ஒருபுறம் நிகழும். அழகிய வட்டுடைகளை நன்கு தரித்து, பல்லாயிர மக்கள் புடைசூழ கரகந் தாங்கி மேளத்திற்கேற்ப ஆடிவரும் ஆர்ப்பு ஒருபுறம் நிகழும். வித்தையாடிகளின் கேளிக்கைகாண்போர், புலி வேடதாரிகளின் ஆட்டங்களைக் காண்போர் ஆரவாரம், ஒருபுறம். நிகழும். கடைகள், தூரிகளின் காட்சியும், பிறவும் ஒருபுறம் நிகழும். மாவிளக்கு எடுத்து வாத்திய ஒலி தழைக்க வரும் பெண்டிர் கூட்டமும், அம்மனின் அபிடேகப் பொருள்களையும் அலங்கார உடை அணிகளையும் கொணர்வோர் காட்சியும், ஒரு புறம் நிகழும். இவ்வண்ணம் பல நாட்கள் நிகழ்ந்த பின் அம்மனுக்கு அபிஷேக ஆராதனை முடிந்த பின், விழா நிகழ்ச்சிகள் ஒருவாறு முடிவடையும். விழாவின் இறுதியில், மக்கள் தத்தம் நகரங்கள், ஊர்களுக்குச்சென்றவுடன், அம்மனின் கருணை, மழையாகப் பெய்யும். மக்கள் உள்ளமும், நாட்டவர் மனமும் குளிரும் இத்திருவிழா நாளிலும், பிறகாரியங்களிலும், கொற்கைப்புரியில் தற்பொழுது அரிசு புரியும் புரவலர், வேணுடர் அவர்களே தலைவராக இருந்து நடத்துவதால், பழைய பூர்வீக நிலை சிறிதும் மாறுபாடின்றி 1800 வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சியை இன்றும் நேரில் காணலாம்.

## ஊதியூர்ச் செல்வி

ஊதியூர் என்ற பதி, தென்னன் கரைநந் நாட்டில் உள்ள மூதூர்களில் ஒன்றாகும். ஊதியனார் என்றதன் மரூஉப் பெயரே ஊதியூர் என்பதாகும். இவ்வூரில் சிவாலயம் ஒன்று, சிறந்த நிலையில் திகழ்கின்றது, இவ்வூர், தற்பொழுது தாராபுரத்திலிருந்து காங்கேயம் செல்லும் வழியில், பன்னிரண்டு கல் தொலையில் இருக்கின்றது. ஆதிகாலத்தில் இந்த ஊர்,

சேரருக் குரிய குண்டூருக் கோட்டத்தில் வீறு பெற்று விளங்கிற்று. உதியர்கள் செழித்து வாழ்ந்த நிலையில் இருந்தமையால், அக்கால முதல் இப்பதியை உதியனூர் என்றே எவரும் அழைத்தனர். இவ்வூருக்கு அண்மையில் ஒருமலை விளங்குகின்றது. ஆரம்ப நாளில் இம்மலை உதியர் என்னும் சேரருக்குச் சொந்தமாக இருந்த காரணத்தால், இம்மலை உதியர்மலை என்ற பெயரால் அழைக்கப் பெறுவதாயிற்று. இம்மலையில் குறிஞ்சி நிலத்தெய்வமான உத்தண்டவேலர், கோவில் கொண்டிருக்கின்றார். இம்மலையில் பண்டை நாளில் சித்தர்கள் பலர் வாழ்ந்திருந்தனர்; வாழ்ந்திருப்பதாகவும் ஐதீகம்.

இம் மலையில் கொங்கணர் என்னும் பெயர் பெற்ற சித்தர் ஒருவர் இருந்து, யோகு செய்தனர்; ஆதலின் இம்மலையைக் கொங்கணகிரி என்றும் அழைப்பர். கொங்கணரது கோவிலும், குகையும், இன்னும் இங்குச்சிறப்புடன் துலங்குகின்றன. கொங்கணசித்தர் சித்தியில் வல்லவர்; அவர் இம்மலையில் உள்ள சஞ்சீவி இலைச் சாறு கொண்டு, பொன்னை ஊதி எடுத்த காரணத்தால், இம்மலை பொன்னூதி மலை என்ற பெயரையும் எய்துவதாயிற்று. இந்தமலை, கொங்கின் ஒரு பகுதியாய தென்னன்கரை நாட்டில் உள்ளதாதலின், இந்த நாட்டின் தலைமை பெற்ற மலையாகவும் இது தற்பொழுது விளங்குகின்றது அருணகிரிநாதர், இந்தமலையை ஊதிமலை என்றும், கொங்கணகிரி என்றும், தமது திருப்புகழில் குறித்துப் போந்தார்.

இம்மலையடி வாரத்தில் உள்ள உதியனூர் என்னும் ஊதியூரில், சிவாலயம் ஒன்று சிறக்கின்றது இந்தப் பதியில் ஒரு செல்வி நலமுற்றுப் பெருமித நிலையில் கோவில் கொண்டிருக்கின்றாள். கருங்கோழியம்மன் என்ற அம்மையின் ஆலயமும் இங்குப் பொலிகின்றது. செல்வியின் ஆலயத்தும், சிவாலயத்தும், பூசைமுறைகள் யாவும், நல்ல முறையில் நடைபெறுகின்றன. இங்குள்ள செல்வியம்மனைச் செல்லாண்டியம்மன் என்று இயம்புவர். பேரனைப் பேராண்டி என்று அழைப்பது போல், செல்வியைச் செல்லாண்டி என்று கூறுதல் மகிழ்ச்சியால் அமைந்ததென்க.

## காணியாளர்கள்

உதியனூர் என்ற ஊருக்குக் காணியாளராக காவலவர் என்பாரும், செம்பூதர் குல வேளிரும் உரியவர் ஆவார்கள். இவ்விரு வேளிருக்குமே இவ்வூர்க் காணியுண்டு என்பது இப்பதிக்கு உரிய காணிப்பாடலால் போதருகின்றது.

அது.

"காவலோர் மெச்சுகின்ற காவலவன் செங்குவளைப்
பூவுலவு திண்புய செம்பூத்த குலன் — மேவலவன்
மோதி நகர் ஆனை, முகத்தோன்வளர் செம்பொன்
ஊதிநகர் ஆதியர் என்றோது"

என்பதாகும். இவருள் காவலர் சரிதம் வருமாறு:

### காவலவர்

சங்க காலத்திற்கு முன்பு தென் பூமி கடல்கோளால் அழிவெய்தியது. அவ்வமயம் தென்பகுதியில் உள்ள தென்னவர்கள், கொங்கில் சேரருக் குரிய குண்டூருக் கோட்டத்தையும், சோழருக் குரிய முத்தூருக் கோட்டத்தையும், கவர்ந்து பிடித்து ஆண்டனர். அவர்களுள் பாண்டியர் பிரதிநிதியாய்க் கொங்கு புரந்த குறு நிலமன்னர்களில் ஒரு சாராருக்குப், பாண்டியன், நாடுகாவல் உரிமையும் அரசுரிமையுந் தந்தனன் அவ்வழியில் நாடுகாவல் புரிந்து வந்தவர் "காவலர்" என அழைக்கப்பெற்றனர். அப்படி வந்த காவலர்கள், பண்டை நாளில், இத்தென்னன் கரைநங் நாட்டில் பல பாகங்களிலும் அரசெய்திய காவலனே இங்குயாம் குறிக்கத் தகுந்த காவலன் என்க.

இக்காவலர் வம்சம் பண்டை நாளில் தென்னன் கரை நங் நாடு முழுமையும் பரவிய நிலையில் இருந்தது. தற்பொழுது இவ்வம்மிசத்தவர்கள் அதிகமாக இல்லை. இருந்தவர்களும் தங்கள் காணி, உரிமை முதலியவைகளை ஈங்குள்ள வேளிர் பெருமக்களுக்கு விற்று விட்டு எங்கேயோ சென்று விட்டனர்.

ஊதியூர்த்தலைமைக் காவலன் குடும்பம், சுமார் ஐம்பதாண்டுவரை இப்பதியில் இருந்ததாகும். இருந்தவரையிலும், சிறப்

பியலிலேயே இருந்தமை பேசப் பெறுகின்றது. தற்பொழுது காவலர் என்பவர் இல்லை. அவர்கள் தலைமையும் இங்கு இன்று இல்லை.

## செம்பூதர்

ஊதியூரில் புராதன கால முதல் பரம்பரையாகத் தலைமக்களாக, தேன்கரை நாடு புகழும் காணியாளராக வாழ்ந்து வந்தவர் செம்பூத குல வேளிர்களே. இந்த நாட்டில் பூதப் பாண்டி என்னும் ஊரில் ஒரு பூதன் பூதப்பாண்டியன் என்ற பெயரால் அரசெய்தி இருந்தனன். அவன் கருநிறத்தோடு இருந்தமையால் அவனைக் கரும்பூதன் என்றும், இம்மன்னன் செம்மை நிறமாக இருந்தமையால் இவனைச் செம்பூதன் என்றும் கூறும் பழக்கம் அந்த நாளையது; ஆதலால், ஊதியூர்த் தலைவனுன இம்மன்னனை செம்பூதன் என்றே யாருங் குறித்தனர்.

பண்டை நாளில் புள்வேளூரில் இவர் பரம்பரையில் ஒரு பூதன் சிறந்த நிலையில் வாழ்ந்து வந்தனன். அவனை அக்காலத்தவர் புள்வேளூர்ப் பூதன் என்று அழைத்தனர். இப்பூதன் பெருங் கொடையாளி. ஔவையாரால் புகழ்ந்து பாடப்பட்டவன். இவன் பரம் பரையில் வந்த செம்பூதன் ஒருவனைப் பிடவூர்ப் பொற்றேர்ப் பெரியன் என்னும் வேளுடைமன்னன் தனக்கு மந்திரியாக அழைத்த நிலையில் கொற்கை நகருக்கு இப் பூதன் பரம்பரையார் வந்தனர் என்பது இவர் பரம்பரையின் சரிதம் ஆகும்.

செம் பூதர்களில் ஒரு பெருமகன் பொற்றேர்ப் பெரியன் என்னும் வேளுடை மன்னனுக்குத் துணையாய்ச் சென்று பூதப் பாண்டிய மன்னனை வென்ற நிலை செம்பூதர் குடும்ப சரிதத்தால் விளங்குவதாம். சங்ககால முதலாகப் புலவர் பாடும் புகழாளராக அரசு புரியும் காணியாளராக, வண்மை வாய்ந்த கையின ராக வாழ்ந்த செம் பூதர் வரலாறு, கொங்கு நாட்டுப் புலவர்கள் பாடலில் பலவாறுகக் காணப்படுகின்றது. வீரஞ் சான்ற இவர்கள், கொங்கின் பல பாகங்களிலும் அரசெய்தி வாழ்ந்தனர். பல இடங்களிலும் குறு நில மன்னராயிருந்த

னர் என்பது செம்பூதர் குலச்சிறப்புப் பாடல்களால் விளங்கு வதாம். அப்பாடல்கள் :

மண்டலந் தன்னில்வளர் மாண்புனியும் இரணபுரம்
  மண்பத்தூர் அத்தனூரும்
வயராசியும் குமரமங்கலமும் அந்தியூர்
  வளம்பெற்ற நாம, கூடல்
வண்டமிழ்க் காடனூர் கண்ட குலமாணிக்கம்
  வாகைகிரம்பூரும்
மன்னுதாராபுரம் ரிதன்சேரி விதரிநகர்
  மான சேலூர் மொஞ்சனூர்
எண்டிசை விளங்குகூடச்சேரி குமரனூர்
  இலகுபுல்லூர் சிவதையும்
இயல்சேர் நல் உத்தமச் சோழபுர மென்னுமெழு
  மாத்தூருடன் நலஞ்சேர்
திண்டமங்கலமும் வைகுந்தபுரம் உடுதுறை
  தென்கொற்கையூர் திருமலை
செல்வனெனும் முதலி மகராஜன் பிறந்திரும்
  செம்பூதர் குலக் காணியே
சீர்மருவு கீரம்பூர் பிரசை வேட்டம் பாடி
  தென் கொற்கையூர் விதரியும்
செய்ய புகழ் மன்னகர் இடும்பை காதற்பள்ளி
  செய்ய வேலூரு நத்தம்
கார் மருவு சோலை செறி பிள்ளையாரந்தமும்
  கரும நகர் விசனமதும்
கனமிகு முருங்கைப் பெருந்தொழு வயோத்தியும்
  கல்வி சேர் தோகை நத்தம்
ஏர் மருவு கொங்கு தாராபுரமும் மிக்காட
  எழில் தரம தான நல்லூர்
இனிய தென் கொல்லிமலை எண்பத்தெட்
  டூருக்கும் இறைவனே செம்பூதனே
வாரணியும் முலைமாதர் வேளென மதிக்கவரு
  மைந்தனும் ஐந்து தருவாம்
வானவர்கள் புகழவரு நலகுமாரேந்த்ரனே
  மாற்றலர் மனத்தின் இடியே

இவைகளாகும். இப்பாடல்களால் இவர்கள், கொல்லிமலை சூழ்ந்த எண்பத்தெட்டூருக்கும் இறைவர் என்பதும், மற்றும் இவ

ருக்குப் பல இடத்தும் காணியுண்டு என்பதும் நாம் அறிதல் கூடும். செம்பூதர் என்ற சொல், சிவந்த பெரிய உருவினர் என்பது போலும்.

## செம்பூதரும் ஊதியூர்ப் புராதனமும்

செம்பூதர்கள் ஆரம்ப காலத்தில் பல இடங்களிலும் அரசெய்தி வாழ்ந்த நிலையினை யாம் கண்டோம். இவர்களுக்கு ஊதியூர்க் காணி கிடைத்ததைப் பற்றி ஆராயலாம். உதியனூரில் காவலர் என்ற பாண்டிய பரம்பரையினர் அரசெய்தி இருந்த காலத்தில், செம்பூதர் கிளையினரில் ஒரு கூட்டத்தார் கொற்கையப்பதியில் காணியாளராக வாழ்ந்து வந்தனர். அவ்வமயம், உதியனூரில் காவலனாக, வேலப்பபூபதி என்பவன் குறுநிலமன்னனாக வாழ்ந்தனன். இம் மன்னன் ஆட்சி புரியுங்காலத்தில் யோக நெறியிற் செல்லும் யோகிகள் சிலர் உதியனூர் மலையில் யோக நெறியில் நின்றனர். அவர்களது கூட்டுறவால் யோக நெறிவாயிலாக இம் மன்னன் நன்னாள் ஒன்றில் வீடு அடையலாயினான். இம்மன்னவன் தேவியார் வள்ளியம்மை என்னும் பெயரினர்: கற்புக்கடம் பூண்டவர்: கணவன் பிரிவை சகியாத அவர் தீப்பாய எண்ணி அதற்கு ஆவன செய்து தரும்படி தம் கிளைஞரை வேண்டினாள். அவர்கள் அதற்குச் சம்மதியாதவர் ஆகி நின்றனர். வள்ளியம்மை, தீப்பாயத் தகுந்த நிலையில் உடுப்பன உடுத்துப், பின்னி உத்தண்டவேலர் சந்நிதியில் சென்று தங்குறையை விண்ணப்பித்து நின்றனள். உண்ணாவிரதம் பூண்டு உயிர் விடத் துணிந்த அம்மையின் இச்செயல் நாடெங்கும் பரவுவதாயிற்று.

அவ்வமயம் கொற்கை நகரில் காணி கொண்டு வாழ்ந்த செம்பூதரில் ஒரு பெருமான், இச் செய்தி கேட்டுப் பத்தினியின் செய்கைக்கு உதவ முன் வந்தனன். உண்ணா நோன்பு நோற்று உயிர் விடும் அம்மையின் மனம் இச் செம்பூதன் செய்கைக்கு உவப் படைந்தது. சமாதி யொன்றில் தன்னை யிருத்தும்படி அவ்வம்மை இச் செம்பூதனை வேண்டினாள். உதியனூருக்குப் பக்கத்தில் உள்ள மூக்கணாங் கோட்டையில் வாழும் ஆசாரி ஒருவனைக் கொண்டு அம்மைக்கு ஆசனப்பலகை

யொன்று செய்து அம்மையை அதில் இருத்தி அம்மையின் எண்ணத்தைப் பூர்த்தி செய்தான்.

உயிர் விடுமுன் அவ்வம்மை செம் பூதனைப்பார்த்து "சந்ராதித்தர் உள்ளளவும் எம் ஊதிரகர் உன்னைச் சார்வதாகுக. இவ்வூர்க் காணி இன்று முதல் உனக்கே உரியதாகுக. இதனைத் திருமூர்த்திகள் அறிவார்களாக. எமது ஏவலனை மொண்டியும், வேட்டுவநாவிதனும், சாம்புவனும் உனது அடைக்கலம் ஆகுவர். இவர்களை வைத்துக் காப்பாயாக" என்று பட்டயம் எழுதித் தந்தனர். அது முதல் ஊதியூர்ப் புராதனத் தலைமை இவரையே சார்ந்ததாயிற்று என்பது செம்பூதர் காணிப்பட்டயம் ஆகும்.

## கொங்குவேளிரும் செல்வியும்

கொங்கு என்னும் இந்த நாட்டில் பண்டைக் கால முதல் கொங்கர்கள் என்ற பாண்டியர் தம் புத்திரவர்க்கத்தவர் ஆட்சியும், கொங்குவேளிர் என்னும் குறுநில மன்னவர் ஆட்சியும் நடைபெற்று வந்தது. கொங்குவேளிர் ஆவார்: பண்டு இப்பகுதியை அரசு புரிந்து வந்த, சேர, சோழ பாண்டிய மன்னவர் தம் குடியில் பிறந்து, அவர் தம் பகுதியில் அவர் தம் பெயரால், அரசு புரிந்து வந்த காணியாளர் ஆவர். கொங்குவேளிர் என்ற சொல் கொங்கில் அரசு புரிந்து வந்த சிற்றரசர் என்னும் பொருளது. வேளிர் என்ற சொல் சிற்றரசரைக் குறிப்பது என்பதைச் சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையால் காணத் தருவதாம். வேளிராவர்; சிற்றரசர்: சிற்றரசராவார். காணியாளர்; காணியாளராவார்: சாமந்தர்; சாமந்தராவார்; வீழ்குடியுழவர் என்று அடியார்க்கு நல்லார் எழுதுகின்றார்.

கொங்குவேளிர்கள், அறுபது குடிமாட்சியர். இக்கூட்டத்தார் யாவரும், தந்தையின் பெயரால் கொண்ட கூட்டத்தைத் தமது குடிப் பெயராக வைத்துக் கொள்ளுந் தகுதியர். இப்பிரிவின் சிறு பகுதியை இங்கே தருகிறேன். அவராவார், பண்ணை ஓதாளர், பெரியகுலர், கோவேந்தர், பொன்னர், குழையர், பயிறனர், நீலர் செங்கண்ணர், பொருளந்தை, காடை, வெளியர்

புல்லர், கூறர், சாத்தந்தை, ஆந்தை, பூசன், அந்துவர், மாடர், பவளர், வாணர்; பூச்சந்தை, வெண்ணுழவர், செம்பூதர், நீரு ணியர் பெருங்குடி, ஆதி, வண்ணக்கன் பொன்னக்கர், செழி யர், சேடர் வில்லியர் செங்குன்றர் செவ்வாயர், பள்ளியர் பாண்டியர், தேவேந்திரர், குங்குலியர், குணுக்கர், குயிலர், சேரலர், பனையர், மயிலர், வெள்ளம்பர், மணியர், கணவாளர் முத்தர், முதலியோர் ஆவர். இவர்களது விரிவான சரிதம் கொங்கு வேளிர் என்ற எனது நூலில் காண்க.

இவர்கள், சேரலர் வாழ்ந்த குட நாட்டை யொட்டியும், அவனது குணவாயில் வளநாட்டை யொட்டியும், சோழருக் குரிய முத்தூருக் கோட்டத்தை யொட்டியும் உள்ள பதிகளில் பண்டும் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் செல்வி யின் கோவில் எடுத்துப் போற்றிய பெருமையினர் ஆதலின், இவர்களைப் பற்றியும், இந்த நூலில் அறிந்து கொள்ளும் வாய்ப்பு அமைகின்றது. இவர்களுள், நீலன் என்பவன், செங் குட்டுவன் காலத்து வாழ்ந்து வந்தவன் ஆதலின், அவன் எடுத் துப் போற்றிய செல்வியைப் பற்றி அறிதல் மிகவும் அவசியம் ஆகும்.

இப்பெயர் கொண்ட வேளிர் பெருமகன், சிலப்பதிகார காலத்து வாழ்ந்தவன், நெடுஞ் சட்டை அணிந்த செங்குட்டு வன் பிரதானிகளுள் ஒருவன். கஞ்சுகர் முதல்வன்; தூதுவர் தலைவன்; சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று அமரில் பிடித்து வந்த, கனகவிஜயரைச் சோழ, பாண்டிய மன்னரிடம் காட்டி வரச் சென்று வந்தவர்களில், முதல்வன்.

"நீலன் முதலிய கஞ்சுகமாக்கள்
மாடல மறையோன் தன்னொடுந் தோன்றி
வாயிலாளரின் மன்னவர்க் குணர்த்தி
கோயில் மாக்களில் கொற்றவர்த் தொழுது
ஏனை மன்னவர் இருவருங்கூறிய
நீண்மொழி யெல்லாம் நீலன் கூற"

என்ற அடிகள் இங்குக் கருதத் தக்கது. இவன் வாழ்ந்தபதி, நீலனூர் என்ற பெயரால் தற்பொழுது கேட்கப்படுகின்றது.

இந்த நகரம் இல்லையாயினும், இதனை யொட்டிய சிற்றூர்களுக்கு இப்பெயர் தலைநகரமாக தற்பொழுதைய அரசாங்கக் கிராமங்களில் இடம் பெறுகின்றது. பழைய காலப்பதி என்பதனை, ஊர்ப் பெயர் மாத்திரம் இருப்ப ஊர் இல்லாத நிலைமையால் தான் அறிய இயலும்.

## நீலனூர்ச் செல்வி

நீலனூர்ப்பதியில் இடிந்த மேடுகளும். கற்கோயில்கள் சிதைந்தனவாகியன பலவும் இன்றுங் காணலாம். இப்பதி, தற்பொழுதைய தாராபுரத்தினின்றும் ஆறுகல் தொலைவில் உள்ளது. இவ்விடத்தில் ஒரு செல்வியின் ஆலயம் சிறந்த நிலையில் காட்சி அளிக்கின்றது. இச்செல்வியை, இந்த நாட்டவர், ஊரவர் பலரும் சிறந்த, பக்தி முறையில் வணங்கி வருகின்றனர். சிறந்த காலங்களில் தேன்கரை நாடாகிய இந்த நாட்டுக்குரிய ஆதி சைவக்குருக்களாலும், அல்லாத காலங்ளில், இந்நாட்டில் வாழும் பண்டாரங்களாலும், இவ்வம்மை பூசிக்கப் பெறுகின்றாள். திருமண காலங்களில் பூ வைத்துக் கேட்டுத் திருமணம் செய்விப்பதும், மணந்து கொண்ட மணமக்கள் மணக்கோலத்துடன் வந்து, இவ்வம்மையைத் தரிசித்த பின்னர், தம் இல்லறம் நடத்தத்தொடங்குவதும், அம்மையின் அருளைப் பெற்ற பின்பே என்ற நிலை, இங்கு சாதாரண நிகழ்ச்சிகளாக நடைபெறுகின்றன.

## காணியாளர்

இந்தக் கோவிலைப் போற்றுங் காணியாளர்கள் அறுவர். அவராவார்: நீலர், செட்டியர், சேரர், கஞ்சர் முதலியோர் ஆவர். நீலர் என்பவரே இவ்வாலயத்திற்கு, முதல் மரியாதை பெறுதற்குரியவர். அவர்தம் பெயர் இன்றும் வழங்கியிருப்ப அக்குலத்தவர் இல்லாமை மிகவும் வருந்துதற்குரியது அவர் இல்லாததால், அவர் தம் முதல் மரியாதைகள் யாவும், அம்மன் பாதத்திலேயே இடப்படுகின்றன. அடுத்தபடியாக, செட்டியர் கூட்டத்தாருக்கு இரண்டாவது பெருமையை நாட்டார் வழங்கி வந்துள்ளனர் இச் செட்டியார் எட்டிப் பட்டம் பெற்ற வணிக மன்னர் கூட்டத்தவர். கண்ணகி பிறந்த

பெருங் குடியில் தோன்றியவர். மூன்ருவதாக ஈஞ்சர் என்ற கொங்குவேளிர் கூட்டத்தாருக்கும், நான்காவது வழங்கப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சிகள் யாவும் பண்டை நாள் தொடங்கி, இன்று வரையிலும் நிகழ்ந்து வருதல் மிகவும் வியக்குதற்குரியது. இதனை நாட்டுப் பாடல்களும், காணிப் பாடல்களும் விளங்க எடுத்தியம்புவன.

> **செட்டி முதல் ஈஞ்சன் சேரன் பரவுதங்கக்**
> **கட்டி யெனும் நீலனூர்க் காளியம்மன்—இட்டமிடும்**
> **காமியத்தை யே யருளும் காணி பெற்ற மால்சோழ**
> **சாமி மிகுந்த தலம்.**

என்ற காணிப் பாடல் இங்குக் கருதத் தகுவது.

## மூலனூர்ச் செல்வி

மூலனூர் என்பது தென்னன்கரை நாட்டில், இரண்டாவது சிறப்புக்குரிய நகரமாகப் பண்டும் கருதப்பட்டது. இன்றும் கருதப்படுகிறது. இங்குப் பண்டை நாளில், சேரர் கிளையினரில் ஒரு சிலர் அரசெய்தி யிருந்த நிலை தெரிகின்றது. மூலனூர் என்று வழங்கும் இந்த நகரைப் பண்டு "வஞ்சிமா நகரம்" என்று அழைத்தனர். இந்த நகரில், கோட்டைமேடு ஒன்று உள்ளது. இது இந்த நகரின் பழைமைக்கு ஓர் அறிகுறியேயாகும். இந்த நகரம் தாராபுரத்திற்குக் கிழக்கே கரூர் செல்லும் வழியில் பத்தொறு கல் தொலைவில் உள்ளது.

## செல்வி

இந்த நகரத்தில் உள்ள செல்வியின் ஆலயம் இடிந்த கோட்டையை யொட்டி இருக்கின்றது. இவ்வம்மையை வஞ்சியம்மன் என்ற தொடரால் அழைக்கப்படுதலால் இந்த நகர், பண்டு வஞ்சிபுரி என்ற பெயரால் வழங்கப்பட்டிருந்தது என்பதை அறியலாம். இச்செல்வியம்மனேயன்றி, பழைய சிவாலயம் ஒன்றும், முருகர் ஆலயம் ஒன்றும் இவ்வணி நகரில் உள்ளன. ஆயினும், காணித் தெய்வமாகக் கருதி வழிபடுந் தெய்வம் வஞ்சியம்மன் என்னும் இச்செல்வியே யாகும்.

இச்செல்வியை வழிபடு தெய்வமாக நல்லமுறையில் போற்றும் காணியாளர் பலரும் இவ்வம்மையை வழிபடுதல் மாத்திரம் அன்றி, இவ்வம்மையின் பெயரைத் தம் குடிப் பெயராக எண்ணித் தம் குமாரர் குமரியர் இவர்களுக்கு இட்டு வழங்கும் பழக்கம் பரம்பரைப் பழக்கமாக ஆகும்.

## காணியாளர்

இவ்வம்மையைச் சிறப்புறப் போற்றும் காணியாளர் ஐவராவர். அவர் சேரலர், பூசன், செட்டி, கம்பளத்தார், சீராளர் என்பவர் ஆவர். இதனை இவ்வண்ணம் காட்டும் நாட்டுக் காணிப் பாடல் வருமாறு :—

மூலகுல சேரலன்: முன்பூசன் செட்டியுடன்
சீலமுள கம்பளத்தான் சீராளன்—மூலநகர்க்
காணி கொண்ட செல்வர் கருணை தழைத் தோங்க
வேணமுதன் மையைந்து மே

இப்பாடலே காணிப்பாடல். இதனுள், மேற்குறித்த காணியாளர்கள் குறிக்கப்படுகின்றனர். அவர்கள் நிலையினை ஆராய்தலும் அவசியம் ஆகும்.

## சேரலர்

சேரலர் ஆவார் சேர மன்னரின் பரம்பரையைச் சார்ந்த வேளிர்களாவார். இவர்கள் பண்டை நாளில், இப்பதியைத் தலைநகராகக் கொண்டு, இந்த நாட்டின் பல பாகங்களையும் ஆண்டு வந்த காணியாளர். இவரது குல தெய்வமாக இவ் வஞ்சியம்மை இருந்து வருகின்றாள். வஞ்சியம்மைக்கு எடுக்கும், திருநாட்களில், படைக்கலம் எடுத்தல், முதல் மரியாதை பெறுதல் முதலிய சிறப்பியல்கள், இச்சேரலர்களுக்குப் பண்டிருந்தது. இன்றும் இப்பரம்பரையார்க்கே இருந்து வருதல் காணத் தகுவது.

## பூசன் கூட்டத்தார்

இரண்டாவதாக, இந்த நகரத்திலும், இந்த ஆலயத்தும் வேறு சிவாலயத்தும், பூசர் என்ற வேளிர் குலத்தார்க்கே

வழங்கப்படுகின்றது. பூசர் என்பவர், பூதப்பாண்டிய மன்னன் பரம்பரையினரேயாவர். பூதர் கூட்டம் என்ற சொல் மரூஉ மொழியாகப் பூசன் கூட்டம் என்று வழங்கி வருகின்றது. பூதப்பாண்டி, என்ற நகரமும், புதுப்பை என்ற பெயரால், மூலனூருக்கு இரண்டு கல் தொலைவிலிருந்து வருவதும் ஆங்கு பூதப்பாண்டியன் பரம்பரையார் பட்டவர்த்தனராய் இருந்து வருதலும் இங்குள்ளார் பலரும் அறிவர். நேரில் வந்து காண்பார்க்கே இந்த நிலை கண்கூடாக விளங்கும். பூதப்பாண்டியன் இறந்து பட்டதும் அந்த நகரம் பொறற்றோர்ப் பெரியன் பரம்பரையார்க்கு உரிமையான செய்தி முன்னரே அறிவிக்கப்பட்டது. அப்பூதப் பாண்டியன் பரம்பரையார் அப்பதியை விட்டு, சேரலனுக்கு உரிய பகுதிகளில், வீழ்குடி உழவராக வாழ்ந்து வருவாராயினர். இவர்கள் வீரத்தையும், பரம்பரை மேன்மையையும் மதித்து சேரலன். இவர்களைத் தனக்கு உதவியாளராக ஆக்க எண்ணி இவர் தம் பரம்பரையில் வந்த இளைஞன் ஒருவனுக்குத் தனது மகளை மணஞ் செய்து தந்தனன். அன்றியும், இந்த நாட்டிலும், இந்தப் பதியிலும், காணியும் தந்தனன். அது முதல் இப் பூதன் கூட்டத்தார்க்கு இந்த இடத்தும் பிற ஆலயங்களிலும் காணி முறைமை கிடைத்தது. இதனைப் பூதன் கூட்டத்தார் வேறு விதமாகக் கூறுகிறார்கள். அஃதாவது மூலனூர்ப் பதியில் வாழ்ந்த சேரமன் ஒருவனுக்கு, வெண்மை நிறத்தோடு கூடிய பெண்ணொருத்தி பிறந்தாள் என்றும், அவள், மணப் பருவம் எய்தியும், அரசகுமாரர் எவரும் விரும்பாத நிலையில் இருந்ததால், சேரமன், இவளை மணக்கும் வேளிர் குலத் தோன்றலுக்கு, தனது நாடும், நகரமும், காணி உரிமையாவும் தருவதாகக் கூற, பூதன் கூட்டத்தாரில் ஒருவன் மணக்க, அது முதல், இந்தப் பதியும், பிற இடமும், இவருக்கே உரியதாயிற்று என்பது, பூசர் கூட்டத்தாரின் கூற்று.

இம்முறை யாதாயினும் ஆக; பூதன் கூட்டத்தாருக்கு இவ்விடமும், இப்பதியும், இவ்வம்மன் ஆலயமும் சொந்தம் என்ற ஒன்றுமட்டும் உறுதியாகக் கொள்ளத்தகுவது ஒன்று. இப்பூதன் கூட்டத்தார், புதுப்பை, சின்னக்காம்பட்டி, மூலனூர், காளிபாளையம் முதலிய இடங்களில், காணியாளராய், வீழ் குடியுழவராய், பல்லக்கு, பொன்னூஞ்சல் முதலிய

விருதுகளுடன் இன்னும் இருந்து வருதல் கண்கூடு. ஆதலால் இச்சரிதம் போற்றத்தகுந்த தொன்றே.

## செட்டியர்

மூலனூர் என்ற பதிக்கும் இவ்வம்மையின் ஆலயத்திற்கும் பெருங்குடிவாணிகராய செட்டியர் மூன்றாவது காணியாளராகப் போற்றப்படுகின்றனர். இவர்கள் பத்தினித் தேவியாம், செல்வி பிறந்த குடியினர் ஆதலின் இப்பதியேயன்றிக் கொங்கு நாட்டில் எல்லாச் செல்வியின் ஆலயத்தும் இவர்கள் காணியாளராகப் போற்றப்படுகின்றார். இவர்கள் குடிப்பெயரில் பெருங்குடி ; பூசர் என்ற பெயர்கள் உண்டு.

## கம்பளத்தார்

இவர்களுக்கு இவ்வாலயத்து நான்காவது காணி இருந்து வருகின்றது. நாயக்க மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் இப்பதி இவருக்குச் சொந்தமாய காரணத்தால் இவர் நான்காவது காணியாளர் ஆனார்கள் போலும்.

## சீராளர்

இவர் ஆயர் வம்மிசத்தைச் சார்ந்தவர்; இப்பரம்பரையார் ஒரு காலத்தில் கொங்கில், இப்பகுதியை யொட்டிய அண்டர் நாட்டுப்பகுதியில் அரசெய்தியவர். ஆதலால் அவ்வுரிமை பற்றி இவர்கள் இங்குக் காணி பெறுகின்றனர் போலும்; அண்டர் நாடு என்ற நாடும், இடையர் கோட்டை என்ற சிறு நகரமும் இங்குண்டு என்று குறிப்பது இங்கு மிகையாகாது.

## இளம்பிள்ளை நகரச் செல்வி

இளம்பிள்ளை நகரம் என்பது, தென்னன்கரை நாட்டில் கீழ்பால், மூலனூரை யொட்டி உள்ளதொரு பழம்பதி. இந்த நகரம் பூதப்பாண்டி மன்னனிடம் இருந்து பொற்றேர்ப் பெரியன் என்னும் மன்னனுக்கு மாறியதோர் நகரம். இந்த நகரம் வேணாட மன்னனின் இளம் பிள்ளையின் கொற்றத்தில் அமைந்ததாகலின் இப்பெயர் பெற்றதென்பர். அவ்வணி நகர், அமராவதி நதிக்கரையில் உள்ளது. இந்த நகரில், செல்வியின் ஆலயம்

ஒன்று, அமராவதி நதிக்கரையில் அழகு பெற இலங்குகின்றது. இவ்வம்மையின் ஆலயம் மிகவும் புராதனமானது. அம்மையின் அருட்டகமை மிகவும் வியக்குதற் குரியது. இவ்வம்மையின் விழா இங்குப் பெரிதும் போற்றத் தகுந்த முறையில் வழங்கப் பெறுகின்றது.

## மண் குதிரை புல்லுண்டது.

இவ்வாலயத்தில் உள்ள அம்மையின் அருளைப்பற்றிய சரிதம் பின்வருமாறு: இவ்வம்மையின் அருளை வியவாத ஒரு சிலர் சந்தேகங்கொண்டு இருந்தனர். மற்ருெரு சாரார் அருளை வியந்து வந்தனர். அருளை வியவாத கூட்டத்தாரும், மற்றை யாரும் விழாநாளில் ஒன்று கூடியிருந்தனர். அம்மன் விழாவில் மண் குதிரை ஒன்றை அலங்கரித்து வந்திருந்தனர். வியவாத கூட்டத்தினரில் ஒரு சிலர் கையில் புல்லைப்பிடுங்கிக் கட்டி வந்து, மண்குதிரையின் முன்னர் இட்டு, அம்மனின் அருளால், இம்மண் குதிரை புல் உண்ணுமாயின், இவ்வம்மைக்கு யாங்கள் என்றும் தொண்டர்களே என்றனர். பக்தர்கள் போற்றினர். அம்மன் அருள் செய்தனள். மண் குதிரை புல் லுண்டது. கண்டார் வியந்து போற்றினர். இச் செய்தி கொங்கு மண்டில சதகத்தாலும் வலியுறுகின்றது.

மண் குதிரை புல்லுண்ட நிலைக்கு அடையாளமாகப புல்லை யூட்டுகின்ருன். உருவமும், புல்லை யுண்ட குதிரையின் உருவமும் இன்னுங் காணத்தகுந்த நிலையில் உள்ளன.

## காணியாளர்

இளம் பிள்ளை என்னும் அணி நக்ரத்தைப் பெரியனின் இளம் பிள்ளை ஆண்டுவந்த சமயம், பூதன் கூட்டத்தார் பெரியனுடன் உறவு கொண்டாடி, தங்கள் உறவுக்கு அறி குறியாக, பெரியனின் இளம் பிள்ளைக்கு தங்கள் பெண் ஒருத்தியை மணஞ்செய்து தந்தனர். அது முதல், பெரியன் என்னும் வேளுடன் பரம்பரையார் பூதப்பாண்டி, இளம் பிள்ளை முதலிய ஊர்களைப் பூதப்பாண்டியன் பரம்பரை யார்க்கே தந்து, அவர்களைத் தனது பகுதி அரசருள் ஒருவராக ஆக்கி, தென் கரை நாட்டின், கீழ்முகப்பகுதியை அவர்

களுக்கே விட்டு விட்டனர். அது முதலாக இளம் பிள்ளை நகரம் பூதப்பாண்டி மன்னன் வசம் ஆயது. அதன் பின் கொங்கு நாட்டில் பலபாகங்களிலும் பல்லவர் ஆயகாடவகுல மன்னர் ஆட்சி பரவத் தொடங்கிற்று. அவ்வமயம் காடவ மன்னரில் ஒருசாரார் படையெடுப்பில் இளம் பிள்ளை நகரம் பிடிபட்டது. அந்த நாள் முதல் அந்த நகரத்தில், காடவ குல வேளிரே காணியாளராக இருந்து வரலாயினர். இவர்கள் ஆட்சியில், அந்த நகரில், மற்றொரு செல்வியம்மனை அவர்கள் நிலைபெறுத்தினர். அவ்வம்மையைச் சின்னம்மன் என்று பெயரிட்டு வணங்கி வரலாயினர். இவ்வரலாற்றைக் குறிக்கும் காணிப்பாடல் ஒன்றும் காணக் கிடக்கின்றது. அது,

> **செல்லாண்டி யம்மன் அருள்சின்னம்மனைப்பணியும்**
> **வல்லாளன் காடைகுல வண்மையான்—நல்ல தவ**
> **மாதவரும் நீராட வந்திலங்கும் ஆன்பொருனை**
> **ஓதும் இளம்பிள்ளையூர்.**

இதுவாகும்.

## கொற்கைச் செல்வி

கொற்கை நகரில் வட பகுதியில் பல தேவகுலங்கள் இருக்கின்றன. அவைகள் பலவற்றுள்ளும், வட பகுதியின் கோடியில், செல்வி என்ற பெயரில், ஒரு தேவி காட்சி அளிக்கின்றாள். இவ்வம்மையின் ஆலயம் சிறந்து விளங்குகின்றது. ஆண்டுகள் தோறும் திருவிழாக் கொண்டாடப்படுகிறது. மற்றைய தெய்வங்களுக்கில்லாத சிறப்பியல் இவ்வம்மையிடம் உண்டு என்று இப்பகுதியார் கூறுகின்றனர்.

## காணியாளர்

இவ்வாலயப் பாதுகாவலும், இப்பகுதியில் அமைந்த நகரப் பாதுகாவலும் செய்யும் காணியாளர் சேரன் கூட்டத்தார் என்ற கொங்குவேளிர் பரம்பரையாரேயாவர். ஆண்டுவிழா முதலியன நடத்தும் பெருமையும், முதல் மரியாதை பெறும் பெருமையும் இவர்களுக்கே உரியதாகின்றது. இவர்களை இப்பகுதியினர் கொற்கைச் சேரர் அல்லது கொற்றைச் சேரர் என்றே இன்னும் அழைக்கின்றனர்.

## குறிச்சிச் செல்வி

குறிச்சி நகர் என்ற பெயருள்ளதோர் நகரம் தென்கரை நாட்டில் இருக்கின்றது. குறிச்சி என்ற நகரம் பண்டு இருந்தது. இப்பொழுது அந்த நகரம் இல்லை. ஆயினும் கோட்டையும் பிறவும் இருந்ததிற்கு அறிகுறிகள் பல இருக்கின்றன. இவ்வணி நகர் இன்பொருனை நதிக்கரையில் பண்டு அழகுடன் பொலிந்தது என்பர். இவ்வணி நகரை அகிலாண்டபுரி, அல்லது அழகாபுரி எனப் பண்டு அழைத்தனர் என்பர். இங்கு ஓர் சிவாலயம் உண்டு. அழகீசர் என்பது ஈசனின் பெயர். இவ்வணி நகரில் ஓர் செல்வி திகழ்கின்றாள். அச்செல்வியை தற்பொழுதைய மக்கள் பொன்னச்சியம்மன் என்ற பெயரால் அழைக்கின்றனர். இத் தெய்வத்திற்கு இவ்வணி நகரில் ஆண்டு விழாச் செய்கின்றனர்.

## காணியாளர்

இந்த நகரில் முதல் பெருமை கொள்ளும் காணியாளரை, காணியாளர் என்றே அழைக்கின்றனர். அவர்களைக் காவலியர் என்றும், பள்ளி கொண்டார் என்றும் கூறுப. இந்த நகரத்துக்கு ஆதிக்காணியாளரும் தலைவரும் அவரேயாவர்.

இரண்டாவது காணியாளராக, கொங்குவேளிரும் ஆந்தை கூட்டத்தவர் போற்றப்படுகின்றனர். அவர்களே தான் தற்பொழுது கிராமத் தலைவராகவும், கிராமப் பெருநிலக்கிழவராகவும் இருந்து வருகின்றனர். கொற்கையம்பதிப் புரவலரான, வேணாடர், இக்குறிச்சிப் பதியை மேற்குறித்த காவலரிடமிருந்து வென்று பிடித்து, தனது சம்பந்தியாக வந்த ஆந்தையருக்கு அளித்தனர் என்றும், தனது மகளுக்குச் சீதனமாக இப்பூமி அவர்களிடம் தந்தனர் என்றும், அது முதல் இப்பதி அவருக்குச் சொந்தமாயிற்றென்றும் கூறுப. அன்றியும், அவ்வாந்தை கூட்டத்து வேளிர்கள் கொற்கை நகரப் புரவலரான வேணாடருக்கு மந்திரியாகவும் இருந்தனர் என்பதும், நாட்டுப் பிரபந்தங்களால் கண்டதொன்றாகும். இச் செயல்கள் யாவும், தென்கரை நாட்டுக் குறவஞ்சி, விறலி விடுதூது முதலியனவற்றால் கண்டு கொள்க.

இவர்கள் இந்த நகரத்திற் குரியவர் என்பதை ஊர்க்காணிப் பாடல்களும் குறிப்பிடுகின்றன. அது,

"குடிகன் பொன்னூதிக் குமரனைப் பெற்ற
அழகிசர் பொன்னுச்சியம்மன் — பழகும்
அருள்பரவும் பன்னிகொண்டான் ஆந்தைகுல மன்னர்
பரவும் குறிச்சிப் பதி"

இதுவாகும்: இப்பாடலுள், பன்னிகொண்டார், ஆந்தையர் என்ற இவ்விரு காணியாளர்களும் குறிச்சிப்பதி உரிமை உண்டு என்று கூறுதல் காண்க.

## தில்லைபுரிச் செல்வி.

தில்லைபுரி என்பது, தற்பொழுது தாராபுரம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இப்பதிக்கு விராடபுரி என்றும், வஞ்சிபுரி என்றும், தில்லைபுரி என்றும், தாரகாபுரி என்றும் பெயர் வழங்கியதுண்டு என்பதை, குடவாயில் வளநாட்டு ஓதாளர் என்னும் வேளிர் குலத்தார் குறவஞ்சியில் காண்பதொன்று. இப்பதியாம் தாராபுரிக்கு, தாருகாந்தபுரம் என்ற பெயர் உண்டென்று கூறி, அதற்குச் சிறிதும் பொருந்தாத தாருகாசூர சம்பந்தத்தை யுண்டு பண்ணி, தாருகாந்தபுரமே தாராபுரம் ஆயிற்று என்பார் ஒரு சாரார்; மற்றொரு சாரார் ராஜராஜபுரமே தாராபுரம் ஆயிற்று என்பர். இவ்விரு சாரார் கூறுவதும், நாட்டில் உள்ள பிரபந்தங்களுக்கும் வரலாற்று முறைமைக்கும் சிறிதும் பொருந்தமில்லாமையால் அது அன்றென்க. விராடர் என்ற கொங்கர்களாகிய பாண்டியர் ஆட்சி நிலவிய அந்த நாளில், அதற்கு விராடபுரி என்பதும், சேரமன்னர் ஆட்சி நிலவியிருந்த அந்த நாளில் அதற்கு வஞ்சிபுரி என்பதும் மிகவும் பொருத்தமே. சோழர்கள் ஆட்சி நிலவிய போது இதற்குத் தில்லைபுரி அல்லது தென்புலியூர் என்ற பெயரும் எய்துவதும் பொருத்தமே. அதன் பின்னர் வந்த கொங்கு வேளிர்கள் ஆட்சிக் காலத்தில், நக்ஷத்திரபுரி என்னும் பொருளில், தாரகாபுரி என்று பெயர் எய்திற்றென்க. உடுப்பதி; சந்திரபுரி; சூர்யபுரி என்றெல்லாம் தமது தலை நகருக்குப் பெயர் வைக்கும் அவர்கள், இவ்வணி நகரை, தாரகாபுரி என்றழைத்ததும், அழைப்பதும் தவறுடையதா என்

பதை ஆராய்தல் வேண்டும். ஆகவே தாராபுரி என்ற பெயர் தாரகாபுரி என்பதன் திரிபினால் அமைந்த பெயரே ஆம் என்க.

இத்தாரகாபுரிக்கு தில்லைபுரி என்ற பெயர் உண்டு என்பது, அலகுமலை ஓதாளர் குறவஞ்சியால் அறியலாம். "ஆதியில் விராடபுரியாய், அதன் பிறகு வஞ்சிபுரியாய் பின்னர்த் தில்லைபுரியாய் காலப்போக்கில் தாரகாபுரி என வழங்கும் தாராபுரியில்" என அக்குறவஞ்சியடிகள் கூறுகின்றன. இத்தகைய சிறப்புப்பெயர்கள் பலப்பல எய்தியிருந்த தாராபுரியில் தில்லாபுரி அம்மன் என்றொரு தெய்வம் விளங்குகின்றது. சேர மன்னர்களும், பாண்டிய மன்னர்களும், சோழ மன்னர்களும் ஆட்சி புரிந்த இவ்வணி நகரில் இவ்வம்மை சிறப்பியல் புகள் மிகவும் பெற்று விளங்கி இருந்தனள் ஆவள். இவ்வம்மையின் ஆலயம், விராடபுரிக் கோட்டையின் வடபாகத்தில் தற்பொழுது வயல்களுக்கு மத்தியில் காட்சி யளிக்கின்றது. ஆன்பொருனை நதிக்கரையில் அமைந்த இவ்வம்மையின் அருளை இப்பகுதியினர் மிகவும் வியந்து போற்றுகின்றனர். ஆண்டு தோறும் நிகழும் விழா மிகவும் சிறப்புறப் போற்றப் படுகின்றன.

## காணியாளர்.

இப்பதியையும், இவ்வாலயத்தையும், பண்டு தொட்டு இன்று வரையிலும் போற்றிவரும் காணியாளர் சிலர் இருக்கின்றனர். அவர்கள் தான் இந்த அணி நகரின் தலை மக்களாக இன்றும் சிறப்பிக்கப் பெறுகின்றனர். இவர்களைச் சேரகுல வேளிர்கள் என்று கூறுகின்றனர். இவர்கள் தாம், இவ்வம்மையின் ஆலயத்து முற்பாடும், முதல் மரியாதையும் பெற்று வருகின்றனர்.

## காங்கேய நாடு.

### காங்கேயச் செல்வி.

காங்கேய நாடு என்பது கொங்கு நாட்டில் மிகப் புராதனமான நாடாகக் கருதப்படும் நாட்டில் ஒன்று. பண்டைக் காலத்தில், இது முத்தூருக் கோட்டத்தில் அமைந்திருந்தது. இதனைச் சங்க இலக்கியம் தொன் முதிர்வேளிர் முத்தூருக்

கோட்டம் ஒன்று கூறுவதாயிற்று. கங்கைகுல வேளிர்களின் சிறப்பியல் யாவும் ஒரு சேரப் பெற்ற நாடு காங்கேயர் நாடு. கங்கையின் புதல்வனாக முருகவேள் காங்கேயன் என்ற சிறப்பியல் பெற்றது போல், கங்கைகுல வேளிர்களும் காங்கேயர் என்று சிறப்பியல் பெற்றார்கள். சீயகங்கன் என்னும் கங்கை குல மன்னவன் முன்னோர்கள் காலந்தொட்டு இப்பதி இப்பெயரால் அழைக்கும் பேற்றைப் பெற்று வந்துள்ளது. சீயகங்கன் ஆண்ட காலத்தில், இப்பதி சிங்கை என்ற பெயரையும் பெறுவதாயிற்று. காங்கேயர்கள் தலை நகராயிருந்த காரணத்தால் இப்பதி காங்கேயம் என்ற பெயரையும் அடைந்தது. இவ்வணி நகரில் ஒரு செல்வி சிறப்புடன் திகழ்கின்றாள். இப் பத்தினி தேவியை ஈங்குள்ள பண்டைய மக்கள் அம்மை என்ற பெயரில் ஆயி என்று அழைத்து வந்தனர். அது முதல் ஆயி அம்மை என்ற பெயரே நிலைபெறுவதாயிற்று.

## ஆயி அம்மன்.

காங்கேயச் செல்வியாக விளங்கும் இச்செல்வியை இங்கு வாழ்ந்த மக்கள், அம்மை என்ற பெயரில், ஆயி என்று அழைத்தார்கள். ஆதல் பற்றி, இச்செல்வி ஆயி அம்மன் என்று பெயர் பெற்றார் என்பதை அறிந்தோம். இவ்வம்மன், பண்டை நாளில், அம்மை நோய், கண்ணோய், முதலிய நோய்களைத் தீர்க்குந் தெய்வமாகவும், எண்ணியோர் எண்ணங்களை ஈடேற்றி வைக்கும் அன்னையாகவும் இருந்தாள்; ஆதல் கொண்டு, இவ்வாயி அம்மையை இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருவரும், அன்னையினும் கருணையுடைய தெய்வமெனப் போற்றி வழி பட்டு வந்தார்கள்: கண்ணினும் சிறந்த நிலையில் இம்மம்மை நிலை பெற்ற ஆலயத்தைப் பாதுகாத்து வந்தார்கள். இந்த நாட்டவர் திரண்டு செய்யும் விழா அக்காலத்துக் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்ததென்பது இன்றும் பேசப் பெறுகின்றது. இவ்வம்மையை அக்காலத்தவர் பகவதி என்றும் போற்றினார்கள்.

## காணியாளர்கள்.

இந்த நகரையும், இவ்வம்மையின் ஆலயத்தையும் புரக்குங்காணியாளர் பற்பலர் ஆவர். அவராவார்: பெருங்குடி

வேளிர்; செங்கண்ணர்; தூறர்; பதுமன்; வாணி; சாத்தந்தையர்; பதறி முதலியோர் ஆவர். இதனையே இந்நகரக் காணிப் பாடலும் வற்புறுத்துவதாம்.

> "பெருங்குடி வேந்தன் செங்கண்ணன் தூறன் நற்பேர் பதுமன்
> விரும்பிய வாணி சாத்தந்தை பதரி விரை குடிலூர்
> அரும்பணி நாதர் அகத்தீசரும் அகிலாண்டவனும்
> கருங்குழல் மாது பகவதி வாழ்கின்ற காங்கயமே"

இப்பாடலில் மேலே கூறப்பெற்ற காணியாளர்கள் குறிக்கப்படும் நிலை காணப்படுகின்றது. இக்காணியாளர்களுள், முதலனுகக் குறிக்கப்படுபவன் பெருங்குடி வேளிர் ஆவர்.

## பெருங்குடி வேளிர்

பெருங்குடி வேளிர் என்ற கூட்டத்தார் கொங்குவேளிர்களில் முன்னொரு காலத்தில் தலைமை சான்ற நிலையில் உயர்த்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் கொங்கு நாட்டில் பல பாகங்களிலும், அரசு செலுத்தியிருந்தனர். இவர்கள் யாவரும் சோழ பரம்பரையைச் சார்ந்தவர். சேர அரச குடும்பங்களில் சம்பந்தம் உடையவர். இவர்கள் தலை நகரங்களும் அரசியல் பூமியும், பல வள நாடுகளிலும், பல இடங்களிலும் இருந்தன என்பது கொங்கு நாட்டில் பேசப்படுகின்றன. இவர்களில் ஒரு பெருமகன், சோழன் என்ற பெயருடன், கொடுமணல் நாட்டில் வாழ்ந்து வந்தனன்; இவனது குமாரியைச் சேரவரசன் ஒருவன் மணந்தனன். தனது மருமகனது உதவி கொண்டு, இப்பெருங்குடி வேளிர் பெருமகன், காங்கேயம் என்ற பகுதியில், அகிலாண்டபுரம் என்ற பகுதியில் வந்து வாழ்ந்தனன். இவனுக்குப் பின் இவனது குமாரன், பட்டம் எய்தி அரசாள வந்த சமயம் இவனது தாயத்தார் பலரும் இவனது ஆணையைக் கேளாது எதிர்த்தார்கள் என்றும் இவ்வமயம் சேரவரசன் வந்து, அவர்களை வென்று, அகிலாண்டபுரம் என்ற பதியில் இளவரசனை ஆளவைத்தான் என்றும், அந்த நாள் முதல் இவன் 'பேரரசனுய்ப் பலரையும் வென்று, பல இடத்திலும் தனது அரசியலைப் பரப்பி வாழ்ந்தான்'

என்றும், இக்குலவேளிர்கள் தங்கள் பழம் பெருமையைப் பேசுகின்றார்கள். இதனை நினைக்கும் போது, சங்க இலக்கியங்களுள் சிலப்பதிகாரத்தில் வருகின்ற சில குறிப்புகள் ஞாபகத்துக்கு வருகின்றன. "சோழன் மணக்கிள்ளி யீன்றமகன்" என்று சேரன் செங்குட்டுவன் குறிக்கப்படுகின்றான். "மைத்துனவளவன் கிள்ளியொடு பொருந்தா ஒத்தபண்பினர் ஒன்பது மன்னர்; இளவரசு பொறார்; ஏவல் கேளார்; வளநாடழிக்கும் மாண்பினர் ஆதலின்"

ஒரு வழிப்படுத்தோய் என்று செங்குட்டுவனைக் குறிப்பதும் ஆராயும் போது, செங்குட்டுவ மன்னனின் மைத்துனன் கிள்ளிவளவன் இவனாகலாம் என்ற ஐயமும் தோன்றுவதாகின்றது.

யாதாயினும் ஆகுக; இவன் ஒரு சோழ மன்னன் என்பதற்குப் பல ஆதாரங்கள் இந்த நாட்டில் இருக்கின்றன. இந்த மன்னன் பரம்பரையாரில், இவனோ, அன்றி வேறொரு சோழ மன்னனோ, இந்த அம்மையின் ஆலயத்தை நிறுமித்துப் போற்றியிருத்தல் வேண்டும். ஆதல் பற்றி, பெருங்குடி வேளிராம் இவர்க்கு இந்த நாட்டிலும், இந்த அம்மையின் ஆலயத்தும் பிற இடத்தும், முதல் மரியாதை வழங்கப்படுகின்றது. நிற்க: இவர் பரம்பரையாரில், குன்றுடையான் என்ற பெருமகன், ஒருவன் வாழ்ந்து வந்தனன். அவனுக்குப் பொன்னன், இளம் பொன்னன் என்ற இரு குமாரர்கள் உண்டு; இவர்களுக்கு ஒரு தங்கையிருந்தாள். இவர்கள், ஆறுடு, கோனுடு, பொன்னி வளநாடு என்ற நாட்டின் கண் தலைமை சான்ற அரசு புரிந்து வந்தனர்; இவரரசு பொறாத பாண்டியன் புத்திர வர்க்கத்தார், இவரது நாட்டில், தமது பன்றிகளை விட்டுப் பயிர்களை அழித்த காரணத்தால், அவர்களுடன் இவர்களுக்குப் பெரும் போர் நிகழ்ந்த தென்பதும், இப்பெருங்குடியாரின் பூர்வீக சரிதமாகப் பேசப்படுகின்றது. அன்றியும், இவர்கள் தங்கை வளர்த்து வந்த கிளியை, சண்டன் என்ற வேட்டுவ அரசன் ஒருவன் கவர்ந்து சென்றனன். அக்கிளியின் மீட்சியின் காரணமாக, அவனுடன் வழக்குப் பேசி, கள்ள முறையில் கிளியைக் கவருதல் தக்கதன்றென்று எடுத்துக் கூற அவன் கேளாததால், அவனுடன் பொருது வென்று, அவனது பதியுடன்,

நாட்டையுங் கவர்ந்து இவன் பேரரசனும் காங்கேயப் பகுதியில் முடி சூடி அரசு புரிந்து வந்தனன் என்ற வரலாறும் கொங்கு நாட்டின் புராதன சரிதப் பாடல்களில் காண்பதும் கேட்பதும் ஆகும். இச்சரிதம், கலிங்கத்துப் பரணியில் கண்ட சோழ பாரம்பரியத்தை நினைவு கூரச் செய்கின்றது. அது, "கால னுக்கிது வழக்கென உரைத்த அவனும்" என்பது. அடியில் குறிக்கப்படும் சரிதமும் இப்பரம்பரையார் சரிதமும் ஒத்திருத் தல் கலிங்கத்துப் பரணியின் குறிப்பு நோக்கி அறிக. ஆகவே இப்பெருங்குடி வேளிர்கள், பரம்பரை பரம்பரையாகச் சோழர் குடியில் தோன்றியவர் என்பதும்; இவர்கள் வீரமக் களாக விளங்கியிருந்த செய்தியும் இவர் தம் பரம்பரையாரே பாண்டிய பரம்பரையாரை வென்று ஆறுடு என்று கூறத் தகும் காங்கேய நாட்டில் குடி புகுந்து ஆண்ட அரசர்கள் என்பது மாத்திரம் தெளிவாகத் தெரிந்த தொன்று.

## செங்கண்ணர்.

காங்கேய நாட்டிலும், பிற ஆலயத்தும், இரண்டாவது காணியாளராக, செங்கண்ணர் என்ற வேளிர் கூட்டத்தார் குறிக்கப் படுகின்றனர். இவர்கள், செங்கண்ணன் என்னும் சோழ அரசனின் பரம்பரையினர் ஆவர். இவர்கள் முன்னோ ஞன செங்கண்ணனே, இந்த நாட்டில் தனது அரசை நிலை பெறுத்தினன் ஆவன். இவன் காலத்தில், இந்த அம்மையின் பெருமை மிகவும் சிறந்த நிலையில் இருந்த தாகும் இம்மன்னன், சிவ வழிபாட்டில் சிறந்தவன். தனது அரசியல் நிலத்தில், சிவ பெருமானுக்கு எழுபது மாடங்கள் எடுத்து வாழ்ந்தனன் இவனது தலை நகரங்களுள், சிறந்த தொன்ருக விளங்கும் மற் ரெரு நகரம் குடவாயில் என்பது. குடவாயில் என்பது, காங் கேய நகரத்துக்குப் பன்னிரண்டு கல் தொலைவில் உள்ளது. இங்கு நாகேசுர சாமி என்ற சிவபெருமானுக்கு ஒரு ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தைப் பற்றிய வரலாற்றில் இச்செங் கண்ணன் சிறப்பியல் பெரிதும் போற்றப் படுகின்றது. குட வாயில் நகரத்துக்குப் பத்துக் கல் தொலைவில் இலவந்திப்பதி என்றதொரு நகரம் இருந்து வந்தது; இருக்கின்றது. இப்பதி யில் கணையன், அல்லது, கணைக்கால் இரும்பொறை என்ற சேரமன்னன் அரசு புரிந்து வந்தனன். இம்மன்னனுக்கும்

சோழ மன்னனுக்கும் பல காலமாகப் பகைமை வளர்ந்து வர லாயிற்று. இப்பகைமை காரணமாகச் சோழன் செங்கண்ண னுக்கும், சேரன் கணைக்கால் இரும்பொறைக்கும், திருப்போர்ப் புரத்து, (திருப்பூருக்குப் பக்கத்தில்) திருப்பறம் பயத்து, திருப்பரமன் ஊற்று என்னும் இடத்தில் போர் ஒன்று நிகழ்ந் தது. இப்போரில், கணைக்கால் இரும் பொறை என்ற சேர மன்னன் தோற்றனன். போரில் தோற்ற இம்மன்னனைச் சோழன் செங்கண்ணுன் என்பவன் பிடித்து வந்து, குடவாயில் என்ற இடத்தில் சிறை வைத்தான். இச்சிறையிலிருந்து இச் சேர மன்னன், தனது புலவர் ஒருவரால் சிறை மீட்கப்பட் டான் என்ற வரலாறு ஈங்கு நிகழ்ந்ததேயாகும். இச்செய்தி யைப் புறநானூறும் போற்றியுரைக்கின்றது.

அது, "திருப்போர்ப் புறத்துத் திருப்பயம்பத்து, நிகழ்ந்த போரில் பிடிபட்ட கணைக்கால் இரும்பொறை, குடவாயிற் கோட்டத்துச் சிறையிருந்து தண்ணீர் தருகவென்று கேட்டுப் பெருது பின் பெற்று உண்ணுன் துஞ்சிய பாட்டு" என்ப தாகும். அன்றியும் கலிங்கத்துப் பரணியும் இச்சரிதத்தையே குறித்துப் போகின்றது. அது, "கனவழிக் கவிதை பொய்கை உரை செய்ய உதியன் நால்வழித் தாளையை வெட்டியரச சிட்ட வனும்" என்ற பாடலாகும். இச்சரிதம் நிகழ்ந்த இடம் இது தான். இதனை அறியாத சிலர், திருப்பறம் என்பதை, தஞ்சை நாட்டில் உள்ளதோர் நகராகவும், குடவாயில் என் பதனை, குடவாசல் என்பதாகவும் குறித்துப் போயினர். திருப் பூர்ப்புறத்துக்கு என் செய்வரோ அறியோம்.

இச்சரித நிகழ்ச்சிக்கு ஆதாரமாக இருந்த சோழன் செங் கண்ணுனின் பரம்பரையாரே இங்குக் குறிப்பிடப்படும் செங் கண்ணர் ஆவர். குடவாயில் நகரத்தைப்பண்டு ஓதாளர் என்னும் வேளிர்கள் கைப்பற்றிய பின்னர், இவர் அகிலாண்ட புரம் என்னும் அணி நகரில் நிலைபெற்றவர் ஆவர். செங்கண் ணுன் கோட்டையொன்று அகிலாண்டபுரத்தில் இருந்து வரு வதும், செங்கண்ணுன் பரம்பரையார், இன்னும் பட்டவர்த் தனமாய் காங்கேயர் பதியில் தலைமை பெற்று விளங்குவதும் காணத் தகுந்ததோர் சான்ருக அமையும். அன்றியும், காங்

கேயப் பட்டவர்த்தனராயுள்ளவர்கள் கிள்ளி என்ற பட்ட முடன், பல்லவராயர் என்ற பட்டத்தையும் தரித்து, நூறு வருடங்களுக்கு முன் வரையிலும், குற்றம் செய்தாரைத் தலை வாங்கும் உரிமையுடன் வாழ்ந்து வந்த பெருமையும் அறி வார்க்கு செங்கண்ணார் என்னும் இவ்வேளிர் கூட்டத்தாரது பெருமையை நன்கு அறிய இயலும். காங்கேயத்திற்கு அருகில் உள்ள அகிலாண்டபுரத்துள்ள சிவாலயத்துச் சரிதமும் பிறவும் அறிந்தார், இச்செங்கண்ணார் கூட்டத்தாரை, செங் கண்ணன் பரம்பரையாரே என்று கூறுவர்: இவருக்கு ஈங் குள்ள ஆயி அம்மன் ஆலயத்தும், சிவாலயத்தும்; ஏதைமலை என்னும் சிவன் மலை முருகர் ஆலயத்தும் இரண்டாவது முதன்மை தரப்படுகின்றது.

சேர மன்னனுக்கு உதவிய பெருமை, தூறன் என்ற வேளிர் பெருமகனுக்கே அமைந்த தாகும். இச்சரிதங்கள் யாவும் மாந்தரன் மெய்க்கீர்த்தியே யாகும். இச்சரிதங்கள் பழைய ஏட்டுச் சுவடியில் புதுப்பைப் புலவர் வீட்டு ஏட்டுச் சுவடியில் எழுதப்பட்டுள்ளன. இப்பாகத்நூல் இங்கு வேண்டிய மட்டும் எழுதுவது போதும் என அதை மாத்திரம் ஈங்கு வரைகின் றேன், அது,

குடமலையும் வடமலையும் குணமலையும் பிறவாய
　　தடமலைகள் ஆளுநலந் தருசேரல் முன்வந்து
அத்தூதன் மொழிகின்றான் ஆன்றமைந்த மிகுகேள்வி
　　கொத்துமுடியோன் நின்பால் குணம் அடைய விடவந்த
தூதனிவன் வந்தனெனச் சொலு முறையும் உண்டென்ன
　　மாந்தரனும் கோபித்து வருவயணங் கூறென்ன
கல் தோன்றி மண் தோன்றாக் காலமுதலா நாங்கள்
　　மல் வலயத் தோள் கொண்டு மாவலியர் எனவிருந்து
காவலாய்க் கொங்கர்களாய்க் கமழரசு புரிநாட்டில்
　　தாவளஞ்சேர் மன்னனுனைத் தனியரசாய்ச் செய்ததலால்
கொங்கன் என எம் நாமம் கொடுத்தும் உனை மகிழ்வித்து
　　எங்களது புயவலியால் எண்டிசையும் வென்றளித்து
மந்திரராய்ச் சேனைதனை வகை பெறவே நடந்திடுசீர்த்
　　தந்திரராய் இருந்த எமைத் தான் மதியா திதுநாளில்
வடக்கிருந்து வந்தவரை மதித்தவரை மந்திரராய்
　　தடக்கிரி சூழ் உலகமதில் தனிக்காணி தந்தளித்தல்

எங்கள் குலத் தவர் தமக்கு இழிவாகும் ஆதலினல்
பொங்கும் இதைப் போக்கவரு போர்க் கெதிராய் போர் புரிக
கொங்கன் எனும் பேர் எமரைக் கொன்று பினர்ந்தரிக்க வெனக்
கொத்து முடியோன் வார்த்தை குவலய பூபதி செவியில்
மெத்து திறலுடன் விழ வெதுண்டமரில் பார்ப்பனை
தூதுவலைப் போக்கி வருதூறர் எனும் மந்திரரை
ஏதுவுடன் மிகப்பார்த்து எழுந்தவரோ டமர்புரிய
தமக்குபகாரம் புரியத் தலையளிசெய் யறுவரையும்
மனக்கினிய முறமையினில் வருவிக் குமாறியம்பி
ஏறைமலை அருகாக இருக்குமொரு செங்களத்தில்
கொங்கன் எதிர் அமர்புரியக் கொண்டனன் நற்படை நாட் கோள்

இம் மெய்க் கீர்த்தியில் சேரலன் போர் குறிக்கப்படுகின்றது. இப்போரில் துணையாயிருந்தவன் தூறன் என்ற மந்திரக் கிழவன் பெயர் காணப்படுகின்றது. இப்போருக்குப் பிறகு தான், சேரமன்னர்கள் முன்னேற்றமும், கொங்கு வேளிர்தம் ஆட்சியும் கொங்கில் நிலை பெறுவதாயிற்று. இப்போர் நிகழ்ந்த காலம், சேரன் செங்குட்டுவ மன்னன் காலத்திற்கு முன்னர் என்று எண்ண இடமும் உண்டு. ஏன் எனில், இம்மாந்தரஞ் சேரல், சிலப்பதிகாரத்து கதை நிகழ்ச்சிக்கு முன் வந்த சரிதம் எனச் சிலப்பதிகாரத்தில், பராசரன்; கதையின் வாயிலால் தெரிகின்றது. ஆதலால் இம்மன்னன் செங்குட்டுவன் காலத்திற்குச் சற்று முந்தியவனே. இச்சரிதம் புறநானூற்றாலும் குறிக்கப் படுகின்றது. அது. தலையாலங் கானத்துப் போர் வென்ற பாண்டியன் நெடுஞ் செழியனால் பிணியுண்ட யானைக் கண் சேய் மாந்தரன் வலிதிற் போய்க் கட்டிலேறினனைக் குறுங் கோழியூர்க் கிழார் பாடியது என்ற பாடல். இப்பாடலில் கூறப்படுபவன் இம்மாந்தரனின் மைந்தனான சேய்மாந்தரனே யாவான். இது, அவனது பிற்றை நாளில் நிகழ்ந்த தெனக் கொங்கு நாட்டுச் சரிதம் கூறுகின்றது. இஃது யாதாயினும் ஆக. இத் தூறன் பரம்பரையாரே இங்கு நம் செல்வியைப் போற்றிய காணியாளர் ஆவார் என்பதை நன்கு அறிந்து கொள்ளுக.

## பதுமன்.

காங்கேய நாடு என்னும் இந்த நாட்டிலும் செல்வியின் ஆலயத்தும், சிவாலயத்தும் பதுமன் என்னும் குல திலகருக்கு நான்காவது பெருமையும் மதிப்பும் இருந்து வருகிறது. இவர்கள் தற்பொழுது இந்த நாட்டில் எங்ஙனும் இல்லை. இருந்ததற்கு அறிகுறியாக மரியாதைக்குரிய பொருள்களை வழங்கும் போது கூப்பிடுதல் மாத்திரம் இருந்து வருகிறது. இவர்கள் ஒரு காலத்தில், இந்த நாட்டைப் பிடித்து அரசுபுரிந்த கூட்டத்தினர் ஆவர் இவர், இளங்கோசர் மரபினராயிருத்தல் கூடும். தலைக்காட்டு கங்கர், என்ற கூட்டத்தார் ஒரு காலத்தில், இந்த நாட்டை ஆண்ட வரலாறு கேட்கப்படுகின்றது. இவரைக் கொங்கு வேளிர் கூட்டத்தார் வென்று துரத்திய செய்தியும் தெரிய வருகின்றது. அன்றியும், இளங்கோசர் மரபினருள் சிலரின் "பதுமன்" என்ற பெயரிட்டு வழங்கி வந்தனர் என்ற செய்தி காணக்கிடக்கின்றது. கேட்கவும் படுகின்றது. இளங்கோசர்மரபார் தற்பொழுது வாழும் இடங்களின் பெயர்கள் இதுவாயிருத்தலும் இதற்குச் சான்ருக அமையும்.

## வாணர்.

இந்த கூட்டத்தாருக்கு இங்கு ஐந்தாவது மரியாதையுண்டு. இவர்கள் தற்பொழுது இந்த நாட்டில் இல்லை. ஆயினும், மரியாதை யிவருக்கு வழங்குதற்கு விழாக் காலங்களில் இம்மரபாரை அழைக்கும் பழக்கம் இருந்து வருகிறது. இவர்கள் ஏகம்பவாணனின் பரம்பரையார் என்று கூறுகின்ருர்கள். ஏகம்பவாணன் என்னும் அரசன், இந்த நாட்டில் விளக்கமாக வாழ்ந்து வந்த செய்திக்கு இங்கு ஆதாரங்களும், கர்ண பரம்பரை வழக்கும் நிறைய உண்டு. ஏகம்பவாணன் என்பவன், சேர, சோழ பாண்டியன் என்ற பெருமன்னர் மூவரையும் வென்று, தனியரசு செலுத்தினன். அவன் அரண்மனையின் எதிரில், பல அரசர்கள் அவனது காட்சிக்காகக் காத்திருப்பார்கள்; அவனது வாயிலின் முன் பல அரசர்களும், அரசர்கள் பலரைச் சுமந்த யானைகள் பல நிற்கும் என்பதும் பழைய பாடல் ஒன்றினல் அறியப் படுகின்றன. இவனது நகரை, ஆறை என்று அப்பாடல் கூறுகின்றது. அப்பாடல் கம்பரது பாடல் என்றும் சொல்லப்படுகிறது. அப்பாடலாவது:

தேருனைப் புரவி வாரணத் தொகுதி
திரை கொணர்ந்து வரும் மன்ன நின்
தேசமேது புகல் நாமமேது புகல்
செங்கை யாழ் தடவு பாண கேள்!
வாரும் ஒத்த குடி நீரும் நாமும் மக
தேவன் ஆரை நகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந் தளிக்க வெகு
வரிசை பெற்றுவரு புலவன் யான்
நீரும் இப்பரிசு பெற்று மீள வர
லாகும் ஏகுமவன் முன்றில் வாய்
நித்திலச் சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரு நிற்கும் உயர் வேம்பு நிற்கும் வரை
பனையும் நிற்கும் அதன் அருகிலே
அரசு நிற்கும் அரசைச் சுமந்த பல
அத்தி நிற்கும் அடையாளமோ!

இதுவாகும், இப்பாடலுள் மேலே கூறப்பெற்ற செய்திகள் விளங்குகின்றன. இப்பாடல் கம்பாது பாடலாயின் இவன் காலத்தில் ஏகம்பவாணன் வாழ்ந்தவன் ஆதல் வேண்டும். ஆகவே இங்குக் குறிப்பிடும் வாணர் பரம்பரையார், இவனது பரம்பரையாரே ஆதல் திண்ணம்.

## சாத்தந்தையர்,

காங்கேயச் செல்வியின் ஆலயத்தும், சிவாலயத்தும், இந்த நாட்டிலும் இவர்கள் ஏழாவது காணியாளராகப் போற்றப் படுகின்றனர். சாத்தந்தையர் என்பவர், கொங்குவேளிர் கூட்டத்தைச் சார்ந்தவர். இவரே கொங்குச் சோழர் என்று கூறும் சிறப்புக்கும் உரியவர். இவர் குலோத்துங்கச் சோழன் காலத்து அவன் பகுதி அரசராகப் பல இடங்களிலும், அரசு புரிந்து வந்தவர். இவரைக் கொய்சனர், அல்லது கோசலர் என்றும் அழைப்பார்கள். இக்கூட்டத்தவர், இருங்கோவேள் என்னும் மன்னவன் பரம்பரையினர் ஆவர். இவரே ஒரு காலத்தில் கி. பி. 500 ஆண்டுகளுக்கு முன், கொங்குவேளிருள் தலைமை வகித்து வந்தவர் ஆவர். இவருக்குக் கொங்கு நாட்டில் பல ஊர்களில் காணியுண்டு. அவற்றின் விரிவைக் கொங்கு வேளிர் என்ற நூலில் காண்க.

சாத்தந்தையர் இருங்கோவேள் அல்லது புலிகடிமால் என்ற வேளிர் பெருமகளின் சந்ததியார், என்பதனை, இவரின் புலியைக் குத்திய அடையாளச் சின்னத்தைக் கொண்டும் அறியலாம். இவர்களின் முன்னோரில் ஒருவன் உடுப்பதி (சசகபுரி) என்னும் நகரில் வாழ்ந்துவந்த சமயம் அரய மலையாம், தனது மலையின் பக்கத்து வேட்டையாடச் சென்றனன். ஆங்கு புலி ஒன்று, முனிவர் மீது பாய ஆரம்பித்தது. அவ்வமயம் இவனது வருகையைக் கண்ட முனிவர், இவனைப் பார்த்துக் கொய்சள என்றார்; இவன் புலியை வேலால் குத்திக் கொன்றனன். அது முதல் இவனுக்குப் புலிகடிமால் என்ற பெயர் எய்திற்று என்பர். இச்சாத்தந்தையர் வாழ்கின்ற இடங்களில் எல்லாம் புலியை வீரன் ஒருவன் குத்தியபாவனையில் செய்யப்பட்ட கல் ஒன்று, சிவாலயத்தும், இவர் வழிபாட்டுக்குரிய இடங்களிலும் இருக்கும்.

அல்லையூர் என்ற இடத்தில் உள்ள சிவாலயத்தும், ஊற்றுக் குழியின் கண் உள்ள சிவாலயத்தும் இப்புலிகடிமால் சிலையை யானே நேரில் கண்டேன். இவ்விரண்டிடத்தும், சாத்தந்தையரே தலைமக்களாக விளங்குகின்றனர். குடவாயில் நகரில் கோட்டை மேட்டின் கீழ்பால் இப் புலிகடிமால் சிலை இன்றுங் காண்போர்கள் கண்ணையும், மனதையும் கவரும் நிலையில் இருக்கின்றது. இந்த இடமும் பண்டு இவரது காணியாக இருந்ததற்கு ஆதாரம் பெரிதும் உண்டு. சாத்தந்தையர் பரம்பரையாரில் “உலகுடையார்” என்ற பட்டத்துடன், வெண்கோழியூர் என்று பண்டை நாளில் அழைக்கப்பட்ட வெள்ளோடைப் பதியில் இன்றும் காணியாளர் பலர் வாழ்ந்து வருகின்றனர். இப்பதியை வெள்ளுறந்தை யென்று புலவர் பலர் பாடிய பாடல்கள் இன்னும் விளங்குகின்றன. இவருள் தலைமை பெற்ற பெருங்குடியில் வந்த வேளிர் பெருமகன் ஒருவனே, பண்டு குலோத்துங்கச் சோழன் ஆணை தாங்கிக் கலிங்கத்தை வென்றவன் ஆவான். இவன் காலமுதல், இவன் பரம்பரையாருக்குக் கலிங்க ராயர் என்ற பெரும் பெயர் இருந்து வருகிறது. வெள்ளோடையில் வாழ்ந்த கலிங்க ராயர்களில் ஒருவன், காவிரியோடு, பவானி நதி கூடும் துறையில் அணையொன்று கட்டி, கால்வாய் ஒன்றை ஆக்கி, நாட்டுக்கு

நன்மை வரச் செய்தான். இக்கால்வாய்க்கு கலிங்கராயன் கால்வாய் என்ற பெயரும் இன்றும் வழங்குகின்றது. கலிங்க ராயன் கால்வாய் என்பது, காலப் போக்கில் காலிங்க ராயன் கால்வாய் என்று வழங்கி வருகின்றது. இக்கால்வாய் ஆரம்பமாம் அணைக்கட்டில் இப்புலிகடிமால் அடையாளம் பொறிக்கப் பட்டிருத்தலை இன்றும் காணலாம். இவற்றின் விரிவை அகத்தூர்ச் செல்வி என்ற தலைப்பிலும், கொங்கு வேளிர் என்ற நூலிலும் காண்க. ஆகவே இச்சாத்தந்தையர், புலிகடிமால் பரம்பரையினர் என்பதும் செல்வியைப் போற்றும் இறுதிப் பொறுப்பு இவர் காலத்தில் இவருக்கே சிறந்த நிலையில் அமைந்த தென்பதும் விளக்கமாம். ஆகவே இதுகாறும் கூறி வந்த திறத்தால், காங்கேயச் செல்வி அருளார்ந்த நிலையில், இவ்வெழுபெரு வேளிர் பரம்பரையாரால் இன்றும் போற்றப்படும் நிலை பெரிதும் கண்டு மகிழ்தற்குரியதாகும் மாந்தரன் சேரன் எழினி, தூறர், இருங்கோவேண்மான் முதலிய வேளிர்களை தனக்கு உறவாக ஆக்கி, தனது பூமியில், காணி, பூமி முதலியன தந்து போற்றினன். அவர்களுக்கு மந்திரி பதவி, சேனாதத் தலைமை முதலிய பதவிகளையும் நல்கினன். இவர்களும், சேர மன்னனுக்கு உற்றவிடத்து உதவும் உயிர் நண்பர் ஆனார்கள். இச்செயலை அறிந்த, கொங்கர்கள் என்னும் பாண்டிய புத்திரர், தங்களுக்கு எதிராய் தங்கள் பூமியைப்பறிக்கும் நிலையில், இவர்கள் எதிர்த்தல்கூடும் என்று எண்ணி தங்கள் கூட்டத்தாரோடு கூடி, ஆலோசித்துக் கொத்துமுடிப் பாண்டியன் என்னும் மதுமண்டிலப் பார்த்திவனுக்கு இயம்பினன். அம்மன்னன் மதுரை மாநகரப் பாண்டி மன்னனுக்கு அறிவிக்க, அனைவரும் கூடி அமர்குறித்து, சேரலனிடம் தூதனுப்பினர். சேரலன், தனது நட்பரசரோடு தலையாலுங் கானம் என்னும் பட்டாலி யிடத்தில் எதிர்த்தனன்.

சேரலன் படையும், பாண்டியர் படையும் கை கலந்தன. ஏறைமலைக் கருகாமையில் உள்ள தலையாலுங் கானம் செங்களம் ஆயிற்று பாண்டியர் படை தோற்றது. வேளிர்கள் படை வென்றது. சேரமன்னன் களந்தனதாக வெற்றி முர

சுடன் பாண்டிய புத்திரர் வாழும் பல இடங்களையும் கைப் பற்றினன்; தனது நட்பரசனுக்கு அதனைப் பகிர்ந்து தந்தான். அந்த நாள் முதல், கொங்கில், கொங்கர்என்னும் பாண்டிய புத்திரர்ஆட்சி குலைந்து, கொங்கு வேளிர் ஆட்சி நிலவுவ தாயிற்று.

மாந்தரஞ் சேரலமன்னனும், தனது வெற்றிக்கு அறிகுறி யாகக் கொங்கர்களுக்கு உரிய நடுநிலத்தில் மாந்தைபுரி என்ற நகரம் ஒன்றை அமைத்தான். அந்த நகரத்தில், ஐயனர் என்ற கடவுளரை நாட்டுராயன் என்ற பெயரால் நிறுமித்தான். மாந்தைப் பூதம் என்ற பூதம் ஒன்றையும் நிறுமித்து, வேணுடு என்ற பெயரில் நான்குவள நாடுகளை ஒருங்கு சேர்த்துத் தனது உறவுக்குரிய வேளிர்களோடு வாழ்ந்தான். இத்தகைய வாழ் வுக்குக் காரணமாய் உடனிருந்து, மந்திரக் கிழமை பூண்டு வந்தவன், இச்சாத்தந்தை கூட்டத்தில் வந்த வேளிர் பெரு மகனே யாவான்.

## பதரியர்.

சாத்தந்தை கூட்டத்தார்க்குப் பிறகு, பதரியர் என்ற கூட்டத்தார்க்கு, பண்டை நாளில் மரியாதையும் சிறப்பும் வழங்கப் பெற்றது. பதரியர்என்பவர், பண்டை நாளில், இந்நாட்டில் அரசப்பதம் பெற்று வாழ்ந்தனர் போலும். இவர்களுக்கு இந்த நாட்டிலும், இந்த நகரிலும் சிறந்த சிறப்பு இருந்து வந்தது. இவர்கள், இந்த நாட்டில் வாழ்ந்த பழங்குடி வரிசையில் வைத்து எண்ணத் தகுந்தவர்கள், குடியிற் குன்ருக் கோமக்களாக விளங்கிய இவருக்கு, அந்த நாளிலும், இந்த நாளிலும் நன்மதிப்பு, மிகுதியும் இருந்து வந்தது; வருகின்றது.

பதரியராகிய இவர்கள் தற்பொழுது, அதிகமான கூட் டத்தவராகத் தெரியவில்லை. இருக்கிருர்கள்; இருந்து வருகி ருர்கள், என்ற நிலையை யன்றிப் பெருங் கூட்டமாக இவர்கள் இந்த நாட்டில் வாழ்கின்ருர்கள் என்பதைக் கூற இயலவில்லை. பழைய நிலையில் இவருக்கு இருந்த நிலை, இன்றும் மாறவில்லை என்று மட்டும் நிச்சயமாகக் கூறி விடலாம்.

இவ்வாறு நம் செல்வியாம், ஆயி அம்மனை, ஆயி என்ற செல்வப் பெயருடன், அந்நாட்களில் இருந்த வேளிர்கள்